T. 951.

சிவமயம்.

# பிரத்தியட்சானுபூதிவிளக்கம்.

இஃது

இந்திரபீடம்

கரபாத்திரசுவாமிகளாதீனம்

[illegible]றைசை

அருணாசலசுவாமிகள்

மாணாக்கராகிய,

ஈசூர் கண்[illegible]

சச்சிதானந்தசுவாமிக ளவர்களால்

இயற்றப்பட்டு,

அவருடைய தருமபரிபாலன சபையாருத்தரவின்படி

காரியதரிசி

ப. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்களால்

சை. இரத்தினசெட்டியாரவர்களது


சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

கஅகூஎ.

(இரண்டாவது பதிப்பு.)



Registered Copy-Right.

ORIENTAL

# புத்தகவிளம்பரம்.

| | ரூ | அ. |
|---|---|---|
| பிரபுலிங்கலீலை உரையுடன் ... ... ... | 2 | 8 |
| கைவல்லிய நவநீதவிருத்தியுரை ... ... ... | 1 | 4 |
| வேதாந்த சூளாமணி விருத்தியுரை (2வது பதிப்பு அச்சில்) | 1 | 4 |
| தத்துவநிஜானுபோகசாரம் ... ... ... | 1 | 0 |
| சர்வமதசித்தாந்த விளக்கவினுவிடை ... ... | 0 | 12 |
| திருக்குதிருசிய விவேகம் உரையுடன் ... ... | 0 | 12 |
| வாசுதேவமனனம் ... ... ... ... | 0 | 14 |
| பிரத்தியட்சானுபூதிவிளக்கம் ... ... ... | 0 | 8 |
| வேதாந்த இலக்கணம் ... ... ... | 0 | 8 |
| சிவன்னபோதம் உரையுடன் ... ... ... | 0 | 8 |
| தசகாரியமகாவாக்கியம் உரையுடன் (2வதுபதிப்பு பிரஸில்) | 0 | 8 |
| ஜீவகாருண்ய விளக்கம், சுவானுபூதிவிளக்கம்... ... | 0 | 6 |
| சொரூபசாரம் உரையுடன் ... ... ... | 0 | 6 |
| சத்தப்பிரகரணம் ... ... ... ... | 0 | 6 |
| உபநிடத விருத்தியுரை ... ... ... ... | 0 | 5 |
| எதார்த்தவாதம் ... ... ... ... | 0 | 4 |
| உத்தமவாதம் ... ... ... ... | 0 | 8 |
| ஞானவாசிட்டத்திரட்டு ... ... ... ... | 0 | 3 |
| சுகர் கைவல்லியம் ... ... ... ... | 0 | 2 |

விற்கிறவர்
ப. முத்துகிருஷ்ணரெட்டியார்,
6, ஜெனரல் காலின்ஸ்ரோட்டு,
வேப்பேரி, சென்னை.

வெளிநாட்டார் V. P. Post மூலமாயிவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சென்னை
ஜூலைமீ
1897வு

(ஈசூர்-சச்சிதாநந்தசுவாமிகள் தருமபரிபாலன சபையார் உத்திரவின்படி)
ப. முத்துகிருஷ்ணரெட்டியார்,
காரியதரிசி.

## சாத்துக்கவிகள்.

### இராமாநுஜயதீசுவரரவர்கள் இயற்றியது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

சென்னைச் சருவகலாசாலைத் தமிழ்த்தலைமைப்புலவர்

கோமளபுரம் - இராசகோபாலபிள்ளையவர்க ளியற்றியது.

### எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

குலந்தருமீசூர்க்கணக்குடைக்கோமான்குமதிகளுக்கொருசீயஞ் [ம்
சலந்தருபொய்ம்மைச்சமயவெங்கானைத்தடிந்துகூர்தணப்பிலா நவிய
நலந்தருசச்சிதாநந்தநாமஞனிலநவிரொரீஇயுய்வான்
புலந்தருபிரத்தியட்சாநுபூதிப்போக்கறுநூல்புகன்றனனே.

திருமூலர்மரபில் வந்த சதாசிவப்பிர்ம்மயோகீசர்மாணுக்கர்

தே. சுப்பராயமுதலியாரியற்றியது.

கடல்சூழுலகிற் கதிதேடியிர்கட் - கடையஞ்ஞான மகன்றினி
துய்யச் - சங்கராசாரிய சுவாமிகளருளால் இங்கிதமாக வியற்றுநால்
பீடத் - திந்திரபீடத்திலகியமரபினுள் - வந்திடுகருணைவாரிதியாகு -
மையன்கரபாத்திரனடியமர்ந்த - செய்யன் ஒதத்தாத்திரயதேசிகன்
ருள் - போற்றுமுத்தையன் புகழடிசிரமேல் - ஏற்றுசிவசுப்ரமண்ய

னிளையடி - யருளிளையடைந்த வண்ணல் நாகைவாழ்-அருணைசலேச னருஞ்சரண்பணியும் - உத்தமன்பிறைசை யுதித்திடுநாதன் - சித்த மாசகலத்திகழருணைசல - நாயகனடிக்கே நாடுநற்றவத்தோன் தூய வேதாகம நிலைதனில் தோய்ந்து - நித்தியவநித்திய நிச்சயமெல்லாம்- புத்தியிலுறையப் புகன்றிடும்புனிதன்-உலகுயிர்பரமென் றுரைத்திடு மூன்றின் நிலையுணர்ந்தொன்றென நிலை பெறவெவர்க்கும் - ஞாய முன்னிட்டு நாட்டிடுஞ் சோதனை - ஞேயமுடனே நிகழ்த்திடுநிமலன் மாறுதஞானமார்க்கமே பவத்தை - நீறாக்கிடுமென நிகழ்த்திடு சூர வன் இல்லறநிலைவழா திருந்துலகுயிர்களை - நல்லறவழியில் நடத்தி டும் புனிதன் - காரணமன்றிக் காரியமிலையெனப் - பூரணமாகப் புக ன்றிடு புண்ணியன் - நித்தியதிருத்தி நீசனேனடையச் - சத்தியமா கச் சாற்றிய திறத்தோன் - பஞ்சலட்சணப் பகுப்பெலாமோர்ந்து - மிஞ்சுகல்வியில் மிகுத்திடுமேலோன்-அல்லும்பகலு மறிவேவடிவா - சொல்லும்பொருளே சுகவடிவானேன் - மத்திமதுவிதமார்க்க மகல- அத்துவிதவுண்மை யருள்செயுமையன் - அருளேவடிவா யவதரித் துலகில் - குருபரனெனக் குளவிசெய் புழுப்போற்-சரணடை தொண் டர்தஞ் சஞ்சலமிரியச் - சிரவணமனனஞ் சிறந்திடச்செய்து-பரநிலை யுரைத்துப் பரமாக்கிடுவோன் - திரமுறுஞான சிகாமணியாகும் - சச் சிதானந்த சற்குருவென்னும் - உச்சிதனெவர்க்கு முரியவருகந்து - ஒதருபிரத்தியட்சானுபூதி யெனும் ஏதம தறுநூலியற்றினன்றானே.

இந்நூலாசிரியர் மாணாக்கர்

அ. முனிசாமிநாயகராலியற்றியது.

## நேரிசைவெண்பா.

அட்சிக் கயல்கா ணனைத்துமட்சி யாக்கிசுகக்
கட்சியிஃதென்றெவர்க்குங் காட்டுபிரத் - யட்சானு
பூதி விளக்கம் புகன்றா னிருமீசுர்
நீதிசச்சி தாநந்த னின்று.

திருச்சிற்றம்பலம்.

# பிரத்தியட்சாநுபூதிவிளக்கம்.

### காப்பு.

சுயஞ்சோதி யன்றியொன்றுஞ் சோதித்துங் காணேன்
சுயஞ்சோதி தானே துணை.

### கட்டளைக்கலித்துறை.

சிதம்பர மன்றி யரியர னென்னல் சிறிதுமில்லை
சிதம்பர மென்னுந் தலத்தி லறிகுறி செய்வதெவன்
சிதம்பர நம்முள மென்னத் தெரிக்கத் தெரிகிலிர்கொல்
சிதம்பர மேபர தெய்வம் பிறிதில்லை தேர்ந்துய்ம்மினே.

## மனோவமைதிமார்க்கம்.

உலகந் தனையறி யாரெங்கு மில்லை யுதித்தபினர்
உலகந் தனைநுக ராரெங்கு மில்லை யுவந்துவந்து
உலகந் தனையன்றிக் கண்டா ரில்லையொன்று மோதிகலை
உலகந் தனையின்னு மோதுவன் காண்மய லோடிடவே. (௧)

காலம் பொருளிட மேமய மாமுல கத்தியல்பு
காலம் பொருளிட மன்றி யுலகினைக் காட்டறியோம்
காலம் பொருளிட மெய்ம்மை யறிந்தவர் கண்டறிந்தார்
காலம் பொருளிடத் தன்மை மயக்கறக் காட்டுதுமே. (௨)

அணுமகத் தன்றி யவைமூன்று மில்லை யயலுருவா
அணுமகத் தென்றே யறிஞர் கணித்ததற் கையமில்லை
அணுமகத் தெங்ஙனகம்பாவ மாகு மறிவிலர்க்கே
அணுமகத் தென்றறி யாததினை லெங்ஙனுயதுவே. (௩)

யாரு மறிவ மவரவர் தேக மகல்வதனை
யாரு மறிவ மணுவணு வாயிங் கழிவதனை.
யாரு மறிந்து மறிவு மழுங்கி யகமகமென்
றூரும் பிறவி கடவா ததனி லகப்பட்டமே. (௪)

அகப்பட்ட மார்க்க மறியாத பேதை யகமிகவித்
தகப்பட் டருந்தல் பொருந்தற் குழலு மலைதலின்கண்
ணகப்பட்டுக் காமப் பசிக்கே நிதமு மவலமதில்
அகப்பட்ட மூல மறிவதென் றோவிங் கறிந்திலமே. (௫)

அறிவிக்கின் மூல மவரையெஞ் ஞான்று மவமதிப்பர்
அறிவி னிலையை யறியாத மூட ரனுதினமும்
அறியாமை தன்னை யறிவென்று கொள்ளினு மாவதெங்ஙன்
அறிவா விளங்குவ தென்றோ விவர்க ளறிகிலமே. (௬)

அணுக்குழு தேக மணுவாக மீண்டு மழிவதன்றோ
அணுக்குழு வென்றுணர்ந் தாரக மென்னா ரழியுடலை
அணுக்குழு வென்னினுங் கேளா ருடலை யகமிகுந்தார்
அணுக்குழு நாட்டம் வருவதென் றோவிங் கறிகிலமே. (௭)

எவரோ பிறவிக் கடல்கடப் பாரென் றிசைக்குமறை
எவரேனு மிந்நிலை யில்லார் படித்து மிருந்துமென்ன
எவருக் குணர்த்தினு மிந்நிலை யேலா ரிறையுமிங்ஙன்
எவர்தமைக் கண்டா ரவரடி யேமுடி யேத்துமினே. (௮)

மெய்யுல கென்பர் விகாரப் பொருடனை மெய்யறியார்
மெய்யெனின் யாது மணுவணு வாவெங்கு மேவலெவன்
மெய்யென்பர் பொய்யை யிதுவென் றறியார் மிகப்படித்தும்
மெய்யெனன் ஞானமென் றேயுணர்ந் தோதிடும் வேதமதே. (௯)

சுயம்பாகக் கண்டிலன் சோதிக்கி லொன்றுந் துடக்கறுத்துச்
சுயம்பறி யாரெதைச் சொல்லினுந் தோடந் தொடருமன்றே
சுயம்பைச் சுயம்பென்று காட்டினு மல்லார் சுயம்பறியார்
சுயம்பன் னியமன்று சோதித்த தானென்று சொல்லிடுமே. (க0)

சுயம்புல கன்று சுயம்பென்று சொல்லுஞ் சொரூபமன்று
சுயம்பெனுஞ் சொல்லுஞ் சுயம்பன்று வேதஞ் சுயம்புமன்று
சுயம்பெனக் கொள்ளுஞ் சுகமுஞ் சுயம்பன்று சோதியன்று
சுயம்பது வேறில்லை தானே சுயம்பென்று சொல்லிடுமே. (கக)

கடினப் பொருளுங் ககனமி லாதெங்குங் காட்டுகிலம்
கடினப் பொருளுஞ் சுயம்பன் றுருவங் கலைவதினால்
கடினப் புவியண்ட கோடிக ளில்லை ககனமின்றிக்
கடினப் பொருளெது தானே பிறிதில்லை காணுமினே. (கஉ)

உள்ளும் புறம்பு மொழியா வெளியன்றி யொன்றுமில்லை
உள்ளும் புறம்பெனச் சொல்லாத தெப்பொரு ளொன்றுமில்லை
உள்ளும் புறம்பெனச் சொல்லல் வெளிபற்றி யோர்ந்திலமோ
உள்ளும் புறம்பும் வெளிநாட்டங் கொண்டெம்மி னுத்தமரே. (கங)

கவலைக் கிடமின்மை வேறில்லை யீதே கடைமுடிவில்
கவலைக் கெலாமிடங் கண்டிலி ரோவுருக் காட்சிதனில்
கவலைக் கொழிபுண்டு வேறென்ப வெல்லாங் கணத்தழிக்கிற்
கவலைக் கொழிபிடங் காணாது சாவர் கடையவரே. (கச)

சிவசிவ வென்று செபிக்கிற் கவலை சிறிதுமில்லா
சிவமெனுஞ் சொற்பொரு ளாழுந் தெரியார் செபித்துமென்ன
சிவமென லெப்பொரு ளப்பொருள் காணச் சிறிதுமில்லார்
சிவவேட மென்செயும் டம்பத் திழுத்துச் சிதைத்திடுமே. (கரு)

மனமுல காநிற்க மாற்றல் சகன மன்னமதின்
மனனம் பலக்கப் பலகற் பிதமின்றி மாகமதாம்
மனமது வாகப் பலக்கப் பலக்க மறைந்தறிவாம்
மனனம் பலக்க மலமின்றி யெங்கும் வயங்கிடுமே. (கசு)

இவ்வாறு மேன்மே லிருக்குந் துறைசென் றிருந்திருந்து
இவ்வாறு நின்றங் ககம்பாவ மின்றி யெவையுமின்றி
இவ்வாறு மாறு நிலைபிற ழாதிங் கிருக்கின்முத்தி
இவ்வா றகன்றிடி லேகம தாயிட வில்லையதே. (கஎ)

இந்நிலைக் கேற்க வறிவா யுலக மிலகுமதேல்
இந்நிலை யல்லார்க் கியைய வதுவா யிருக்குமன்றே
இந்நிலை யோரிரண் டுள்ளத் துணர்ந்தார்க் கிருவகையாம்
இந்நிலை மூன்று முணர்ந்தார்க் குலக மெதுவென்பமே. (கஅ)

விருப்பக லார்க்கு வெறுப்பைத் தரினும் விருப்புலகாம்
விருப்பகன் றார்க்கு விருப்பைத் தரினும் வெறுப்புலகாம்
விருப்பு வெறுப்பக லார்க்கங்ஙன் காணு மிசிரிமித்து
விருப்பு வெறுப்பகன் றார்க்கே னுலகம் விடுவிக்குமே. (கசு)

அவரவர்க் கேற்ற நிலைக்கள வாக வகிலமெலாம்
அவரவர்க் கங்கங் ககலாது காணு மறிவிலர்கட்
கவரவர்க் குள்ள வனுபவங் காட்டி னவமதிப்பர்
அவரவர்க் கென்று வருமோ மதியிங் கறிகிலமே. (உ௦)

அறிஞர்க் குலகென ஞரு மணுவணு வாவகன்று
அறிஞர்க் குலகறி வாக விளங்கு மனுபவத்தால்
அறிஞர்க் கிலையுரு வாதி விகற்ப மணுவளவும்
அறிஞருக் கேயுல கானந்த மென்ப தறிந்தனமே. (உக)

உருவள வாத்தனைக் காணு மளவு முலகுருவாம்
உருவள வாத்தனைக் காணு மளவு முலகுண்மையாம்
உருவள வாத்தனைக் காணு மளவு முறவுளவாம்
உருவள வல்லவென் றுன்ன வெவ்வையு மொழிந்திடுமே. (உஉ)

அருவாத் தனையுன்ன வங்குட னேன்று மடிக்கடிக்கு
அருவாத் தனையுன்னி யற்று ரெவரக மல்லலற்றார்
அருவாத் தனையுனும் வல்லா ரிலை யெங்கு மாய்ந்திடுங்கால்
அருவோ சடமசத் தாகா தனதுரு வற்பமுமே. (உங)

அறிவுரு வன்றே லனைத்துந் தனதுரு வன்றறியும்
அறிவுரு வென்றறி யாரகத் தாலிங் கழிவரென்றும்
அறிவுரு வென்றுதற் காணார் படித்து மவலமுற்றார்
அறிவுரு வாவதென் றேமதி யில்லா ரறிகிலமே. (உச)

சுவையொளி யூறொலி நாற்ற முலகச் சுயதருமம்
சுவையாதி யைந்து முயிர்க்குச் சுகநிலை சோர்வதெங்ஙன்
சுவையாதி யுண்டு புலனுள் ளளவுந் தொலைவதெங்ஙன்
சுவையாதி யெங்கே கரணந் தொலைந்திடச் சொல்லுமினே. (உரு)

எவர்க்கெப் புலனின் றவர்க்கவ் விடய மிலையெனறுன்
எவர்க்கு மனுபவ மானத மின்றே லிலைபுலனும்
எவர்க்கு மனமிலை யில்லை யுயிரே லிலாதிருக்கில்
எவர்க்கு மவித்தை யிலையுயி ராகு மிதுதிண்ணமே. (உசா)

அவித்தை யெனலிங் குறைகுவன் கேண்மி னதனியல்பை
அவித்தை யெனற்கிச்சை ஞானங் கிரியை யவயவமாம்
அவித்தை விகாரம் நனவாதி மூன்று மழிவிலதாம்
அவித்தை கெடிலிவை யெல்லாங் கெடுமெனு மாகமமே. (உஎ)

அறிவன்றி யில்லை யறியாமை யைய மணுவுமில்லை
அறிவென் றெவரு மறைவ தறிவன் றறிவறியா
தறிவென விந்து மறையே யறையு மதனியல்பை
அறிவறி யாரை மகத்தெனக் கூசு மருமறையே. (உஅ)

தானன்றி யில்லை யறிவெனின் வேதந் தயக்கமெவன்
தானன்றி யுண்டேற் றவிர்வேன் விசாரணை தன்னிலென்றும்
தானென்று கோடற்குச் சம்மதி யற்றவர் தள்ளுதும்யாம்
தானென்று மேயுண்மை சத்தியஞ் சத்தியஞ் சத்தியமே. (உக)

உலகந் தனையுற்றுச் சோதித்துத் தேர்ந்திட வோடுமையல்
உலகஞ் சுகநிலை யன்றெனக் கண்டு முலைவதெவன்
உலகந் தனையறி யுஞ்சித்தை யாயி லொருமுடிவாம்
உலகறி வாயிடி லுண்டோ பிறப்பிங் கொழியுமதே. (௩0)

பகுதி விகுதி யிடைநிலை தானெனல் பார்த்தனமே
பகுதி விகுதி யொருபொரு ளாகப் பகரறியார்
பகுதி விகுதி முரணுக்கிப் போதிக்கும் பாதகத்தைப்
பகுதி விகுதி யிலாதென்று போக்குதல் பார்த்திலமே. (௩க)

தானெனல் மூடமு ஞானமு மன்று தனைமறப்பால்
தானெனல் ஞானமன் றேதாம லோதித் தனையுணர்வால்
தானெனல் மூடமன் றிவ்வாறு சொல்லுஞ் சதுமறையும்
தானென லொன்றுமன் றல்லாத தன்று தனிச்சுடரே. (௩உ)

உலகையுந் தன்னையு முற்றுநின் றூய வொருமுடிபாம்
உலகமுந் தானு மறிவு விளங்கிட வொன்றுபடும்
உலகொன்று மேமுற் றுணர்ந்தென் னெவரு முபயமதாம்
உலக மயம்விட் டுணர்வாக நின்றிடு முத்தமரே. (௩௩)

பத்தியும் பூசையு நோன்புந் தவமும் பலவறமும்
பத்தர்க்குச் சித்த சுசிதரற் கேற்றது பற்றகற்றும்
பத்தி வலையிற் பரமன் படுவன் பழிபிறங்காப்
பத்தியில் லாவிடின் முத்திக்கு வித்தெது பார்த்திலமே. (௩௪)

பத்தி யணுவள வில்லாப் பகடிகள் பார்க்கிலெங்கும்
பத்தரைப் போனடித் தாரும் பழிக்கப் பலவிதத்தும்
பத்தருக் கெள்ளள வுஞ்சிறப் பின்றிப் பரந்துழல்வார்
பத்தரென் பாரிவர் தம்மை யடைந்திடிற் பாதகமே. (௩௫)

பத்தரென் போர்பிற விக்கட லுண்டப் பரதவித்துப்
பத்தி மிகுத்துப் பிறநினை வின்றிப் பரவசமாய்ப்
பத்தர்க்குத் தொண்டு பிறழாது நிற்பர் பலமிதுகாண்
பத்தியொன் றேபிற விப்புணை வேறிலை பார்த்துய்மினே. (௩௬)

பற்றுக்க ளெல்லாம் பறக்க விரைவிற் பராபரத்தைப்
பற்றுக வென்றது நிற்கத் தனிக்கப் பராபரமும்
பற்று மெதினினு மேலான தேனும் பரநினைவும்
பற்று தலின்விடுத் தொன்றாக நில்லுமின் பத்தர்களே. (௩௭)

மனோவமைதிமார்க்கம் முற்றிற்று.

---

# மனோபசாந்திமார்க்கம்.

உடலன்றித் தன்னுண்மை காணார் படித்து முயர்ந்தவெதவன்
உடலன்றி நானென வில்லா ரிருந்தென் னுயர்நிணையோ
உடல்கண்டு நானெனும் பாவனை யென்று முறுதியதோ
உடலுக மென்ன திருப்பதென் றேவிங் குணர்ந்திலமே. (௧)

ஐயோ விறந்த வுயிர்களெங் கேயென் றறிபவரார்
ஐயோ விருக்கு முயிர்க ளுடலென் றழிவதெவன்
ஐயோ வினிப்பிறக் கின்றன யாரென் றறிவதுண்டோ
ஐயோ படித்து மவலம தாக வழிகின்றமே. (உ)

உருவந் தனையன்றிக் காணு முலகத் துயிரதனை
உருவந் தனையன்றி நானீ யவன்முத லொன்றறியோம்
உருவந் தனையன்றித் தோற்ற மெழுவகை யுன்னறியோம்
உருவந் தனையன்றி யெங்கே யுறவய லோருமினே. (ஙு)

உருவஞ் சடமசத் தென்றுண ராதென் னுணர்விருந்தும்
உருவல நாமெனச் சாவாரைக் கண்டு முணர்விலதென்
உருவம் புழுமல நோயென்று கண்டு முடல்சகிப்பேன்
உருவெங் கணுமிலை பூதக் கலப்பன்றி யுத்தமரே. (ச)

உருவந் தனையுயி ராக்கா ணளவு முறுங்கலகம்
உருவந் தனிலெழுங் காமாதி மோக முவப்புவெறுப்
புருவஞ் சலன மொழியாக் கவலை யுதவுமுதல்
உருவந் தனிற்சிந்தை நீங்கிற் றுயர மொழிகுதுமே. (ரு)

இம்மை நழுவி லெதுவோ வறிகில மெவ்வுயிர்க்கும்
இம்மை யுருவா லறிந்தோ மனர்த்த மிதையகற்ற
இம்மையிற் றானே விசாரித்துக் காணி லெமதுருவை
இம்மையி லேசுக வாரிதி யாகுது மென்சொல்வமே. (சு)

சுகந்தனை வேண்டி யுழன்றிடி னும்முயிர் சோகமறு
சுகந்தனை வேண்டிச் சுவர்க்காதி கொள்ளினுஞ் சோகமறு
சுகந்தனை வேண்டிக் கலையாதி கற்கினுஞ் சோகமறு
சுகஞ்சுய மீதென்று காணி லறுமன்று சோகமதே. (எ)

சுயசுக மீதெனி னல்லா தவற்றைச் சுசாதியுறும்
சுயசுக மல்ல படிப்பாற் கணிப்பது சொற்சுகமே
சுயசுக மல்ல பரநிலை காண்பதுந் தொந்தசுத்தம்
சுயசுகங் கண்டன மான்ம சுகமென்று சோதித்துமே. (அ)

ஆன்மா வுலகெனி னாகுஞ் சுயசுக மவ்வுலகம்
ஆன்மா வலவெனி னாகா சுயசுக மவ்வுலகம்
ஆன்மா பரமெனி னாகுஞ் சுயசுக மப்பரமும்
ஆன்மா வலவெனி னாகா சுயசுக மப்பரமே. (கூ)

ஆன்மா சகமன் றசத்தாதி யாதலி னன்னியமே
ஆன்மா பரமன் றசத்தாதி யின்மையி னன்னியமே
ஆன்மா விரண்டு மலவேற் றிரிவித மாமுடியும்
ஆன்மா விலக்கண மாயா விடத்தெனு மாகமமே. (க0)

ஆன்மா வுருவன் றசத்தாதி யின்மையி னன்னதன்றேல்
ஆன்மா வருவெனிற் சூனிய மாதலி னன்னதுமன்
றான்மா வுருவரு வென்னி லதுவன் றறிவதினால்
ஆன்மா நிலையின்னு மாய்குதும் வம்மி னறிஞர்களே. (கக)

ஆன்மா வுடலெனிற் கூடிப் பிரிதலி னவ்வுடலன்
றான்மா பிராண னெனிலோர்த லின்மையி னல்லவது
ஆன்மா புலனெனி லல்ல விருக்கு மவையழிந்தும்
ஆன்மா மனமெனின் முன்போல வாகு மறியுமினே. (கஉ)

ஆன்மா வுயிரன் றதுபிம்ப மாதலி னன்றவித்தை
ஆன்மா வுணர்வுரு வாதலின் வித்தையு மன்றதுகேள்
ஆன்மா தனைமறப் பாலொன்று மன்றிங் களவிலதால்
ஆன்மா பலவன் றதிட்டான மாதலி னைந்திடினே. (கரு)

ஆன்மா வுபாதித் திரியமன் றென்பதை யாய்ந்துணரில்
ஆன்மாவை யன்றி யுளதென்ப தாரய லற்பரிற்கீழ்
ஆன்மாவைக் கண்டறி யார்சொலும் வாத மவலமதாம்
ஆன்ம நிலையறி யாரந் தகரெனு மாகமமே. (௧௪)

பதியறி யாரந் தகரெனன் மெய்யே பலபிதற்றுற்
பதியன் னியமேற் பரிபூ ரணமல பார்த்திலிரோ
பதியெவ ணென்னிற் றனைத்தேட லொக்கும் பயனதுதான்
பதியுஞ் சிறந்த விடயம தாகும் பகடிகளே. (௧௫)

பதிகண் டறியீர் பதிபதி யென்று பலநடித்தென்
பதிதந்த தாகப் பகர்வீர் சுகதுக்கம் பாவனையால்
பதிதரக் கண்டா ரெவரு மிலகதை பார்க்கிலெங்கும்
பதிகாணுந் தன்னிலை காணி லதுதிண்ணம் பார்த்துய்ம்மினே. (௧௬)

இதுபதி யென்னி னெவையு மலவா வியைவதெவன்
இதுபதி யென்னின் விடையம தாகு மிதுவனர்த்தம்
இதுபதி யென்னி னினைவள வாகு மிறையருள்பெற்
றிதுபதி யன்றன் றெனச்சொலி னந்தத் திலகுமதே. (௧௭)

சொல்லற் கெளிது பகவா னிலையைச் சுகுணமதாச்
சொல்லற் கரிது குணரகி தத்தாற் சுயம்பிதுவாச்
சொல்லற் கருமறை பக்குவ நோக்குந் துணிபிதெனச்
சொல்லற் கரிய னெனையன்றிக் கண்டிலன் சோதியையே. (௧௮)

ஆன்மா பரமென லொன்றென் றுணர வறிவின்பமாம்
ஆன்மா பரமெனல் வேறெனு மட்டு மயலின்பமாம்
ஆன்மா பரமெனல் தோற்றமென் பாருக் கருநரகம்
ஆன்மா பரநிலை யின்னு மிஃதென் றறைகுதுமே. (௧௯)

நானென லின்றெனி லான்மா விலேயென்பம் நாட்டலெவன்
நானெனு மோவுட லான்மாவை யன்றி நாந்தெளிந்தம்
நானென லன்ருங் கரணுதி யாவும் நழுவுதலால்
நானென வில்லா வுயிரிலே யாவிதை நாடுமினே. (உ0)

அவத்தாத் திரியத்தும் நானென லாரங் கறிந்தறைதும்
அவத்தை யுபாதித் திரியமு நாமன் றகல்வதனுல்
அவத்தை கடந்திலம் யாமொன்று மன்றென் றறிந்துரைப்போம்
அவத்தை தொறுங்கரி யாமா தலினறி வாகுதுமே. (உக)

எல்லாம் விடய மயமன்றிக் கண்டில மெய்யுளதா
எல்லா மரிமய மெல்லாஞ் சிவமய மென்பதெங்கே
எல்லா மதத்தரு மிவ்வணத் தால்வழக் கெய்தலெவன்
எல்லாத் துயரும் விடயத் தொழிவி லிரியுமதே. (உஉ)

மயமென் பதற்கு முதற்கா ரணம்பொருண் மாறிடினும்
மயநீர் கடற்குச் சுவர்னம் பணிக்கு மலேக்குசிலே
மயசத்த மீதென் றறியார் பிதற்று மயலகற்றி
மயமெனல் ஞெப்திப் பிரியம தாகு மனிதர்களே. (உங)

ஞெப்திப் பிரியந் தனைநீக்கி யொன்றும் நிகழ்த்தறியோம்
ஞெப்திப் பிரியந் தவிர்ந்த வுயிரிலே நேடுகினும்
ஞெப்திப் பிரிய நிலேயறி வானந்த நின்மலத்தில்
ஞெப்திப் பிரிய மயமே பிறிதில நின்றுய்ம்மினே. (உச)

கண்ட படிசொலி யூனக பாவங் கழற்றறியோம்
கண்ட படிசொலி யுண்மை நமதுரு கண்டறியோம்
கண்ட படிசொலி மூன்றவத் தைக்கிடங் கற்றறியோம்
கண்ட படிசொலிப் போகா தறிவைக் கருதுமினே. (உரு)

அகம்பாவ மீதென் றறியா துழல்வ மறிந்தவர்போல்
அகம்பாவ மல்ல வுபாதி வடிவென் றறிவறியோம்
அகம்பாவ மாய வயலைப் படிக்கி லகல்வதுண்டோ
அகம்பாவ மூல மகன்ளுற் பிறவி யகன்றிடுமே. (உசா)

மனோபசாந்திமார்க்கம் முற்றிற்று.

ஆக-கவி-சாஙு.

## விசாரம்.

### சொரூபவணக்கம்.

திரிபுடியா யன்றாய்த் தெரிவாகி நிற்கும்
ஒருபொருளை யென்னுளத்தி லுன்னிப் - பிரமையறக்
கூறவந்த விந்நூற்குக் குற்றமுங் காண்பரோ
தேறப் புகுவார் தினம்.

ஒருங்கே யுதித்த வியற்கைய தேற்பின் னொழிவதெவன்
ஒருங்குறில் லாதிங் கியற்கை யெதற்குள வோதிரண்டில்
ஒருங்குறல் முன்பின் னிலையெனி லிப்போ துறுவதெவன்
ஒருங்கறி யப்படி யாதென் புலமை யுணர்த்துமினே. (க)

உணர்வோ டுடலு மொருங்கே யுலகி லுதித்ததெவன்
உணர்வோ வணுவா யுடலோ மகத்தா யுணர்வதெவன்
உணர்வின் சுவையி னுடல்சுவை மேலா யுவந்ததெவன்
உணர்வுடை யீரிதை யாயாது சாவதென் னோதுமினே. (உ)

உடற்கே சுபாவ மகர்த்தா சடமசத் தொன்றுறுமோ
உடற்குறு மொக்குளி னென்னி லுணர்வதி லுற்றிடலேன்
உடலின் சுபாவங் கடவின் னெனவெனி லுற்றிடன்முன்
உடலன்று பின்னுமன் றூசா தியற்கை யுணருமினே. (ங)

அடுத்தது வாய்விடு மாடி யெனத்தன் னறிவினிலை
அடுத்தது வாகி லதுவே கவலை யனுதினமும்
அடுத்தது நீங்கி லதன்மய நீங்கு மணுவணுவாய்
அடுத்த பிறவி மயமா கியது மறிந்தனமே. (ச)

எங்கெங் கறிவுள தங்கங் குலக மிருப்பதெவன்
எங்கெங் கறிவில தங்கங் குலக மிலாததெவன்
எங்கெங் குலக மிருந்தென் னறிவே யிலாவிடத்து
எங்கெங்கும் போது மறிவே மயமெனற் கென்சொல்வனே. (ரு)

அறிவே மகத்தா யணுவா யுலக மறிந்தனம்யாம்
அறிவைத் தளியணு காட்டறி யாரெங்கு மாரெனினும்
அறிவின் விகற்ப மனைத்தென் றறிந்தன மையமின்றி
அறிவணு வாக்கொண் டசத்தாக் கியதென் னறிகிலமே. (சா)

அவத்தாத் திரியத்து மங்கங் குணர்வ தறிவதன்றோ
அவத்தாத் திரியஞ் சுழல்வ தறிவி லனுதினமும்
அவத்தாத் திரிய மறிவன்றி யின்றொரு வாதரவும்
அவத்தாத் திரியமு மில்லை யறிவன்றி யாய்குதுமே. (எ)

அறிவணு வாகவு மாபாச மாகவு மாய்ந்ததெவன்
அறிவணு வாயி னுலகெங் கறிவன்றி யாய்தலின்கண்
அறிவை யறிந்தவர் சொல்லினுங் கேளீ ரவலமதா
அறிவசத் தென்பது யாதோ கடாவிட்டிங் காய்குமினே. (அ)

பொருளல்ல வற்றைப் பொருளென் றழிதலும் போதமன்றோ
பொருளைப் பொருளென்று தானு விளங்கலும் போதமன்றோ
பொருளல்ல தேதையும் யானென தென்றலும் போதமன்றோ
பொருளில்லை போதப் பொருளன்றி யெங்கணும் போற்றுமினே. ()

ஞானந் தனையன்றி வேறொன்றுங் கண்டில நாடிலெங்கும்
ஞானமு மன்றவை மாறாகத் தோற்றிடு நாட்டத்திலே
ஞானமொன் றேதகுங் காரண காரிய நண்ணுபொருள்
ஞானமொன் றேதகுஞ் சத்தெனல் வேறில நாடுமினே. (௧௦)

அறிவைப் படித்தறி யார்பதர் போலு மளப்பதெவன்
அறிவல் லவற்றை யறிவென்று கொண்டனை யாதவினால்
அறிவை மதிக்கா தயலை யெடுத்தனை யாச்சரியம்
அறிவை யளப்பதில் வல்லை யதுநிற்க வாய்குதுமே. (௧௧)

பகவான் செயலெனி லேன்விதி நீக்கம் பரநிலைக்கேல்
பகவா னுயிர்செயல் கண்டளிக் கின்ற பலமிதன்றோ
பகவான் செயலெனி லேன்பட்ச பாதம் படைத்தலின்கண்
பகவான் கருத்தறி யோமெனிற் பேச்சேன் பகருமினே. (௧௨)

அருளே வடிவெனி னெங்கே வறியவர்க் கன்பிலதேல்
அருளன்றிச் செல்வம் வரற்கேது காரண மன்பிலர்க்கு
அருளோ மிகவன் பினர்க்கு வறுமை யடைவதெவன்
அருளிங்கு சொல்லற்க காரணஞ் சொல்லுதி யாய்குதுமே. (௧௩)

அவரவர் செய்கைக் களவாப் பலனை யளிப்பதற்கேல்
அவரவர்க் கெங்ஙன் வினைவரற் கேதிங் கறுதியிலே
அவரவர்க் குள்ள வவாவா லெனிலது வாங்குறலேன்
அவரவர் போக நுகர்தற் கெனிலதை யாய்குதுமே. (௧௪)

போகித்தல் யாதுக் கெனிற்சுகப் பேறுக்குப் பொய்மையன்று
போகித்த லன்றிச் சுகப்பே றிலாதென் புதுமைநின்சொல்
போகத்தை விட்டதைக் கொள்பவ ரெங்கணும் புக்கிலில்லை
போகிக்குஞ் சாதன மன்றி யிலையெனிற் போற்றுதுமே. (௧௫)

கரணந் தனுவன்றிச் சாதன மில்லை கணிக்கிலெங்கும்
கரணந் தனுவலி யின்றேற் சுகவிச்சை கட்டறுமோ
கரணந் தனுவன்றி யின்பித் தலுமுண்டு காணரிதேல்
கரணந் தனுவில் சுகங்கே வலமொக்குங் கைக்கொள்ளமே. (கசு)

சுகசா தனங்க ளெணமுத லென்றிரு தோற்றமதாம்
சுகசா தனத்திற் றனுகர ணங்க ளெணக்கருவி
சுகசா தனத்தில் விடய முதலெனத் தோற்றிவிடும்
சுகசா தனங்கள் சுகமல வென்றுந் துயரமதே. (கஎ)

விடயஞ் சுகமன்றி வேறொன் றிலையெனில் வேறுபட்டு
விடயந் துயரை விளைப்ப தெவனதை விட்டொன்றுமில்
விடயஞ் சுகமன்றி வறியார் துயரென்பர் மெய்ம்மையன்றேல்
விடயஞ் சுகமன் றசத்தா தலினெங்ஙன் மேவிடுமே. (கஅ)

சுகசா தனத்தில் விடய முதலன்றிச் சோதனையில்
சுகந்தனக் கன்று நிலையாத் திருத்தித் தொடர்பதனால்
சுகந்தனக் கேது முதற்கா ரணமது சொல்லெனிலோ
சுகந்தனக் கேற்ற தறிவென்று கண்டு துணிந்தனமே. (கசு)

அறிவெங்ங னமெனி லன்னிய முண்டே லறிவையன்றி
அறிவன்றி யின்பமு மன்னிய மாகு மறிவன்றெனில்
அறிவைத் தளியணு காட்டி லயலென்ப மன்னதின்றேல்
அறிவே சுகமெனற் கைய மெவன்கொ லகன்றனமே. (உ0)

காரண காரிய மன்றி யொருபொருள் கண்டதுண்டேல்
காரண காரிய மன்றென் றறிவையுங் கட்டுரைப்பம்
காரண காரிய மன்றி யொருபொருள் கண்டதின்றேல்
காரண காரிய மன்றி யறிவிலை காணுமினே. (உக)

சிற்சோதி யன்றிச் செகமாதி மூன்றுஞ் சிறிதுமில்லை
சிற்சோதி யன்றி யகம்பாவ மெங்குஞ் சிறிதுமில்லை
சிற்சோதி யன்றி மதமாதி யாவுஞ் சிறிதுமில்லை
சிற்சோதி நாட்டந் தவிரா விடத்தென்று செப்புவரே. (௨௨)

திரிசய மோடு திருக்கென் றுணர்த்துந் திருமறைகள்
திரிசய மாயை திருக்கெனல் செம்பொரு டீர்ப்பிதுகாண்
திரிசயந் துக்கஞ் சடமசத் தாகுந் திருக்கினில்லை
திரிசயத் திற்கெதிர் சத்துசித் தானந்தந் தேறுமினே. (௨௩)

திருக்கின் றிரிபு திரிசயம் வேறன்று சின்மயமே
திருக்கை யுணர்ந்தவர்க் கையந் திரிபு சிறிதுமில்லை
திருக்கைப் படிக்கினு மென்னுந் துயரஞ் சிறிதகலா
திருக்கே யுளது திரிசயம் பொய்யெனச் செப்பிடுமே. (௨௪)

பிறந்தது மில்லை யிறந்தது மில்லை பெரியகண்ணில்
பிறந்தது யாது விறந்தது யாது பிரமையறில்
பிறந்திற வாதது தானெனி லெங்ஙன் பிறந்திறக்கும்
பிறந்திறக் கும்வினை யுண்டென லெங்கே பிழைபிழையே. (௨௫)

சத்துசித் தானந்தந் தானே யநிர்த சடதுக்கமாம்
சத்துசித் தானந்த மன்றே விருக்கத் தனித்துரையாய்
சத்துசித் தானந்தங் காணில் வெதிருத்தஞ் சற்றுமில்லை
சத்துசித் தானந்தந் தானே யுளது தவறில்லையே. (௨௬)

வினையே பிறப்பைத் தருமென்று வேதம் விளம்பியதென்
வினையெனச் சொல்லா விடிற்பழிக் கஞ்சார் விழைந்துகடு
வினையே புரிவர் துயரே மிகுவர் விடுவிக்கநல்
வினையே புரியெனற் கன்றோ புகன்றது வேதமதே. (௨௭)

புரியென்ற வேதம் புரியா யெனப்பின் புகல்வதெவன்
புரிநல் வினையும் பலன்றந்து மாறும் புரிந்தபினர்
புரியா தொழிக வெனுங்கருத் தீது புலனழிந்து
புரிசிவ யோகமென் றேன்றே மறைகள் புகல்கின்றதே. (உஅ)

மனமடங் கற்குஞ் சிதானந்த மாதற்கு மாமறைகள்
மனநிலை கூறிப்பின் மாற்ற வகைசொலு மாற்றியதன்
மனந்தன் னுருவெனக் காட்டி விளக்கு மவுனநிலை
மனமவு னத்தின்பின் சும்மா விருத்து மறைமுடிவே. (உகூ)

தந்திர மன்றி யெதுவுந் திரமன்று சாற்றுநிலை
தந்திர மேதெனிற் பூர்வசித் தாந்தந் தகுமிடத்தில்
தந்திர மாவரு மேன்மே னியதி தருநெறிக்கண்
தந்திரம் யாவையுஞ் சும்மா விருத்தற்குச் சாற்றுமிதே. (௩௦)

யாவருஞ் சும்மா விருப்ப ரறியா ரெவரெனினும்
யாவர் தனதுண்மை கண்டார் கலங்கா ரெதுசெயினும்
யாவர் புகுவா ரவரையெஞ் ஞான்று மிகழ்ந்துரைப்பார்
யாவருஞ் சும்மா விருக்கு நிலையை யியம்புதுமே. (௩௧)

சும்மா விருத்தல் சுகஞ்சுக மென்றூர் துணியுணர்ந்தார்
சும்மா விருத்தல் கரணாதி யன்று சுகமுடிவாம்
சும்மா விருவென்று சொல்லா தவரில்லை சூனியமேல்
சும்மா விருத்தலின் மேலா நிலையிலை சோதிக்கினே. (௩௨)

சும்மா விருவெனச் சொல்லிடு மோவினை சொன்னமறை
சும்மா விருத்தல் வருதற்கு நல்வினை சொற்றதெனிற்
சும்மா விருத்தன் முடிவதன் றேவினை தொன்மையெவன்
சும்மா விருக்கு நிலைகண்டு நின்றிடு சொல்லிறந்தே. (௩௩)

நடுநிலை மேலிடல் சும்மா விருத்தற்கு நண்ணுமிடம்
நடுநிலை யாவது ஞானமஞ் ஞானத்தி னட்டநடு
நடுநிலை துக்க சுகமதிற் றூக்கா நயமதுறல்
நடுநிலை யல்ல பிறவென்று கண்டு நீணுகுமினே. (நசு)

அறிவே பரமு மறிவே யுயிரு மலவெனினும்
அறிவே சகமு மறிவே மனமு மயலெனினும்
அறிவே பொருளிடங் கால மெனினு மறிந்தவர்க்கு
அறிவே முழுதுமென் றையத்தி னீங்கி யறியுமினே. (நரு)

உணர்வோ வணுவா யுடலோ மகத்தா யுணர்வதெவன்
உணர்வை விசாரித் தறியாமை யாலெனி னுண்மையெது
உணர்வெனி னுஞ்சக மேபர மாநிற்கு மோதினுமென்
உணர்வை யறிவதென் றேவது வாகுவ ருத்தமரே. (நசா)

உபாதித் திரியத்தி னுண்மை யழுத்த மொழிந்தவிடத்
துபாதித் திரிய மொழியு மொழியி னுணர்வொளிரும்
உபாதித் திரிய முணர்வன்றி யின்றென வோதவரும்
உபாதித் திரிய மறிவாய் விளங்கிடு முண்மையிதே. (நஎ)

உபாதித் திரிய மகத்தாகிற் காணு முணர்வணுவா
உபாதித் திரிய மணுவாகக் காணு முணர்வகண்டத்
துபாதித் திரிய நிலையெவர் கண்டா ரொழிந்தறிவா
யுபாதித் திரிய நினைவின்றி யோங்குவ ருத்தமரே. (நஅ)

உணர்வின் சுவையே சுவையொன்று மில்லை யுறுதியதா
உணர்வின் சுவைமிகை சத்துசித் தானந்த முற்றுணரின்
உணர்வாந் தனையறி யாவிடத் தன்னிய மோதுசுகம்
உணர்வது வாவிடிற் றுனய் விடுமின்ப முத்தமரே. (நகூ)

எதிலண்ட கோடி சராசர மெல்லா மிருக்குமெனும்
எதிலின்ப துன்பங்கண் மாறும மென்று மிருக்குமெனும்
எதிலிச்சை ஞானக் கிரியை யெனவு மிருக்குமெனும்
எதிலே நினைப்பு மறப்பென் றுணர்த்து மிருமறையே. (௪0)

உருமகத் தாக வெளியணு வாகு முசாவதறில்
உருவணு வாகும் வெளிமகத் தாக வுசாவதுறில்
உருவெளி யேனிங்க னுதற்கு ஞாய முணர்வதென்றே
உருவெளி யுண்மை விளங்கி லுணர்வு மொளிருமதே. (௪௧)

அணுமகத் தாதல் மகத்தணு வாத லதனியல்பேல்
அணுவை யணுவா யறித லரிதன் றரிதெனலேன்
அணுக்குழு வென்றக மற்று ரிலையுட லாய்ந் துணர்ந்தும்
அணுக்குழு வென்னன் மறவா திருத்தற் கறைந்தனமே. (௪௨)

அணுக்குழு வல்லா வுருக்க ளெவையுண் டறியினெங்கும்
அணுக்குழு வாக வறியின் மயக்கிலை யவ்வுருக்கண்
அணுக்குழு ஞான மகம்பாவ நீக்கி யயலகற்றும்
அணுக்குழு ஞானமெய்ஞ் ஞானத்தைத் தந்திங் ககன்றிடுமே. (௪௩)

உலக மகர்த்தா படைப்பா னுளனென்ப ரோர்புடையார்
உலகத் தியற்கை யணுக்குழு வென்ப ரொருபுடையார்
உலகப் பெயரிலை சித்தன்றி யென்ப ரொருபுடையார்
உலகத்தி னுண்மை யிதிலெது வோவதை யோதுமினே. (௪௪)

உலகம் படைப்பெனக் கொள்ளின் மயக்க மொழிவதில்லை
உலகம் படைத்தவ னாரா ரெனச்செலு மோய்தலின்றி
உலகத்தை யாய்தலில் யாது பயனெனு முள்ளமுந்தான்
உலகந் தனக்கய லென்றழி தற்கிட முண்மையிதே. (௪௫)

உலகத் தியற்கை யனுமகத் தென்றுனி யுற்றதெவன்
உலகறி வன்றிங் கறியப் படுபொரு ளுன்னுருவன்
றுலகத் தகவிற் சுகமெங் கடைதி யொழிந்தனைகொல்
உலகத்தின் கற்பித நாமென லெங்ஙன் மோதுமினே. (சசு)

தெரிவன்றி யெங்கே சராசர மாகத் திரியுமுயிர்
தெரிவன்றி யெங்கே யவத்தாத் திரியஞ் செனிப்பிறப்பு
தெரிவன்றி யெங்கே விழைத லுனல்செயல் சீரிழிவு
தெரிவன்றி யெங்கே சுகதுக்கங் கண்டிவை செப்புமினே. (சஎ)

உடலன்றி யெங்கே யுணர்வெனுந் தோற்ற மொருபொருளன்
றுடலன்றி யெங்கே யுணர்வுக் கிருப்பிட மொன்றுமிலை
உடலன்றி யெங்கே விழைவாதி யெல்லா வினையியற்றல்
உடலுக்கு முன்பின் னுணர்வே யிலையென்ப ரோதுமினே. (சஅ)

உடல்பூத மன்றி யொருமுத லன்றென வுய்த்துணர்ந்தும்
உடல்கற் பிதத்தை யுணர்வின தாக வுணர்ந்துயிரை
உடல்பரு வத்தள வன்றது வாக வுணர்பவரா
உடல்கண் டுணர்வைக் கணிப்பீர் குதர்க்க மொழியுமினே. (சகூ)

உடலக மென்ப துணர்வன்றி யெங்ங னுடலிசைக்கும்
உடலை யுடலறி யாதுணர் வன்றியென் றோர்ந்திலிர்கொல்
உடலுயி ரொன்றன் றபேதம தாயினு முற்றுணரில்
உடலசத் துண்மை யுயிரென்று கொள்ளுமி னுத்தமரே. (ரு0)

ஆகார நாட்டம் விசாரத் தளவா வமைந்திடமுன்
ஞகார நாட்டங் கலையுங் கலந்தபி னப்புறத்த
தாகார நாட்டம தாகி மிசைமிசை யந்தத்திறன்
ஞகார நாட்டம தாகி முடியு மறுதியிதே. (ருக)

இருக்கு துலகெனி னெங்கே நினைவன்றி யென்னுமறை
இருக்கு துயிரெனி னெங்கே நினைவன்றி யென்னுமறை
இருக்குது கர்த்தா வெனினினை வன்றியெங் கென்னுமறை
இருத்த னினைவொன்று மில்லாமை மூன்று மெனுமறையே. (ருஉ)

மனமே யுலகெனின் வேருகக் காட்டின் மனமென்பமோ
மனமே யுலகை யறிதற் கருவி மனமுதலோ
மனமில் சுழுத்தியில் யார்க்கு முலக மறைவதெவன்
மனஞ்சித் துலகஞ் சடமெங்ங ஞென்ரு மடமிதுவே. (ருங)

எங்கே மனமுள தங்கே யுலக மிருப்பதெவன்
எங்கே மனமென லித்தேகத் தன்றி யிருக்குமிடம்
எங்கே யுலகெனல் சிந்தனை யன்றி யிருப்பிடந்தான்
எங்கென்று சொல்லுவ னென்னி லிதையிங் கியம்புவனே. (ருச)

உடலே மனதுக் கிடமென் றனையொக்கு மோர்நிலக்கண்
உடலுக் கிடமுல கன்ரே வுலகுக் குறுமிடமே
துடலன் றுலகுக்கு மானத மேயிட மோதுமனம்
உடலி லிருந்து மகத்தில் மகத்தென் றுணர்ந்தனமே. (ருரு)

உடலாதி யாவையு முண்மை யெனக்கொண் டுளமெலிவம்
உடலாதி யாவு மனுக்குழு சோதிக்கி லுண்மையெங்கே
உடலாதி முன்பின் னிடையிலும் பொய்யென லுண்மையன்ரே
உடலாதி தோற்றமென் றுன்னிலென் னட்ட முணர்ந்துய்ம்மினே.

உடலாதி மெய்யெனக் கண்டு சுகித்த லுணர்வதன்ரே
உடலாதி திப்பியென் றுன்னி வெறுத்த லுணர்வதன்ரே
உடலாதி சித்தெனக் கண்டது வாத லுணர்வதன்ரே
உடலாதி யாவு முணர்வன்றி யெங்கே யுணருமினே. (ருஎ)

உலகத்தை யாயில் வெறுஞ்சூ னியமா யுறுவதெவன்
உலகத் திரிபெனின் முன்போ லுலக முறுவதெவன்
உலகத் தியல்பெனி னுத்திக்கு வொத்திங் குறுவதெவன்
உலகாத் திரிந்தது பாழெனி னுண்மை யுணர்குதுமே. (ருஅ)

பாழின் றிரிபேற் றனுபோக மாகப் படுவதெவன்
பாழன் றெனிலேன் பயனில்லை யென்பர் பயனுகர்ந்தும்
பாழுல கென்றே னெவரு முடிவிற் பகர்வதெங்கும்
பாழுல கன்றேற் றிருத்தி யடைந்தவர் பார்த்திலமே. (ருகூ)

அவமே யுலகெனற் கீதடை யாள மறிவுடையோர்க்
கவமெனல் பொய்யா மிகப்படித் தோர்க்கு மவாப்பெருக்கில்
அவமெனப் போவதென் ஞராய்ச்சி தன்னி லனைவருக்கும்
அவமெய் யிரண்டு முலகாகி லுண்மை யறிந்திலமே. (சூ0)

இரண்டு முலகின தாகி லெவர்க்கு மிலாததெவன்
இரண்டு மவாவின் பருவத்த தாகு மிலையறிவேல்
இரண்டு நிலைத்தற் கிடமில்லை யாசையு மெங்கிருக்கும்
இரண்டையு முன்னிடிற் சித்தே யுலகுக் கிடமென்பமே. (சூக)

பொருளல் லவற்றைப் பொருளென்று கோடலும் புத்தியன்றோ
பொருளைப் பொருளாத் திரிபின்றிக் கோடலும் புத்தியன்றோ
பொருளெவ் வகையு மயக்கந் தெளிவிற் புகாததுண்டோ
பொருளா வதுபுத்தி சோதித்துக் கண்டுய்ம்மின் போதகரே. (சூஉ)

புத்தி விகற்பே பொருளெவ் வகையும் புறம்பெனிலோ
புத்தி விகற்பழி வன்றி வெறுமை புகலறியோம்
புத்தி மயக்கஞ் சகத்தென னீக்கம் புகல்வெறுமை
புத்தி யலதில்லை யாதுந் தெரிந்துய்ம்மின் போதகரே. (சூங)

புத்தி விகற்பே சகத்தென லெங்ஙன் புகலெனிலோ
புத்தி விசாரத் தணுவாய் மயக்கம் புறம்புகலேன்
புத்தி விசாரத் தெளிவாக நின்றிடிற் போனமயல்
புத்தி யணுகாத் தெளிவது வேமுத்தி போதகரே. (சுச)

மயக்க மெதுவெனி லொன்றையொன் றுக்கொளன் மாயையென்பர்
மயக்க மயலல புத்தி விகற்பே மகத்தறிவர்
மயக்க மணுவணு வாக்கி லுலக மடிவதுகாண்
மயக்கந் தனதெனக் கண்டறி வாய்நின்மின் மானிடரே. (சுரு)

தனது மயக்கால் விளைந்த சகத்தைத் தவிர்ப்பதெங்ஙன்
தனது மறப்பே மயக்கென்று சோதிக்கத் தானகலும்
தனதுழைப் பேபந்த முத்திக்கு வித்து தனித்துணுங்கால்
தனதாகக் காணு மதுகண்டு பந்தந் தவிருமினே. (சுசு)

உழப்பின் வகைதெரி யாரய லென்ப ருலகதனை
உழப்பு தனதறி யாமை கெடுத்திடற் குற்றசெயல்
உழப்பெது வென்னி லுலகணு வாக்கி யுலைவதறல்
உழப்பெது காறெனிற் றுணுகு மட்டென் றுணருமினே. (சுஎ)

கல்வியுஞ் செல்வமுங் கர்வத் தழுத்திடக் காரணமாம்
கல்வியுஞ் செல்வமு நன்கே புரிதற்குக் காரணமாம்
கல்வியுஞ் செல்வமுந் தன்னைத் தெளிதற்குக் காரணமாம்
கல்வியுஞ் செல்வமு மென்செயு நஞ்செயல் காரணமே. (சுஅ)

இடம்பொரு ளேவற் கலையா தவரில யென்னகண்டோ
இடம்பொரு ளேவல் சுகமென் றலைத விடர்விளைதற்
கிடம்பொரு ளேவ விடரென் றுணர்ந்து மிசைவதெவன்
இடம்பொரு ளேவ லுடல்வளர்த் தற்கென் றுணருமினே. (சுகூ)

உடலை வளர்த்தென் னுபசார மிக்கிங் கொழிவதன்றே
உடலக மாமெனின் முன்பின் னகமே துறைதெவன்
உடலிதை நானெனல் சென்மப் பழக்க முணர்விலதென்
உடலன் றெமதரு ஞானம தாகுமென் றோர்ந்துய்ம்மினே. (எ0)

அறிவே சுயவுரு வன்னிய நஞ்சுய மன்றெவர்க்கும்
அறிவா யவத்தாத் திரியமு மோர்வ மனுதினமும்
அறிவாய்ப் பிறவிக டோறு முழல்வ மகன்றகன்று
அறிவென லேதெனச் சோதித்துக் கண்டுய்ம்மி னன்பர்களே. (எக)

அறிவின் ஸ்புரிப்பே யகில சராசர மன்னியமன்
றறிவின் ஸ்புரிப்பே யவத்தாத் திரிய மறிவதெங்ஙன்
அறிவி லுதித்திங் கடங்குவ தாலென் றறிந்தனம்யாம்
அறிவி னகண்டத் தகண்ட மிலையெனு மாகமமே. (எஉ)

அறிவைத் தளியனு காட்டி லுலகை யயலென்குதும்
அறிவன்றிக் காரண காரியங் காட்டீ ரணுவணுவாய்
அறிவன்றி நாஸ்திக மாஸ்திக மெங்கே யறிவுடையீர்
அறிவொன்று மேயுண்மை யன்னியம் பொய்யிதையாய்ந்துய்ம்மினே.

அறிவைக் குருவரு ளாலே விளக்கி லறிவிரப்போ
தறிவின் சுயம்பையு மன்னியப் பேற்றையு மையமின்றி
அறிவுக் கறிவே லனவத்தா தோட மணுகுமன்றே
அறிவாகி நிற்பவர் பாதத்தைச் சேர்ந்துய்ம்மி னன்பர்களே. (எச)

அறிவே யுலகெனி ஞகா தணுவென்ப னங்கொருவன்
அறிவன் றணுக்குழு வென்ப ளொருவ னகிலமெலாம்
அறிந்திங்ஙு னென்பய னென்ப னொருவ னனுபவம்விட்
டறிவுடை யீரிதில் யாதா லனிய மறுமென்பதே. (எரு)

அன்னியஞ் சீவன் பரனெவ் வுலகு மறிவதன்று
அன்னிய முண்டெனுஞ் சித்த மிறக்கி னறுங்கவலை
அன்னிய மென்று மியற்கை யெனிலோ வருக்கவலை
அன்னியங் கற்றீ ரறிவையுங் கற்றிங் கறையுமினே. (எசு)

அன்னிய மில்லையென் றேன்ஞானி சொல்வ ரனுபவத்தால்
அன்னிய மன்றோ சகத்தறி வுக்கெனி னுயினெங்கே
அன்னிய முண்டா யிருப்பதென் னில்லையென் றுய்ந்தகணம்
அன்னிய முண்டிலை யென்னு மயக்கமிங் காய்குதுமே. (எஎ)

இவ்வுட லன்னிய மாஞே மிதுவா யிலையெனிலோ
இவ்வுட ஞமாக் கனவிலுங் காண்டலென் னேதுடலங்
கிவ்வுடல் காணு நனவள வாக விலைநனவங்
கிவ்வுடல் பாவத் தழுத்த மெனிலோ வியம்புதுமே. (எஅ)

உடல்சட மாதலிற் பாவிக்க வொண்ணு வுணர்வன்றியிங்
குடலி விருப்பதன் றோவெனின் மெய்யே யுடலிருப்பும்
உடலின தன்றிங் குணர்வின தாதலி னுற்றுணரில்
உடலெறு நாமது வாதலிற் பாவம துண்மையதே. (எகூ)

உடலிது தாஞ யறலுணர் வன்றோ வினிவருமெவ்
வுடலது தாஞ யுறுமெனற் கைய முறற்கிடமென்
னுடலன் றுணர்வின் சுயம்பெனக் கண்டங் குறுவதென்றோ
உடன்மயம் விட்டிங் குணர்வாகி நில்லுமி னுத்தமரே. (அ0)

தானல் கோவய லோவது கட்டந் தனக்கெனிலோ
தானுல காகத் தடித்திடல் கண்டீர் சகலதுன்பந்
தானது வாகத் தடிக்கா விடிவில்லை சந்ததமும்
தானக லும்முறை யாததைக் கண்டு தவிருமினே. (அக)

ஞானச் சுடரன்றி யெம்முயல் வானு நசிக்கவொண்ணு
ஞான மெதுவெனிற் றன்னுண்மை காண்பது ஞானமதாம்
ஞான மலவெந்த நூலால் கணிக்கின்ற ஞானமெலாம்
ஞானக்கண் பெற்றவர் சந்நிதித் தொண்டு நணுகுமினே. (அ௨)

கண்கண்ட ஞானங் கலைஞான மென்று கழறிரண்டில்
கண்கண்ட ஞான மெரிக்குர் தடிப்பைக் கலகமுடன்
கண்கண்ட ஞான நிரதிச வின்பக் கடறருமால்
கண்கண்ட ஞானந் தனைப்போ விலையெங்குங் காணுமினே. (அ௩)

கலைஞான மென்பது கற்றள வாகக் கருதுநிலை
கலைஞான நிச்சயங் காணுத ஞானங் கவலையறு
கலைஞான மெய்யருக் குண்மை விளக்கிக் கதியகற்றுங்
கலைஞான மென்செயு மோகற் றவர்க்குக் கருதுமினே. (அ௪)

சிந்தை செகத்துரு வாகா ரிலையெங்குந் தேடுகினும்
சிந்தை செகத்தாப் பலக்கப் படிப்பது தீரவல
சிந்தை செகத்துரு கேவலத் தெங்கே திரமதன்று
சிந்தை சுயம்பெது தானே வதைக்கண்டு தேர்ந்துய்ம்மினே. (அ௫)

எப்பொருள் யாதா யிருக்கினு மெய்யா மிழிஞருக்கிங்
கெப்பொருள் காணினுங் கர்த்தா வுளனென் றிருப்பர்சிலர்
எப்பொரு ளுந்திரி போவியல் போவென் றிருப்பர்சிலர்
எப்பொரு ளேனு மறிவாக் குவர்சில ரீதுண்மையே. (அ௬)

நாமெப் பிறவிக் குரிய மனுதின நாமிறக்கில்
நாமிப் பிறவிய மென்றிறந் தார்திட நண்ணியுமென்
நாமிது போலினி யாகுது மன்றே நமக்கையமென்
நாமினி யாகா திருத்தற் கிடமெது நாடுமினே. (அ௭)

அடுத்த வுடல்மய மாகு மறிவெனு மாகமங்கள்
அடுத்த வுடலிது வானே முதாரண மன்னியமேன்
அடுத்த வுடலெது வாகுது மின்னமு மையமெவன்
அடுத்த வுடல்மய மானே முன்மும் மதுதிண்ணமே. (அஅ)

உடலிதன் பின்ன ரெதுவோ வெனுமச்ச மோட்டலெவன்
உடலிதன் பின்ன ரிலையெனி லிவ்வுட லுற்றதெவன்
உடலிதன் பின்னர் தரானிறை யேலீ துதவியதென்
உடலீ தியற்கை யெனிலின்னு மேனே வுருதென்பதே. (அகூ)

இன்ன வுடலென் றிலையிது நீங்கி லெடுக்குமுடல்
இன்ன வுடலென் றிலையிது முன்ன ரெடுத்தவுடல்
இன்ன வுடலென் றெவர்க்கேனு மில்லை யெதுநிலையாம்
இன்னமுஞ் சும்மா விருக்கில் விடுமோ விதுதிண்ணமே. (கூ0)

எத்தனை யம்மா பிதாமகன் பேர னெவர்க்கெனினும்
எத்தனை சுற்றந் தமைய னிளைஞ னிலைகணக்கு
எத்தனை நண்பிக ளைம மனையா ளிடுக்கணின்பம்
எத்தனை யாகியு மாகா திருப்ப மெடுத்தெடுத்தே. (கூக

உடலேது நாமன் றுடல்பாவ மாத லுணர்வதன்றோ
உடல்பாவ மோய்ந்திடக் காணீ ருறக்கத் துடலதனை
உடனு மெனுங்கருத் தோடதன் காட்சியு மோட்டல்கடன்
உடலன் னியமன் றுணர்வின் விகற்பமென் றுன்னுமினே. (கூஉ)

உணர்வன்றி யில்லை யுடலாகக் காண்டலு முற்றுணரில்
உணர்வே யுடலா யுடறோ னெனக்கொள லுண்மையன்றோ
உணர்வன்றி யெங்கே யகம்பாவங் கண்டிலி ரோதியுமென்
உணர்வக மாயிடிற் சாந்துய ரெங்கே யணருமினே. (கூரு)

பிறவிப் பெருங்கட லென்பது மெய்யோ பிதற்றலெனில்
பிறவி யிதுநமக் கேன்வந்த தோதில் பிதற்றல் மெய்யே
பிறவி யிதுதரல் தெய்வச் செயலெனிற் பின்றடையேன்
பிறவி யியற்கை யிதுவெனி லென்றும் பிறவியதே. (கூச)

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேனென் றிசைப்பவதெவன்
எல்லாப் பிறப்புக்கு நாமிட மன்றோ வெமதுநிலை
எல்லாப் பிறப்புந் தொடர்ந்துந் தொடரா திருப்பதன்றோ
எல்லாப் பிறப்பு மிலைநமைக் கண்டிடி லீதுண்மையே. (கூரு)

உணர்வுக் குலகய லென்ப முலகுக் குடலயலேல்
உணர்வுக் கறியப் படுபொரு ளெங்ங னுணர்வுலகாம்
உணர்வன்றிக் காட்டில் விசாரத் தெளிவி னுலகயலாம்
உணர்வே யுலகெனற் கேதடை யாளமிங் கொத்திலதே. (கூசு)

உணர்வுக்குப் பாவ முலகுக் கபாவ முறுவதெவன்
உணர்வுக்குப் பாவம தெங்ஙன மென்னி னொருபொருளும்
உணர்வன்றி யின்றென வாராய்ச்சி தன்னி லுறுவதினால்
உணர்வே யெதன்கணும் பாவம தாவதென் ஞேதுமினே. (கூஎ)

எல்லாப் பிறவியு மன்றெனி ஞமா ரெதுபெயரோ
எல்லா மலவைந்து கோசமு மூட மெதுவுமன்று
எல்லா மனிர்த சடதுக்க மாதலி னேதுமல
எல்லா மறியு மறிவென்ப தாகு மிதுதிண்ணமே. (கூஅ)

வியாபக மான விளக்க மறிவெனல் மெய்வடிவம்
வியாபக மான விளக்கங் குறிபற்றி மேவலன்று
வியாபக மான விளக்கங் குருவால் விளங்குவது
வியாபக மான விளக்கத்தை யொப்பது வேறில்லையே. (கூகூ)

வியாபித்து யாதும் விளக்கு மறிவெனல் மெய்க்குறியாம்
வியாபித்துத் தானும் விளங்கு மறிவெனல் மெய்க்குறியாம்
வியாபகத் தன்னிய நாட்டத் ததுவே விளங்கலுறும்
வியாபக நாட்டத் தயலின்றித் தானே விளங்கிடுமே. (௧00)

வியாபகத் தின்மே லடுக்கடுக் காக வியாபகம்போம்
வியாபக மில்லை யறிவினின் மிக்கு விசாரித்திடில்
வியாபக சித்தில் வியாப்பிய மாமெவ் வியாபகமும்
வியாபக மாணு ரறிவாக வென்றும் விளங்குவரே. (௧0௧)

விடயப் பசையகன் றூர்க்கெளி தாகும் வியாபகந்தான்
விடயப் பசையக லார்க்கரி தாகும் வியாபகந்தான்
விடயப் பசைக்குக் கசப்பாக நிற்கும் வியாபகந்தான்
விடயப் பசையறி வின்பம தாகும் வியாபகமே. (௧0௨)

வியாபகத் தின்றடிப் பேயுல கென்றனர் வேறதேனில்
வியாபக நாட்ட மிதிலுல கெங்கே வியாப்பியமேல்
வியாபக மன்றிப் பிறிதாகக் காட்டார் விசாரணையில்
வியாபக மேயணு வாதிய தாகிற்கு மெய்ம்மையிதே. (௧0௩)

வியாபக மேயணு வென்றிடி லெங்ஙன மெய்ப்பியெனில்
வியாபகந் தள்ளி யணுவிருப் பைச்சொலில் மெய்ப்பிக்குதும்
வியாபகந் தள்ளவொண் ணாதே லணுக்கொளல் மேவுமதோ
வியாபகஞ் சித்து சடமணு வௌன்றெங்ஙன் மேவுமதே. (௧0௪)

வியாபிக்கின் முற்று மணுவெனல் காணு வியாப்பியமேல்
வியாப்பிய நாட்டத் தணுவது காணும் விளம்பிரண்டில்
வியாபகக் கண்ணில் வியாப்பிய மில்லை வியாப்பியத்தில்
வியாபகக் கண்ணிலை யொன்றிலொன் றிங்ஙன மேவுமதே. (௧0௫)

நாட்ட மிரண்டினு முண்டவை மாறினு நாட்டமல
நாட்ட மிரண்டினு மாறாது நிற்பது நாட்டமன்றோ
நாட்ட நடுநிலை யீதே சுருதிக ளுட்டுவதும்
நாட்டம் புருவ நடுவெனல் சாதன நாமமினே. (க௦சு)

வியாபக மேயுல கென்பதை யாயில் வெளியுருவாம்
வியாபக மாயுற வெல்லாக் கவலையும் விட்டிருக்கும்
வியாபக மீண்டுங் கணத்தி லுலகா விரிவதுகாண்
வியாபக மேயுல காதியு மந்தமும் வேறில்லையே. (க௦எ)

வியாபக மேயலை வற்றது மாயதும் வேறிலைகாண்
வியாபக மாந்தெரி வன்றி யெதுவும் விவர்த்தமதாம்
வியாபக மெங்கே யிலையெது வுண்டு விசாரணையில்
வியாபக மேமுழு தாயதைக் காணுமின் வேறில்லையே. (க௦அ)

வியாபக மாகா தறிவெங்குங் காணு விசேடத்தினால்
வியாபக மாகா விடிலுல காகா விவர்த்தசத்தம்
வியாக லட்சண மின்றறி வுக்கெனின் மேலொன்றுகேள்
வியாபக மோரிரண் டாமறி வுக்கெனும் வேதமதே. (க௦கூ)

சித்திய தாதலு முத்திய தாதலுஞ் செப்பிரண்டில்
சித்தி யெவர்க்குளுஞ் சிந்தை யறிந்துண்மை செப்புவதும்
சித்திமுக் கால நடக்கை யறிந்துண்மை செப்புவதும்
சித்தி யிதுதனைக் காணு தயலைத் தெரிந்திடுமே. (கக௦)

முத்தி யெவரறி வுந்தன தாக முயலுவது
முத்தி யெவையுந் தகனம தாக்குதல் மூதறிவில்
முத்தி தனக்கய லில்லாச் சுகந்தனில் மூழ்குவது
முத்தி தனையன்றிக் காணு தயலெங்கு முந்துமினே. (ககக)

அறிவாயி னேனை யவக்குறி யெங்கே யனைத்திரண்டில்
அறிவே தவஞ்செயி லக்குறி யெய்துதற் கையமில்லை
அறிவாகி லிவ்வுட ருனெனற் கேதென் னடைந்ததெவன்
அறிவி னிடத்திது பாவனை மூடத் தடைந்ததுவே. (௧௧௨)

அறிவின் றடிப்பே யனைத்துல கென்றே மதினிடத்தில்
அறிவீர் தினமு மவத்தாத் திரிய மதிற்சுழறல்
அறிவே யறிவது மங்கங் கதுவா யதனியல்பை
அறிவே யனைத்தினுக் காதார மாத லறியுமினே. (௧௧௩)

அறிவது நாட்டமுற் றுய்வா ருலகினி லாருமில்லை
அறிவினைக் கண்டு சுகிக்கப் படிப்பவ ராருமில்லை
அறிவே தனதுரு வாகப் பயில்பவ ராருமில்லை
அறிவாயு மெட்டரி தார்க்கு மதுவே யருந்தெய்வமே. (௧௧௪)

அறிவினைக் கண்கண்ட மெய்த்தெய்வ மென்பதற் கையமுண்டேல்
அறிவன்றித் தெய்வ முயிரில்லை யுண்டே லறிவிகற்பம்
அறிவின் விகற்பென லொப்புயர் தாழ்விங் கறிவதன்று
அறிவெந்த நானுமன் றுனே மெனினு மறியுமினே. (௧௧௫)

அறிவினின் மிக்க வியாபக மின்றென் றறைந்தனமுன்
னறிவினில் மொக்குளைப் போலு மரியர ஞதியரும்
அறிவின் விகற்ப மனைத்தையு மாயி லறிவுருவாம்
அறிவினை யேகமென் றுற்றோட மென்னை யறையுமினே. (௧௧௬)

மெய்ஞ்ஞான மென்பது தானு யலவாய் விளங்குவது
மெய்ஞ்ஞான மென்பதிற் றிட்டாந்த நான்கும் விளங்கலுறும்
மெய்ஞ்ஞான மென்ப ருயிர்பர மாவதை மெய்யறியார்
மெய்ஞ்ஞான மன்றித் தனைத்தா னறிவது வேறில்லையே. (௧௧௭)

இதற்கே தருமென் குணத்தின னுதலென் றேத்துமறை
இதற்கே தருமைந்து கிர்த்திய மாமென் றிறைஞ்சுமறை
இதிற்சத்தி யெத்தனை கோடிக ளெண்ணில வென்னுமறை
இதிற்குண மின்னு மளவிலை யென்னு மிருமறையே. (௧௧௮)

எதுவுந் தனதுரு வன்றென நிற்பது மிவ்வறிவே
எதுவுந் தனதுரு வாகியு நிற்பது மிவ்வறிவே
எதிலுங் கலந்துங் கலவாது நிற்பது மிவ்வறிவே
எதுவென்று சொல்லப் படுவது மென்பது மிவ்வறிவே. (௧௧௯)

ஒருபோது தூல மயமாகிற் காணு முலகுமங்ஙன்
ஒருபோது சாயா மயமாகிற் காணு முலகுமங்ஙன்
ஒருபோது பாழ்மய மாகிற் றெரியு முலகுமங்ஙன்
ஒருபோது மாகா ததுவது வாகு முணர்விதுவே. (௧௨௦)

உணர்வெம் மயமோ வுலகங்ஙன் றோற்ற லுணர்வதன்றோ
உணர்வெம் மயங்களை யங்கங் குணர்த லுணர்வதன்றோ
உணர்வன்றி யில்லை மயமெனி லெங்கே யுலகெனறோன்
உணர்வு மயமே பிறிதிலை யுண்டெனி லோதுமினே. (௧௨௧)

அவத்தாத் திரியமுங் காட்சியு முன்னி லறிவிலன்றோ
அவத்தாத் திரியப் பிரதி பலன மறிவிலெழும்
அவத்தாத் திரியம் ஸ்புரணையின் றர்ம்ம மறிவினிற்காண்
அவத்தாத் திரிய மறிவன்றி யெங்கே யுறியுமினே. (௧௨௨)

உலகிருப் பைக்கண் டதன்மய மாகு முணர்வதென்னு
துலகெனல் காணு முணர்வுல காயிலென் றோதலெவன்
உலகினை யாயி னணுவான தேதிங் குலகிருக்க
உலகிருப் புன்ன லளவே சுழுத்திகண் டோதுமினே. (௧௨௩)

அறிவறி யாமையென் றோரிரண் டென்ப ரறிவுடையார்
அறிவன்றி யில்லை யறியாமை யுண்டே லயலிதென
அறிவன்றிக் காட்டிங் கபேதம தேனு மதனியல்பால்
அறியகில் லேனெனிற் சொல்வேன் கருத்தா யறியுமினே. (கஉச)

அறியாமை யென்ப தயலே யறியு மறிவறியா
தறியாமை தன்னை யறிவென்று கொள்ளி லனர்த்தமதாம்
அறியாமை யேமிகக் கற்கினுந் தன்னை யறிகிலதால்
அறிவின் றிரிபே யறியாமை யாகு மயலல்லவே. (கஉரு)

அயலென்று போகஞ் சுகித்தல் தனையே யறிவதுதான்
அயலென்று கர்த்தா தொழுதல் தனையே யறிவதுதான்
அயலென்று ஞானஞ் சுகித்தல் தனையே யறிவதுதான்
அயலென்று காண்டல் தனையே பிறிதன் றறியுமினே. (கஉசு)

அறிவே பரமு மபரமு மாகு மயலதன்று
அறிவே யபர மெனறன்னை வேறா யறிவதுகாண்
அறிவே பரமென றன்னுண்மை தான்கண் டறிவதுகாண்
அறிவே பராபரம் வேறன்று தானே யறியுமினே. (கஉஎ)

ஞானமொன் றேமெய் யசத்தாம் பிறிதெனி னாயினெங்கும்
ஞானந் தனைத்தளி வேறொன் றிருக்க நவிலுகிலம்
ஞானவின் னிற்கய லுண்டே லளப்ப நமைக்கொடிவண்
ஞானவின் னிற்கள வின்றெனி லீதே நவிறெய்வமே. (கஉஅ)

அறிவினை யுன்னி லளவற்ற வின்ப மஃதன்றியும்
அறிவினைக் கண்டிடி லெவ்வள வென்ப மதுதெய்வமாம்
அறிவன்று வேறெனி லுண்டா மறிவுக் கயலதுண்டேல்
அறிவுக் குலகயல் போலுண் டிறையெனி னுய்குதுமே. (கஉகூ)

சங்கற்ப மன்றிச் சகத்துருக் காட்டிலை தானுவையோ
சங்கற்ப மன்றிநீ காட்டுவை போதுந் தவிர்கவிதைச்
சங்கற்ப மென்னல் நினைவினைப் பாவுமுஞ் சங்கற்பமே
சங்கற்ப மேயிவ் விரண்டும் பிறிதல சாற்றுமினே. (௧௫௦)

ஒன்று நினைக்கி லதுவொழிந் தொன்று மொருநினைவில்
ஒன்று நிலையல வெங்கே பதியென லுன்னினைவே
ஒன்று மலபதி யன்றி யிலையென லுன்னினைவே
ஒன்றுமுண் டோநினை வேமய மாகு முணர்வெங்குமே. (௧௫௧)

அறிவி னினைவும் நினைவி லுலகு மடங்குமிங்ஙன்
அறிவே யெவைக்கும் வியாபக மாகு மறியினெங்கும்
அறிவினின் மிக்க நிலையிலை யாது மதின்விகற்பம்
அறிவே பரதெய்வ மர்ச்சிக்கத் தக்க தறியுமினே. (௧௫௨)

அறிவின் சுவையைப் பரசுக மென்ப ரருந்தவரும்
அறிவி லெழுஞ்சிந் தனையறி வன்றே வயலதெங்கே
அறிவினிற் பாவித் ததைப்பர மென்று லதுபரமோ
அறிவே பரமென லோவய லோவிதை யாய்ந்துய்ம்மினே. (௧௫௩)

அறிவே யுலகன் றெனிற்பர முந்தா னறிவுருவன்
றறிவன்றிக் காட்டி லுலகைப் பரமு மயலென்குதும்
அறிவன்றிக் காட்டப் படாதெனி லெல்லா மறிவுருவாம்
அறிவே பரமெனற் கையமென் னீதே யருந்தெய்வமே. (௧௫௪)

அகோசர மென்பதென் ஞானம் பரமெனி லம்மறைகள்
அகோசர மென்றலு மெய்யே யதுவரற் காங்குறியீ
தகோசர மென்றுசொன் னலறு மோநம் மருந்துயர்கள்
அகோசர மென்னு மிதைக்கண்டு செய்துய்ம்மி னன்பர்களே. (௧௫௫)

மதத்தர் வழுத்துங் குறிகுண மெல்லா மருவுமிதில்
மதத்தர் குறிகள் குருடர் குறியொக்கும் வஸ்துவன்று
மதப்பெரு மைக்குக் கடவுள் வழுத்தென வைத்தகுறி
மதக்குறி யெல்லாங் குணியறி யாக்குறி மாயமிதே. (கஙசு)

இந்து மறைக்குறி யொன்றே குணிகண் டிசைத்தகுறி
இந்து மறைவல் லவர்க்கேன் றெரியா திதுகுணியென்
றிந்து மறைமுடி வோர்ந்து மறியா ரிதுகுணியென்
றிந்து மறையறி வேகுணி யாமென் றிசைக்குமதே. (கஙஎ)

சகுணத் துடனிர்க் குணமென்று சாற்றுஞ் சதுமறையுஞ்
சகுணக் குறிகள் குணிதனிற் காணிற் சரிகுறியாஞ்
சகுணக் குறியுங் குணியும் பிறந்திடுந் தன்மையதாற்
சகுணக் குறியறி வுக்கே தகுமிது சத்தியமே. (கஙஅ)

அறிவின் சகுணக் குறிகள் படித்தன மக்குணங்கள்
அறிவை யறியக் குறித்த குறியெனு மக்குணங்கள்
அறிவி னிலக்கணங் கண்டு நிலக்கி லகோசரமாம்
அறிவே பரசுயஞ் சத்தென்ப தாகு மறுதியிதே. (கஙகூ)

அறிவைப் படிப்பவர்க் கிக்குணம் வேண்டிடு மாய்ந்திடற்கு
அறிவைப் படிப்பது தன்னுண்மை காண்டிடற் கானகுறி
அறிவன்றித் தன்னுண்மை வேறெனிற் றன்னை யறிவதன்று
அறிவைப் படித்தென் னனுபவ மில்லார்க் கவலமதே. (கச0)

ஞானவிண் ணேபர மென்றே னறைந்திடு நான்மறையும்
ஞானவிண் ணேபர மல்லா விடிற்குற்ற நண்ணுமன்றோ
ஞானவிண் ணின்னிழ லேயுயி ரென்பது நாமலவோ
ஞானவிண் ணேபர மென்பதி லையமென் னுடுமினே. (கசக)

ஞானவிண் ணல்லா ரெவரு மிலையெங்கு நாடுகினும்
ஞானவிண் காணக் கடபட மென்றது டாடிலைசொல்
ஞானவிண் ணுயிடக் கற்றலு நிட்டையு நாட்டிற்றன்றே
ஞானவிண் ணேபர தெய்வம் பிறிதல நாடுமினே. (கசஉ)

எதைநா னெனினுஞ் சிதாசாய மாயிடு பெக்கருத்தும்
எதுசோன் றிடினுஞ் சிதாகாய மாயிடு மெக்கருத்தும்
எதையுன் னிடினுஞ் சிதாகாய மாயிடு மெக்கருத்தும்
எதுவுஞ் சிதம்பரஞ் சோதிக்கிற் காணிடு மெங்கணுமே. (கசங)

இருளாகத் தோற்றலென் ஞானவிண் ணுயிடி னெக்கருத்தும்
இருளன் றவிச்சின்னஞ் சின்ன மறைந்திட விங்ஙனமாம்
இருளாகத் தோற்றிட னட்டப் பிறழ்வே யிதுசுயம்பன்
றிருளை விளக்கலு ஞானவிண் ணேயிதி லேதையமே. (கசச)

சிதம்பர மென்றோ ரகசியத் தானத்தைச் செய்ததுவுஞ்
சிதம்பரத் தின்மே னிலையின் றெனமறை செப்பியதும்
சிதம்பரந் தன்னைக் குருவருள் செய்வது சிந்திக்குங்காற்
சிதம்பர மேபர தெய்வம தாமெனத் தேர்ந்தனமே. (கசரு)

சின்னஞ் சிதம்பரக் கற்பனை யென்பது செப்பெனிலோ
சின்னத் தடிப்பில சிற்கக னத்துறச் சிந்தையெங்குஞ்
சின்னத்தி னட்டந் தவிர்ந்திதை நாடிற் றெரியுமன்று
சின்னஞ் சிதம்பர மன்றி யிலையெனத் தேர்ந்தனமே. (கசசு)

வியாபக லட்சணஞ் சொன்னோ மினியாம் விளக்கமதை
வியாபகத் தன்னிய மன்றெனக் கூறி விரித்துரைப்பம்
வியாபக மன்று விளக்கத்துக் கன்னியம் வேற்றுமையேன்
வியாபகம் போல விளக்கமுங் கூறற்கு வேண்டியதே. (கசஎ)

விளக்க நனவில் ரவியாதி யாக விளங்கிநிற்கும்
விளக்கங் கனவின் மனவிளக் காக விளங்கிநிற்கும
விளக்கஞ் சுழுத்தியிற் சீவ விளக்கா விளங்கிநிற்கும்
விளக்கத்தை யன்றி யிவைமூன்றும் மில்லை விசாரிக்கினே. (௧௪௮)

விளக்கமில் லாத நினைவெங் கணுமில்லை மெய்ம்மையிது
விளக்குவ தேது நினைவின் றடிப்பை விரிந்தெங்கணும்
விளக்க மலவெனில் யாதால் விளங்கும் விளைபவைகள்
விளக்கத்தி ளுட்டம் விழுமே லெவையும் விளங்குமதே. (௧௪௯)

ஆன்மா சுயம்பிர காச மெனலை யறிவிரப்போ
தான்மாவை யன்றிப் பிரிய மிலையென லன்றறிவீர்
ஆன்மப் பிரியம தேயய வின்பமென் றன்றறிவீர்
ஆன்மா விளங்கிடி லெல்லா மயக்கமு மற்றிடுமே. (௧௫௦)

வியாபக மான விளக்கத்தை யன்றி விடயமிலை
வியாபக நாட்ட நிலைக்கி னிலைக்கும் விளக்கமுந்தான்
வியாபக மான விளக்கம தாயிடின் மெய்யறிவாம்
வியாபக மான விளக்க நமதுரு வேறில்லையே. (௧௫௧)

இந்நிலை போனிலை யெங்கணு மில்லை யிதுசத்தியம்
இந்நிலை யெல்லாக் கவலையும் போக்கிடற் கேற்றநிலை
இந்நிலை யெல்லாஞ் சுகமாய் விளங்கிடற் கேற்றநிலை
இந்நிலை வந்திடி லன்னிய மின்றி யிலகுமதே. (௧௫௨)

அன்னிய மாகா தறிவா விளங்கிடற் கானதிது
அன்னியஞ் சீவ சகபர மென்ன லறிவிகற்பம்
அன்னிய மெல்லா மறிவா விளங்கிடற் கானநெறி
அன்னிய மல்ல வறிவுமன் றுப்விடு மந்தத்திலே. (௧௫௩)

இதுவே முடிந்த நிலைமனந் தாக்கற் றிருப்பதற்கு
இதுவே சுகாசுகங் காணு திருப்பதற் கேற்றநிலை
இதுவே பிறவியிற் ருக்கற் றிருப்பதற் கேற்றநிலை
இதுவே சுயசுக மையத்தி னீங்கி யிருந்துய்ம்மினே. (கருச)

அங்கிங் கெனாது விளங்கும் விளக்க மவரவரும்
அங்கங் கதுவா யிருந்து மறியா ரகங்கரத்தால்
அங்கங்கு தம்மை யதுவா யறிவ ரகமதற்றார்
அங்கங்கு சோதிக்கிற் சிற்சோதி யன்றி யறிகிலமே. (கருரு)

அறிவின் ஸ்புரிப்பே சகமாதி மூன்று மறிஞருக்கு
அறிவுக் கயலே யனைத்தும் விசாரத் தகன்றவர்க்கு
அறிவல்ல வென்பா ரறிவுக் கயலே லவர்மொழிமெய்
அறிவா யனைத்தையுங் கண்டாற் பிறப்பிங் ககன்றிடுமே. (கருசு)

திரிபுடி யாமெனிற் சிற்சோதி நாட்டமுஞ் செப்பிடுதும்
திரிபுடி யெங்கே யயலொன்று மின்றிடிற் சின்மயமே
திரிபுடி யெங்கே திரிசய நாட்டஞ் சிதைந்திடுங்கால்
திரிபுடி யென்ன னினைப்பே பிறிதிலை தேர்ந்துய்ம்மினே. (கருஎ)

மெய்போல் விளங்கினு மெய்யல்ல பொய்யே விடயமெலாம்
மெய்யெனிற் சூனிய மாவதென் னுய்தலின் மீண்டுலகம்
மெய்போலத் தோற்றலென் வீணுட் கழிப்பம் விரும்பியிதை
மெய்யுணர் வேகிசங் கண்டாற் சுயசுகம் வேறில்லையே. (கருஅ)

விசார முற்றிற்று. ஆக-கவி-உஉக.

# விபரீதநிக்கிரகவாதம்.

## பேசுநிலை.

பசுபதி பாசமென் பாரல் வற்றைப் பலபடித்தும்
நிசவடி வீதென் றறியா ருலகை நிதமறிந்தும்
பசுபதி யென்னல் குருட ருலகைப் பகர்வதொக்கும்
வசையெனக் காட்டியுங் கேளாமை யென்னோ மடமையிதே. (௧)

மடமல வென்னி லுலகெனல் யாது வரக்கணக்கென்
னிடமெது நிற்றற் கெதுகாறு முண்டிதற் கெல்லையெது
உடலன்றி யார்க்குரித் தேதோ குணிகுண மோர்ந்திவற்றை
விடைதரி லேற்பந் தவறாது நும்மத மெய்ம்மையிதே. (௨)

மெய்ம்மை யுலகத் தியல்பைச் சொலப்புகில் வேதமுந்தான்
ஐம்பெரும் பூத மயமெனச் சொல்லி யலவலவென்
றம்பரு மெட்டா நிலையின தாமென் றுரைக்குமெனில்
இம்பரி னீவி ரறியாது சொல்வதென் னெட்டரிதே. (௩)

எட்டுவ தேதோ பொறிக்கெனின் மண்ணி னியலுருவஞ்
சுட்டிடி லேற்பம் விகாரத்தி லன்றித் தொடுகுறிதான்
கட்டம தென்னிற் பிறவு மலவோ கழறுவதென்
னிட்டப் பழியுண ராதித னுண்மை யிடுக்கணிதே. (௪)

இடுக்கணென் றாலெவ ருஞ்சுகிப் பானே னினிதினிதென்
றடுத்த வுடலன்றிக் காணு ரகமென லன்னவர்காண்
எடுத்த வுடற்பய னுற்றா ரறிவா யிலகுபவர்
தடுக்கா துலகினை யாயுமி னெங்கே தவறில்லையே. (௫)

தவறே யுலகின் பெனலென் றனையெங்ஙன் சாற்றுகெனில்
எவரோ தவறுத் திருத்தி யடைபவ ரெங்குமில்லை
சுவையாதி யைந்துந் தரலுல கென்னிற் சுயசொரூபம்
எவையோ வணுவணு வாமோ விசாரத்தி லென்னென்பனே. (ரு)

என்போ லெவரும் விசாரிக்கி லுள்ளத் திலையுலகம்
இன்புருப் போல விருக்கினுஞ் சான்றோ ரிலக்குவையார்
அன்பைக் கெடுக்கு மணுவணு வாக்கி லகன்றுலகில்
இன்பமுந் துன்பமு மில்லாமற் செய்யு மிதுதிண்ணமே. (எ)

இதுவது வென்னல் விசாரத்தின் பின்ன ரிலாததெவன்
எதுவும் விசாரத் தளவா வெவர்க்கு மிருக்குமன்றோ
எதுவு மிருந்த படிகொளல் மூடத் தியற்கைகுணம்
அதுவது வாகா தறிவா விளங்கிடி லானந்தமே. (அ)

ஆனந்த மல்ல திரிசிய வின்ப மனிர்தசடம்
ஈனந் தரற்கிட மெத்தவஞ் செய்யினு மெவ்வெவர்க்கு
ஞானந் தருசுக மேசத்து சித்து நசிப்பதெங்ஙன்
ஞானத்தை யன்றி யெதுவு மிலையென நாடுமினே. (கூ)

நாடிலெப் பூதமுஞ் சுத்த சடமெங்ஙன் ஞானமதாம்
தேடி லெவையும் வெறுமைய தாய்ப்பின் றிரிவதெவன்
ஊடுரு விச்செலில் ஞானம தாயிடு மோரிரண்டும்
ஓடுவ தன்றிக் கரியா மெவைக்குமென் றோர்ந்தனமே. (கo)

ஓர்ந்தவர்க் கன்றி யறிவா விளங்கிட லொன்றுறுமோ
சார்ந்து மெவற்றினுஞ் சாராது நின்றிடுஞ் சைதன்னியம
ஓர்ந்திட லங்கங் கவத்தாத் திரியத் துணர்வதன்றோ
தேர்ந்தன ஞானத் திரிபே யுலகெனச் சிந்திக்கினே. (கக)

சிந்தனை யில்லை செகத்து மிலையுனிற் சிந்தையன்றிச்
சிந்தனை யுண்டேற் செகமாதி யுண்டு திரியிலில்லை
சிந்தனை தோற்ற மொடுங்கற் கிடமில சித்தையன்றிச்
சிந்தனை யேபெத்த முத்தி முதலெனச் செப்பிடுமே. (கஉ)

செப்பிடி லிங்ஙனந் தேகத்தை நானெனத் தீர்ந்தனமோ
அப்பாதி பூதக் கலப்பென நாட்ட மடிக்கடிக்குத்
தப்பாது நின்றிடி லுள்ளத்திற் றூலத் தடிப்பருகும்
இப்பெரும் பூத மணுநாட்டம் வந்திடி லீதற்பமே. (கங)

ஈதக மென்றிடுந் தோறு முடலை யிதுசெய்திடில்
ஈதெனக் காணு தகன்றிடு முள்ளத் தெவர்க்கெனினும்
ஓதினுந் தேவதை பாவம தாயினு மோட்டிடுங்காண்
யாது முபாய மிலையிது வன்றி யியற்றுமினே. (கச)

இயலிசை நாடக வல்லமை யென்செயு மேற்றுமிதை
மயலுட னென்னல் வந்தது நம்மால் மடிவுநம்மால்
அயலா லெனத்தடுப் பார்மயல் போக்கா ரறிந்தவர்போற்
செயற்கரி தாமென வுன்னித் தொழுவர் சிறியவரோ. (கரு)

சிறியவ ரோமயஞ் சோதிக்கி லென்றுஞ் செகமுழுதும்
அறிவய னென்னல் கண்டறப் பாரிலை யாயினெங்கும்
வெறியர்க் குரைப்பினுங் குற்றஞ் சுமத்துவர் மெய்யரைப்போல்
நெறியிதைக் கண்டு வினைத் தவிர்ந்துய்ம்மி னேயர்களே. (கசா)

நேய முலகன் றறிவே திரிந்திங்ங னிற்பதன்றே
ஆயி லுலகை யறிவா முடிவதென் னையமற
மாய மறியார் பரத்தின தாக்கிடின் மாய்வதெங்ஙன்
தூய வறிவே செகமாம் பிறிதல சோதிக்கினே. (கஎ)

சோதனை யில்லார் பிதற்ற லயலெனத் தூயவர்பால்
போதத்தி னுண்மை விசாரித்துக் காணிடிற் பொய்யகலும்
பேதமு நீங்கிடுந் தானு விளங்கிடும் பின்னமெலாம்
யாதிதி லைய முளதே லகற்றுதி மிங்ஙனமே. (கஅ)

இங்ஙனஞ் சோதிக்கி லில்லை மயக்கெனி லீசனெது
எங்ஙனங் காட்டுவ னெட்டா தவனெனி லேனுரைப்பீர்
இங்ஙன மென்று குறிகொண் டெவரு மியைந்தபடி
உங்ஙன மென்றிட லெல்லாந் தொழற்கெனி னுண்மையிதே. (கசு)

உண்மை வடிவன் றெவையு மிறைக்கென் றுரைப்பதெவன்
உண்மை வடிவே யெவையு மிறைக்கென் றுரைப்பதெவன்
திண்மை நிலையெதிங் கெட்டா நிலையெனிற் செப்பலெங்ஙன்
நுண்மையி னுண்மை யெனினு மிலையோ நுவலுதுமே. (உ0)

நுவலுவ தெங்ங னிறையுள னென்று நொடித்தெவரு
அவனன்றி யாதும் வரற்கிட மின்றெனி னார்கண்டனர்
எவையுந் தமைத்தாம் படைக்கவொண் ணாதெனி லென்னமதி
எவையுண் டணுக்குழு வன்றிப் படைப்பென லேற்பமிதே. (உக)

ஏற்றற் கிடமுண் டணுக்குழு வாக்க லிறையதெனிற்
போற்றுவ தென்கொண் டெவரு மிறையைப் புகழ்மொழியால்
ஆற்றப் படாத்துயர் போக்கற் கெனிலிங் கடைந்ததெவன்
தோற்றிவ் வுலகா லெனிலெங்ஙன் பேரவது சொல்லுமினே. (உஉ)

சொல்லப் படாத்துயர் நானென தென்னத் தொடர்ந்ததெனிற்
சொல்லுதி யாதை யுடலாதி யென்னிற் சுயவடிவோ
அல்ல வெனிற்கொளன் மூடமன் றேவியல் பாகுமெனில்
அல்லல் விடும்பரி செங்ஙன் றெழுது மவலமதே. (உங)

அவலம தன்றருட் பேற்று லெனிவியல் பன்றறுமோ
அவனுனி லற்றிடு மென்னிற் றவஞ்செய் தடைவதெவன்
அவன்களித் தற்கெனி னம்முயல் வன்றி யவன்றருமோ
அவன்மேற் பழியென் னயஞானலறி லன்றறுமே. (௨௪)

அன்றய ஞனெனக் கொள்ளாது நிற்கி லயர்வதுண்டோ
இன்றேனும் பற்றறி லுண்டோ துயர மிறையளவும்
நன்றிது வென்பர் மதத்த ரெவரு நயந்துமிக
அன்றறி வாமெனிற் சாவெத் தருண மறிகிலமே. (௨௫)

அறிந்தேன் றுயர்க்கு மருந்தென் முயல்வென் றகமகிழ்ந்து
பிறிந்திட லெங்ஙன் றனித்தெனிற் கேட்டி பிறநினைவின்
றுறங்கிடிற் றேக முணராமை கண்டனை யுன்னுருவன்
றறிந்திடு நீசித் துடல்சட மன்றோ வகன்றுய்ம்மினே. (௨௬)

அகன்றிட லெற்கிங் கரிதரி தைய னடியிணையை
யுகந்தரிச் சிக்கி லவர்பார மென்றன னுத்தமன்போற்
பகவா னெனற்கிங் கிலக்கிய லட்சணம் பார்த்தறியாய்
சகம்போற் றெளிந்தனை யீதும் பிறிதொன்று சாற்றுதுமே. (௨௭)

சாற்றுவ தெப்பொருள் யான்யா னெனவெங்குந் தானலதை
சோற்றுத் துருத்தி முதலைந்து கோசமுஞ் சோர்வுளதான்
மாற்றிச் சுயநிலை யீதென்று சொல்லென வாய்திறத்தற்
காற்ற லிலாது வறிதிருந் தான்கண் டறைந்தனரோ. (௨௮)

அறையப் படாதென வோதினை யுன்னுரு வாச்சரியம்
இறைநிலை நீசொல லிங்ஙன மாகு மெவர்மதமும்
மறைகளு மிங்ஙனம் வல்லரு மிங்ஙனம் வாஸ்தவந்தான்
இறையள வேனு மிலையிலை யெங்கு மிதுதிண்ணமே. (௨௯)

அதுதா னிலக்கியம் லட்சணஞ் சோதனை யென்றுணர்ந்து
பதிபசு பாசம் விதித்தனர் சான்றோர் பகரறியீர்
நிதமுங் குருக்களென் றேமாத்தி மூடர் நிதிபறிப்பீர்
கதிநர கேயிதி லையஞ் சிறிதில காட்டுதுமே. (௬0)

காட்டு மிலக்கண மேற்கு மிலக்கியங் காட்டறியீர்
நாட்டிய பாடைக் கிலக்கிய லட்சண நண்ணுதல்போல்
ஏட்டறி வீர்நுமக் கெங்ஙனம் வாய்க்கு மெவருரைப்பார்
நாட்டமு ளாரடி காட்டிடு மிந்நெறி நாடுமினே. (௬க)

நாடிடி னுங்குறி வானத்திற் சித்திர நல்லணியோ
டாடை யுருவே யிலாட்கிவை மூட னமைத்தலொக்குந்
தேடப் படானெனில் யாவரும் லட்சணஞ் செப்புவதென்
தோடந் தவிரத் தடுத்தாள்வ னென்றிடிற் சொல்லுதுமே. (௬உ)

சொல்லிலக் கின்றேல் மனலக்கு மில்லை தொழுவதெங்ஙன்
இல்லை யெனத்தகுங் காட்டு முலகே யிருப்பதுவா
இல்லையுண் டென்ப மிதுமாயை யாமெனி னேற்பதெங்ஙன்
சொல்லில னென்னி னுனக்கேன் குருத்தனந் தோடமிதே. (௬௩)

தோடம தாயிடு ஞாயமொன் றின்றித் தொடர்சமயந்
தூடணை நும்முள் வரற்கிட மேது சுயம்புவெனில்
ஏடுமக் கென்ன கதிதரும் போய்வந் திசைத்தவரார்
நாடுமி னெஞ்சொலை யின்றே பரசுக நண்ணுதுமே. (௬௪)

நண்ணுவி ரின்றே பிரம சுகத்தை நவையதின்றிப்
பண்ணிடி னிட்டை குருவாக் கியப்படிப் பார்வைமிசை
எண்ணமு மிச்சையு மெல்லா மிறக்கு மெமதுருவாங்
கண்ணெங்கு மாயிடுந் தானாக நின்றிடுங் காணுமினே. (௬௫)

காணிடி லுண்மை யறிவே பிறிதல கற்றிடினுங்
கோணை பெரிதுடைத் தாம்பிற வென்னிற் குலைக்குமதி
வீணுக் கிழப்ப மவைநம்பிச் செய்வினை மெய்வருந்திக்
காணிலி ரோவிவை யெல்லா நினைப்பெனக் கட்டறுமே. (௩௬)

அறுமோ நினைப்பு மறப்பயன் மூன்று மறுதியெனில்
உறுதியென் னிப்போ துணர்த்துதி மெய்யே லொருமொழியால்
அறிவுக் கறிவெனின் மேன்மேலு மிங்ஙன மாகுமன்றே
அறிவற்ற மூடர்க் குரித்தா மிதனை யகன்றுய்ம்மினே. (௩௭)

அகமென லெவ்வறி வவ்வறி வெல்லை யளர்ந்தறியீர்
அகமிவ் வுடலள வாமேற் பருவத் தளவெதுவோ
அகமெனன் முன்ன ருடலள வாயி னகன்றனமோ
அகமெனல் சித்தே யதுவள வாமெனு மாகமமே. (௩௮)

ஆகம் பவுதிக மாமேற் றனதுரு வாக்கலெவன்
தேகியன் றேவிதை நானெனல் காத்தல் சிறப்புசெயல்
மோகித் துழறல் சுகதுக்க மெய்தல் முறைகொளுதல்
ஆகத்தை யன்றி யறியே னெனையென லன்றியுமே. (௩௯)

அன்றென லாமென வின்றென லுண்டென லன்புகொளல்
நன்றென றீதென ஞானீ யவனென நாட்டமுறல்
ஒன்றென லன்றென லிங்ஙன மாக வுரைப்பதெவன்
இன்றே யுயிரெனி னாஸ்திகர் மூடத்தை யென்சொல்வனே. (௪0)

என்னதென் பானே னுடலை யுயிர்க ளியற்கையெனின்
இன்னது யாதுக் குயிர்க்கெனி னென்று மிருப்பதன்றே
அன்னது காணப் படாவகை யேதெனி லாங்குலஃரப்பஞ்
சொன்ன விருப்புக் குளதேற் றடையிங்கு சொல்லுமினே. (௪௧)

சொல்லுது மிப்போ துளதா வுயிரெனிற் சொந்தமதாச்
சொல்லுதல் யாததற் கிப்போது வந்தது தூலமன்றோ
பல்லுடல் வந்து தவிர்த லியற்கை பலவுயிர்க்கும்
வெல்லுவ தெங்ஙன மெம்மொழி மேற்செலல் வேறில்லையே. (௪௨)

வேறுசொல் லாலிதை நாட்டப் புகிலோ விவர்த்தமதாம்
கூறுவிர் நீரும் பசையற்ற சாரங் குதர்க்கமதா
மாறுவிர் சொல்லாற் றெரிந்தவர் போல மயக்கறுமோ
ஆறுத லேயிலை நுஞ்சொன் முடிபிங் ககற்றுதுமே. (௪௩)

அகற்றோ மனமலை யாநிலை சொல்லி னனவரதந்
திகைக்கப் புகல்வீர் திருத்தி வழாநிலை செப்பறியீர்
மிகுத்துரை நாஸ்திக மாஸ்திகம் விட்டு விளக்குமெது
அகத்தி லுனியுனிக் காணிடிற் றீரு மனர்த்தமதே. (௪௪)

அனர்த்த மெனலைந்து கோசு மிவற்றை யலவலவென்
றுனித்தவிர்த் திட்டுத் தனிநின்ற சித்தை யுயர்குருவாற்
றனித்திடிற் காண்பை சுயஞ்சோதி யாகச் சகமுழுதும்
இனித்த சமாதியிற் காணென் மொழிகைய யிதுதிண்ணமே. (௪௫)

இதுவே சுகநிலை துக்கந் தொலைதற் கியைர்தநிலை
மதிமலை வற்றுத் துரியம தாக வதியுநிலை
பதிபசு பாச மெனும்பகுப் பற்றுப் பரவுநிலை
கதியென வின்றிச் சிதானந்த மாகும் கடைநிலையே. (௪௬)

நிலையென லொன்றே பராபர மற்று நினைப்புமறப்
பிலையுண் டெனலற்று யானென தென்னு மிருப்புமற்று
அலைவாதி யற்றிச் சுகாசுக வேரி னடியுமற்றுத்
தொலையா நிலையது வாமென்பர் மேலோர் துணிந்துய்ம்மினே, (௪௭)

உய்யும் வகையிலை ஞானத்தி னுண்மை யுசாவதறில்
மெய்யல யாவு மறிவன்றி யெங்கணும் வேதித்திடின்
ஐயன் றிருப்பணி செய்யினு மெய்யை யறியவொண்ணு
தையந் திரிபொழி வுக்கிட ஞான்மறியுமினே. (சஅ)

மின்னொத்த வாழ்வை நிசமென்று நம்பி விடயசுகம்
பன்னெடுங் காலஞ் சுகித்தார் துயரே பயனதென்றூர்
என்னது யானெனற் கெங்கே சுயவடி வேற்றிடினும்
இன்னதை யுன்னிட லென்றூே வறிகில னென்செய்வனே. (சகூ)

வனிதாதி போகங் களையினு மென்னு மயக்கறுமோ
அனியத்தை யானென லுன்னூர் துறந்த வகமதனுன்
மனவர்க்க நின்றிடும் யோகம தேனு மயக்கமறூ
தனைத்தான் விசாரித் தறியார் முரட்டுத் தனமிதுவே. (ருo)

இதுயோக மென்ப ரிதுகட்ட மாகு மிதன்பயனே
மதிவர்க்க நின்று சுசவாரி யாழ்ந்து மலைநிகர்த்து
எதினுஞ் சலியாத் தறிபோ லுடலை யிருத்திடல்காண்
கதிவா னவரிற் சிறந்தவ ராவர் கடைமுடிவே. (ருக)

முடிவான ஞானம் வரற்கிது சாதன முக்கியமாம்
அடிமுடி வில்லா வறிவி னளவை யறிபவரார்
மடைய ரிதனை யணுவென் றுலகை மதித்துவப்பார்
அடைவர் துயரைச் சுகமென்று நம்பி யலைவதுவே. (ருஉ)

அலையு மனத்தை யடக்கறி யாத வளவின்மதம்
நிலையுண்மை யீதெனக் கோடற் கிடமிலை நிச்சயமா
மலைதற் குரிய ரொருவர்க் கொருவர் மதவழக்காற்
கலையள வுக்கள வில்லை நிரந்தரங் காணுமினே. (ருங)

காணிடி லெங்குஞ் சுயஞ்சோதி யேயிதைக் காண்பதெவன்
ஆணலி பெண்பெரும் பூத விகற்ப வனர்த்தமதாஞ்
சேணல நம்முள் கயிற்றர வொக்குந் திரிபிவைதாம்
வீணிற் கழிக்கிற் பிறப்பெங் ககல்வம் விரைந்துய்ம்மினே. (௫௪)

விரையா தியைந்து சுகந்தனை வேண்டி விழுவதெல்லாந்
திரிபுடி பேத மறிவா விளங்கிடத் தேருமட்டுந்
தெரிகிலி ரோதவம் பூசை விதிமுறை செய்துமென்ன
அரிய முயற்சி பிறிதன் றதுவே யறிந்துய்ம்மினே. (௫௫)

அறிந்தில நம்மைச் சுயம்பா வுலகை யறிந்தனமோ
அறிதலி லுள்ள வனர்த்த நமதே யகன்றனமோ
இறையுள னென்று மிலனென்றுஞ் செப்புத லென்னமதி
பிறவியில் மானிடர் புத்தியிற் பேயொப்பம் பேசுமினே. (௫௬)

பேசுவ தென்னுள தொன்றையொன் றுக்கொளும் பேதமையோ
டாசை யுளது குருத்தனஞ் செய்ய வறிந்ததென்ன
மாசற்ற சோதி பரம்பொரு ளென்பம் வழக்கத்தினுற்
காசிக் குதவேஞ் சிறந்தோ மடையாரிற் காணுமினே. (௫௭)

காணில நம்மை யுபாதித் திரியங் கழற்றியெங்கும்
ஆணலம் பெண்ணல மேனையு மல்ல மகப்படினும்
தூணெப்ப மாய்தலிற் போகத்திற் றேர்வஞ் சுறுசுறுப்பாய்
நாணமி லாதென் புலவீர் விசாரத்தி னண்ணுமினே. (௫௮)

நண்ணும் பொருளிடங் காலம் பரமுயிர் நம்மறிவென்
றெண்ணற்கு ஞாய மனுபவங் காட்டுது மென்னதடை
பண்ணற் கிறையுள னென்னின் மயக்கம் பயந்தவரார்
எண்ணிடிற் பாவனை யேயொன் றுமில்லை யிதுதிண்ணமே. (௫௯)

இதுவது வென்ப தெமது மயக்கே யிசைத்திடுதும்
மதிவிகற் பன்றி யிதுவது வில்லை மதிவிகற்போ
எதையும் பொருளென் றலவற்றைக் கோட லிலக்குவைத்துப்
பதிபடைப் பெட்டோ நமது படைப்பே பகருதுமே. (சுo)

பகருது முன்ன ருடலினை யீசன் படைப்பென்றிடல்
அகமெனல் போதற் கிடமென் னுடலை யருந்தவத்தால்
இகர்தா ரெனிற்கதை யுத்திக் கிடமிலை யெம்மதத்தும்
அகஞ்சுத்த மாதற் கிடமன்றி வேறிலை யாய்ந்திடினே. (சுக)

ஆய்ந்திடிற் சுத்தம் பிறவிட யங்களி லாசையறல்
மாய்ந்திடு மோமய லொன்றையொன் றுக்கொளு மானதத்தின்
ஒய்ந்தன ரில்லை பசையென் றுலகி லுறுமலுப்பாற்
றேய்ந்திடு நம்மால் விளைமய லாதலிற் றீர்வையிதே. (சுஉ)

தீர்வெனற் கைய முளதே லுடலெனச் செப்பலெதற்
கோர்பொரு ளில்லை யவயவ மன்றி யுறுதியதாப்
பார்முத லன்றி யவயவ மில்லை பகர்வதெவன்
ஓர்முத லென்றுட லான்மாவின் கற்பித முண்மையிதே. (சுஙு)

உண்மை யெனக்கொளல் கற்பித மன்றோ வொருமுதலோ
நுண்ணுணர் வெங்கே படித்திது நானென நோக்கலெவன்
கண்ணிலர் போலு நுமது புலமை கடையுடலை
மண்ணுரு வழக்கொளின் காமர்தி யென்செயு மாய்ந்திடுமே. (சுச)

மாய்ந்திடு மென்றிட லுத்திக்கு மாறென் வகையதுண்டேல
ஆய்ந்திட வம்மி னகற்றுந் துயரை யளவிலின்பந்
தோய்ந்திடச் செய்திட லிம்மையிற் காணுதுஞ் சோதனையிற்
காய்ந்திடு வீரிதை யுன்னில் மடமை கழலுமதே. (சுரு)

கழலும் வகைமய லிங்ஙன மாகக் கடைப்பிடியீர்
பழைய கதைக ளுரைத்தென்ன கண்டீர் பயனிடும்பை
விழைவீர் மயலை நுகர்ந்துந் துயரை மிகவுமெங்கும்
நுழையாத தென்னோ வெமது மொழிசற்று நோன்மையிதே. (சுசு)

நோவ தெவரும் விசாரப் பழுதா னுவல்வதெவன்
பாவனை பந்தம் விடுதி யிருவகைப் பாகமதாம்
யாவரும் போகத் தகலாத சிந்தைய ரேன்விடுவர்
ஓவலின் ஞானி விசாரத் தகலா ருறுதியிதே. (சுஎ)

உறுதியி தன்றே லுபாதிய தாக லுறுதியதோ
பெறுசுகம் வேறு நிலையில தாகும் பிறவிதொறும்
பிறிதே யகமுன் சுகமுமென் றூற்பின் பிழைப்பதெவன்
பிறவியில் மானிட ராக்கொள்வ தென்னோ பிழைபிழையே. (சுஅ)

பிழையென் றுணர்தல் புலவர்க்கு மில்லை பிறருரைத்தென்
மழைபோற் பொழியினுங் கேட்கத் திறமின்மை வல்லமையோ
மழைத்துளி யொத்தும் படியார்க் கொளிர்வது வல்லமையோ
உழைப்பூ ழெவர்முன் வயத்தது ஞான முணருமினே. (சுகூ)

உணர்வின் விரிவி லிலாதொன்று மில்லை யுணர்வதனுக்
கணிமையுஞ் சேய்மையு மன்று விகாரமு மன்மையுமன்
றணுவணு வாக விசாரித் ததையு மகன்றுநின்று
புணரா தெவைக்குங் கரியா விளங்கிடல் போதமதே. (எo)

பொதுநிலை முற்றிற்று.

ஆக - கவி - உகூக.

---

# து வி த ம்.

போதத்தி னுண்மை யறியா ரிரண்டென்பர் போதமதைப்
போதஸ் புரிப்பே பிரமாதி யென்பம் புரையதென்றே
ஓத வறியீ ரனுபவப் பேறுகொண் டோரிரண்டென்
றீதுண்மை ஞானமென் றுனகை யாரிலை யெங்கணுமே. (௧)

எங்கணு நானென லாயிடி லொன்று யிலகலன்றே
எங்கே தனதுண்மை காணத் துவித மிருப்பதுண்டோ
சங்கை மயமது நீர்சொலு ஞானந் தனிப்பதெங்ஙன்
அங்கலிங் கத்தி னொருமை விசாரித் தறியுமினே. (௨)

அறிவைச் சிறிது பெரிதென் றுரைப்பீ ரளவெதனாற்
குறிகுணஞ் செய்கை யுபாதிய தாலெனிற் கொள்ளுதும்யாம்
அறிவெதற் கெந்தப் பிறவி யுரித்தோ வதையுணர்த்தில்
அறிதற் கரிதெனி லேனிந்த வாத மகலுமினே. (௩)

அகலாப் பிறவி யுயிர்க்கெது வேனு மகன்றகன்று
புகுதற் சுபாவ மதனாற் றுவிதம் புகல்வமெனிற்
சுகதுக்கம் போனிலை மாறும் பிறவியுஞ் சொந்தமல
அகமென லெப்பொரு ளப்பொரு ளாய்குது மாத்தர்களே. (௪)

ஆத்த ருயிரை யறிவாத் துணிந்தன ராய்ந்துதமுள்
சாத்திர முத்தி யனுபவ மொத்துத் தடையதின்றி
நீத்துப் பிறிதெனிற் சங்கற்பம் பாழென நிற்குமன்றே
ஒத்துக் கருத்தெனிற் பக்குவத் தாலென் றுணர்த்துமதே (௫)
உணர்வெனக் கொள்ளி லுறக்கத்தி லெங்கே யுயிர்க்கெனிலோ
உணர்ந்தங்கு பாழென் றுரைப்ப தெதுவோ வுபயமுண்டோ
உணர்வே னொருபடித் தாவில்லை யென்னி லுயிர்தருமம்
உணர்வெதற் குண்டோ வொருபடித் தென்னி லுரைக்குதுமே. (௬)

உரைக்கப் படாவிபு வான்மாவுக் கென்ப ருயர்குணத்தோர்
தெரிக்கி லுயிரைச் சிதாபாச மென்பதென் செப்பெனிலோ
சொருபஞ் சிறிதா விசாரத் துயிர்க்குச் சுருங்கியப்பாற்
பரம்பொரு ளாகிய வான்மா வெனல்வன் பார்த்துய்ம்மினே. (எ)

பார்முதல் யாவு மறியப் படுபொருள் பற்றியுனில்
தேர்து முயிரை யறிவெனற் கையஞ் சிறிதுமிலை
ஓர்முத லன்று யுயிர்சோ தனையி லொழிந்துணர்வாய்
நேர்கீ ழுயர்வின் றொளிர்வதென் னான்ம நிலையென்பதே. (அ)

நிலையறி யாரிரண் டென்பதை யொக்கு நிகழ்த்துநிலை
கலையோதி யென்பயன் றன்னிலை காணார் கசடரொப்பர்
நிலையி லவத்தை தொறுநின் றறிவது நின்மலமாய்
அலைவின் றியபர மான்மா வெனப்படு மந்தத்திலே. (கூ)

அந்த வுணர்வின் பிரிதி பலன மளவி லுயிர்
சொந்த வுழப்பாற் றெரியு மெவர்க்குஞ் சுயம்பிதுவென்
றெந்த விதத்திலு மொன்றே யுணர்வென் றிசைக்குமறை
பந்தத் தகலீ ரிரண்டெனி லையம் பசருமினே. (க0)

பகரோம் பதிபசு பாசத்தைப் பொய்யெனப் பார்த்திருக்க
அகமென் றுடலு முலகத் தமிச மகன்றனமோ
இகத்தி லெவருண் டலன்றிக் காண்பா ரிலையெனிலோ
அகமுட லென்பதெங் கேயுறக் கத்தி லிறையுமினே. (கக)

அறைது மனமிலை யாலுட லின்றே வனைவருக்கும்
அறியப் படாதெவ னங்கங் கெவர்க்கு மனுதினமும்
அறியு மனமிலை யென்னி லுடலய லாகுமன்றே
அறிமின் மனமுள் ளளவுண் டுலக மனுபவமே. (கஉ)

அநுபவ மாயினு மெங்ஙன மிவ்வுல காகுமனந்
தனுவாதி கட்குள தத்தங் கருவி தனித்திருக்கத்
தினைத்துணை யேனுஞ் சரியெனற் கில்லெனிற் செப்புதும்யாம்
மனமோ வறிவின் ஸ்புரணம தாகு மதியுமினே. (கங)

மதித்திட லெங்ஙன மென்னிற் றெரிவே மனமதெனல்
எதுவுந் தெரிவன்றி யெங்கே யிருப்பென் றிசைப்பதெவன்
அதுவிது வெல்லாந் தெரிவின் றிரட்டிப்பே யயலதன்று
பதிபசு பாசமுஞ் சங்கற்பம் வேறல பார்த்துய்ம்மினே. (கச)

பார்த்திடி னுள்ளஞ் சகமாதி யன்று பரிணமிப்பு
தீர்த்திடல் கட்டந் தவமாதி யாலுஞ் சினந்துமிக்
ஓர்த்துளக் கற்பித மீதென்று கண்டிட வோடிவிடும்
பேர்த்திடுந் தந்திர மீதன்றி வேறில பேயர்களே. (கரு)

பேயரின் மூன்று மனுதிய தென்பீர் பிணக்கறுக்கீர்
தூயசிற் சோதியை யன்றி யிலையென்பஞ் சோதனையால்
ஆயி லிவற்றை யெதுதுன்ப நீக்கு மறியவம்மின்
ஞாயத்தை முன்னிட வுண்மை விளங்கிடு நண்பர்களே. (கசு)

நண்ணும் பிறவிக ளெத்திறத் தாயினு நாமலவென்
றெண்ணுவ தென்றோ விறையு நமதுரு வெட்டறியீர்
மண்ணுரு வாகி மறந்து பிதற்றி மகிழ்ந்திருப்பீர்
நுண்ணறி வில்லீர் தனைத்தா னறிய நுவலுமினே. (கஎ)

நுவலுவ தென்னுள வெல்லா மசத்தெனி னுண்ணுணர்வால்
அவலம் பலமே யுமது மொழியெனி னல்லவற்றை
நவநவ மாக்கொடு நில்லாது சித்த நலிவதுவோ
அவல மிலாமொழி போதிக்கப் புக்கீ ரசத்தியமே. (கஅ)

அசத்திய மாமோ சகமாதி மூன்று மனுதினமும்
நிசமா யெவரு மறிந்தே யிருக்க நினைவிழந்தார்
இசைப்பதை யொக்கு நுமது மொழியெனி னிவ்வுலகை
நிசமா யிருக்கப் பரிசோ தனையி னிகழ்த்துமினே. (கசூ)

நிகழத்துவ தெற்றுக் கெதிரி லிருக்க நிலமுதல
மகத்து சுயம்பே லணுவா முடிந்துபின் மாகமதா
விகத்து நினைவா யிலகுவ தென்னோ விருப்பதெனின்
மகத்தாகக் காணு நினைவது வாகிடின் மானிடரே. (உ0)

மானிட ரென்பவர் மெய்ம்மை யுணர்ந்தவர் மற்றவரோ
ஞானம் பலகற்று மெய்திலர் மெய்ந்நிலை நாட்டமது
ஈன முறுமிது வல்லா நிலையினு மென்னுயர்ந்தும்
நானெனு முண்மையை யெங்ஙனங் காண்பர் நடைபிணமே. (உக)

நடையினிற் சற்சனர் போலினு மென்னு நனவறியார்
படிப்பி லுயரினுந் தன்னுண்மை கல்லார் பயல்களொப்பர்
அடுத்த வெவையு நிசமென்று காண்பவ ரல்லலுறுர்
எடுத்த வுடலிது வீழினென் செய்வ ரியம்புமினே. (உஉ)

இயம்புதல் ஞான முடிபெனக் கற்ருே ரிசைப்பதெவன்
மயலகற் றற்கே பிறிதன் றறிஞர் வகுத்ததுகாண்
இயலிசை நாடக மேனு மெடுப்பா ரிஃதுரைக்கி
லயலதை நீக்கி யறிவே விளக்க வறிந்தனமே. (உங)

அறிவெனன் மேல்கீ ழிடையொப்ப தாகி யவையலதாய்
அறிவறி யாமைப் பகுப்பா யலதா யனைத்தினுளும்
நிறைவாகித் தாக்கற் றெவைக்குங் கரியா நிலையதெனல்
குறைவறப் பெற்றவர் ஞானிய ரென்பங் குருடர்களே. (உச)

குருடரை ஞானியென் பீரெங்ங னேற்பங் குழறியநூல்
மருளே பிறத்தற் கிடமெங்ங னென்னில் வகுத்துரைப்பந்
தெரிவெனச் சொல்வீர் விசாரத் தெரிவைச் சிவமதத்தீர்
திரிவித நித்திய மென்பீ ரதனுந் தெளிந்தனமே. (உரு)

தெளிந்த முடிவே சிதம்பர மென்ற சிவமதத்தர்
அளந்தள விட்டதென் மூன்று மநாதி யழிவிலதென்
றுளந்தெளி வாதற் கிடமிலை கண்டீ ருமதுமதம்
பளிங்கெனத் தேர்ந்தன ஞானவிண் மெய்யெனப் பார்த்துய்ம்மினே.

பார்த்தறி யீரிதைச் சொல்லா லறிவீர் பயனதெவன்
தீர்த்தற் கிடமிலை முக்குற்ற ஞானத் திடமதெவன்
போர்த்த மயக்க மறிவினைக் கண்டிடிற் போயகலும்
ஓர்த்தெது மெய்யெனச் சோதிக்கி லுண்மை யொளிருமதே. (உஎ)

ஒளிவெளி யாகித் தெரிவாய் நிறைந்த வுணர்விதெனத்
தெளியா தடுக்கிச் சிவசீவ பேதந் தெரிந்தவர்போல்
உளதாகச் சாதித் தொழிந்தாரை ஞானியென் றேதலெவன்
உள்ந்தெளி வுற்றதற் கீதோ வுதாரண மோதுமினே. (உஅ)

ஓதிடின் மூன்று மநாதிய தென்றிங் குணர்ந்தவர்போல்
யாதுநீ யல்லை யிலையொன்று முன்னைவிட் டென்பதெவன்
சோதிய தாகிய மாணிக்க வாசகத் தூயபிரான்
போதமொன் றேமெய் யொழிந்த வனைத்தையும் பொய்யென்பமே. ()

பொய்யெங்ங னாகு மனைத்து மெதிரிற் பொதிந்திருக்க
மெய்யெங்ங னாகு மெதுவு நிலாதென் விசாரணையிற்
பொய்யெங்ங னயின முன்போ லிருக்கப் புவியனைத்தும்
மெய்யென லெங்கே விகாரத்தை யன்றி விசாரிக்கினே. (ருo)

விசாரத் திலாததூ முன்னிருப் பானேன் விதமுணரில்
நிசமிலை யொன்றிலொன் றுள்ள துணர்வே நிலையிரண்டில்
இசைய வதுவது வாக விளங்கலு மிவ்வறிவே
அசத்தே யெவையு முணர்வே நிசமென் றறிந்தனமே. (௫௧)

அறிவன்றி யாது மிலையென்ப தெங்ஙன மையவெனின்
எறிதிரை யாதி புனலன்றி யுண்டே லிதுவுமுண்டாம்
அறிகுறி யாத லனைத்துந் திரிபென் றறிவதெங்ஙன்
அறிவென் றறிவ தெனிலதைக் கேண்மி னறிஞர்களே. (௫௨)

அறிவன்றி யாது மிலாதென் விசாரத் தவரவர்க்கும்
அறிவே யனைத்துமென் றோர்ந்தனஞ் சற்றுமிங் கையமின்றி
நெறியன் றெனினிது மாற்றும் வகையெது நெப்தியன்றிப்
பிறிதாகத் தோற்றலெ னெங்ஙனந் தேரினும் பேருலகே. (௫௩)

பேரு முருவும் விசாரத்தி லெங்கே பிறிதென்றிடில்
நீரொடு நீர்கலந் தொப்பே னறிவி னிலையுணர்கால்
யாருந் தனது மயக்கே னறியா ரெதுவெனினும்
பேரும் வகையுள தோவிதைச் சொன்மின் பிணக்கறவே. (௫௪)

பிணக்கற லெங்ஙன் சமயப் பிசாசர் பிதற்றுநிலை
கணங்கொடு தத்தமுள் கண்டவர் போலக் கடையிலதை
இணங்குத லென்றே தனையன்றி யின்றென் றிறும்வழக்குப்
பிணந்தனை யானெனுங் காட்சிய ரன்றிப் பிறிதிலரே. (௫௫)

பிறிதென லெங்கே யறிவினைக் கண்டிடிற் பின்னமின்றி
அறிவினைக் காணு வளவு மயக்க மகல்வதெங்ஙன்
நெறியே விசாரித் தவரேனு மெய்ம்மை நிகழ்வதெங்ஙன்
அறிகிலி ரோமறை ஞான முடிவென லந்தத்திலே. (௫௬)

அந்தத்தின் ஞான மறைந்ததெற் றுக்கெனி னல்லவெலாஞ்
சொந்த சுகத்தை யுரையாது பற்றித் துணிவுபெறல்
எந்த விதத்தெனி னன்னிய மில்லென வெங்ஙனெனிற்
பந்தம் விடுதி யறிவன்றி யின்றெனப் பார்த்தனமே. (௩எ)

பார்க்கு முறையெங் ஙனமெனின் யாதோ பரந்துலகா
யார்க்குந் தெரிந்து மறைவது காணீ ரிசைப்பதெங்ஙன்
போர்க்கே யுரியநீர் நுண்ணறி வில்லீர் புறம்பனைத்துந்
தேர்ச்சியை ஞானமென் பீரிதை யெங்ஙன் றெளிவதுவே. (௩அ)

தெளிவது யாரோ வெனினயல் தோடந் தெரிந்தவற்றில்
உளமது பற்றா ரவரென யாதா லுரையெனிலோ
அளந்தன ரெல்லா மறிவின் றடிப்பென் றகம்புறமும்
விளிந்து மயலதை நாடார் சிறக்கினு மேலவரே. (௩௯)

மேவலர் கீழவ ரெல்லா மறிவன்று வேறதெனிற்
சாலத் துயர்சுக மங்கங் குணர்வது தானதன்றோ
கோலப் பிறவிமட் டேயவை யன்னியங் கோலமன்றோ
காலத் தளவது கோலமும் வேறன்று காணுமினே. (௪0)

காணிடி லெல்லா வறிவுமொன் றென்று கணித்ததிதால்
பூணும் பிறவிமுன் னிட்டறி வைக்கொளல் போதமன்று
காணும் பிறவி யறிவுக் கதனுற் கழன்றுணரில்
கோணலெங் கேயறி வொன்றெனற் கில்லை குறியுமினே. (௪க)

குறியறி விற்செலப் பேத மகன்று குறையதின்றி
நெறியே வெளியொளி போதம தாகி நிகழ்ந்திடுங்காண்
அறிவென வீதே பிறிதெனல் கற்பித மையமில்லை
சிறிதும் விகற்ப மிலாதிதைச் செய்ம்மின் சிவோகமிதே. (௪உ)

சிவோகமென் றிங்ஙனஞ் செய்யாது சொல்வர் சிவமதத்தர்
அவமே பயனிலை வேடமும் பூசையு மல்லலெங்ஙன்
தவறு மிதுவே பிறமதத் தர்க்குஞ் சகமயக்கம்
எவர்க்கு மகல்வ தரிதரி தாகு மிதுதிண்ணமே. (௪௩)

இதுவது வென்பன கற்பித மன்றென் றிசைப்பதெவன்
எதுவும் விசாரத் திலாமைக் கிடமென் னிருப்பதெனில்
மதியிலர் போலப் பிதற்றின் மதத்தான் மயலறுமோ
பதிபசு பாச மறுதிய தெங்கே பகடிகளே. (௪௪)

பகடிக ளன்றேற் சுழுத்தியி லெங்கே பதிமுதல
புசவிலை யெங்கு மறியாத தாலெனிற் போந்ததெவன்
மிகவிழிப் புக்கண் ணுணர்விலை யென்னில் விளம்பலெது
அகஞ்சலிப் பின்றி யுறங்கின னின்றென வாங்கறிந்தே. (௪௫)

ஆங்காங்கு மூன்று மறிவுமுண் டாகி லகன்றதெது
வீங்கெதன் குற்ற மனத்தின தென்னி லெதினமிசம்
ஓங்கிய சித்தின தென்னி விதினள வோதுகெனப்
பாங்கெழு சங்கற் பளவெனி லெங்ஙன் பகருமினே. (௪௬)

பகர்து மணுமகத் தவ்வள வென்றே பயின்மனமேல்
மகத்தணு வெங்ஙனஞ் சங்கற்ப மாகும் வழக்கதெனில்
இகத்தலின் றேவென ஞாயத் தளவா விலையெதுவும்
அகத்திலுன் றுவிடி லன்னிய மாக வறிந்தனமே. (௪௭)

அறிந்தனம் யாதும் நினைவள வென்றே யதுவதுவாச்
செறிந்தங் குணர்தலு மானத மேயெனச் செப்பியக்கண்
பிறிதென லெங்கே யறிவுக்கு மூன்றும் பிதற்றலன்றே
அறிவே யுளதிதைக் கண்டிடி லைய மறுமங்ஙனே. (௪அ)

அறுதற் கிடமிலை காணு வளவு மரற்கெனினும்
வெறியெங்ஙன் நீரும் பிறிதுண்மை யென்றிடின் மெய்ம்மையெங்கே
அறிவய லெல்லா மகற்றியு மந்தத் தயல்பரமென்
றுறுதிய தாக்கொளன் ஞானம தாமோ வுரையுமினே. (௪௯)

உரைக்குதுஞ் ஞான முயர்பத்தி யாகு முணர்வுதனை
யரைக்கண மேனும் விசாரித் தறியீ ரதனையெங்ஙன்
தெரிசிக்க வல்லீர் தினைத்துணை யேனுஞ் சிறிதுமிலை
பெருக்க வுரைக்கினு ஞானமன் றேவெனப் பேசுதுமே. (௫௦)

பேசிடக் கற்றீ ரெவரு மலைக்கப் பிணக்கறுக்கீர்
மாசறக் காணீர் சுயம்பா யுமையெங்ஙன் மாசிவத்தை
யாசறக் காண்பீர் பெரும்புரட் டாகு மலைதல்பயன்
ஏசிடத் தக்கது நுஞ்ஞான மெங்கு மிதுதிண்ணமே. (௫௧)

இதுநஞ் சொரூப மறிவினை யென்பீ ரிதினியல்பை
மதியீ ருபாதி யளவின தென்பீர் வலமையென்னே
இதுசைவ மொன்றற் குரித்தே பொதுவன் றெவரெடுப்பர்
கதிவே ரறுக்கத் தகுவதன் றேயிது காணுமினே. (௫௨)

காணெவ் வுயிரு மறிவன்றி யின்றெனக் கண்டனம்யாம்
ஆணவி பெண்ணு யிருந்து மலவென் றறிந்தனம்யாம்
கோணை சமயத் தவரு மறிவாக் குறித்தனம்யாம்
காணிடி லேலா ரெவரிதை யுண்டோ கழறுமினே. (௫௩)

கழறு மெழுபிறப் பேற்ற லறிவே கலையினுர்தாம்
முழுகினுஞ் சென்மக் கடலுரித் தன்று முடிவுபற்றி
அழிவில தென்று மசங்கம தென்று மறுதியென்றும்
பழுதில தென்று மினுமுள சொல்லப் பகருதுமே. (௫௪)

பகலிர வில்லாச் சுயஞ்சோதி யென்றும் பரமமென்றுஞ்
சுகநிலை யென்று முபாதியர்க் கெட்டாச் சொரூபமென்றும்
அகம்புற மற்ற நிலையின தென்று மரியதென்று
மிகுநிலை யென்றுங் குறித்தற் கினும்முள வேண்டிடினே. (ருரு)

வேண்டினர்க் கிந்நிலை சொல்லத் தருவது மெய்ம்மையதா
ஈண்டிதைச் சொல்வா ரறிவா ரரிதரி தென்னுமறை
காண்டிலி ரோவறி வின்னிலை யீதெனக் கற்றுணர்ந்தும்
மாண்டிடு முன்னிதைக் கண்டு சுகக்கடல் வாழுமினே. (ருசா)

வாழ்ந்தாற் றனக்கய லின்றிச் சுகிப்பது வாழ்வதுகாண்
வீழ்ந்த நிலைகொளன் மூக்கறை யன்கதை வேறன்றுகாண்
ஆழ்ந்த நிலையெது வென்றேன் விசாரித் தறியகில்லீர்
போழ்ந்திடக் காலன் வருமுன் விரைகுமுன் புண்ணியரே. (ருஎ)

புண்ணினி லீயெனக் கொள்வீர் வறுங்கதை போதமெனுங்
கண்ணினைப் பெற்றுற் சகலமுந் தானாய்க் கவலையறும்
நுண்ணுணர் வீதோ வயலினைத் தானென நோக்கமுறல்
எண்ண மெலாமறி வாகுதல் செய்ம்மி னிதுதிண்ணமே. (ருஅ)

துவிதமுற்றிற்று.

ஆக - கவி - ௩௱௧௧.

---

## விசிட்டாத்துவிதம்.

இதுவென் றெதையு மளவிட்ட டறியீ ரிறையிருப்பை
யெதுவென் றறிவீ ரிதுநஞ் சுயவடி வென்றறியீர்
மதியா லெவரு மருள வகுப்பீர் வகைவகையாப்
பதியே யெவைக்கு மிருப்பிட மென்பீர் பகருமினே (க)

பகவான் றனதிடத் தெல்லாம் படைத்தனன் பார்மினிதை
யிகபர மெங்கு மவனன்றி யில்லை யெதுவெனினுஞ்
சகமுயி ராகிபு மல்லனென் றோதிடுஞ் சாத்திரங்கள்
சுகதம தென்னு நிலையா முடிவினிற் சோதிக்கினே. (உ)

சோதிக்கின் முத்தொழி லில்லா விடமிலை தொன்மையதா
யாதுக்கு மூலம் பரமெனின் மெய்யே யெதிலறிந்தாய்
போதத்தி னுலெனி லெவ்வள வோவது போந்தவுடல்
யாதவ் வளவெனி லெப்பரு வத்த திசையுமினே. (௩)

இசையு மணுவி னணுவாய் மகத்தா யிருக்குமெனின்
நிசவடி வென்ன வுபாதி யளவது நீயுரைத்தாய்
நிசமே யதுவெனக் கெட்டரி தென்னி னினையறியாய்
வசமோ வுரைக்க விறையி னிலையினை வாயடங்கே. (௪)

வாயடங் கற்குத் தெரியாத தென்ன மடையனலன்
காயத் தளவாச் சுகதுக்க மென்றே கணக்கிலுயிர்க்
கேயத் தருவ தெனினபி மானத் தியல்பிதென
ஆயதற் கேதென் னயலதன் றேவெனி னய்குதுமே. (௫)

ஆய்குத லில்லா வறியாமை யாலென வன்னதுமெய்
மாய்தல் பிறத்தல் சுகதுக்க மேற்றிடு மாயமெவன்
ஒய்வின் றியவிது வெங்ஙன மேசமென் றோர்வதெனின்
தோய்வதன் றொன்றினுங் காட்டினு மல்ல துணிபிதுவே. (௬)

துணிபெங் ஙனமெனி னெல்லா மறிவாத் துணிந்தபினர்
பிணவுட னொட்ட மறுமறிற் சிந்தை பிணக்ககன்று
கணிக்கப் படாச்சுயஞ் சோதிய தாகுங் கடையிரண்டற்
றணிமையுஞ் சேய்மையு மில்லாமற் செய்யு மனுபவமே. (எ)

அனுபவ மாவது தத்துவ மெல்லா மலவலவென்
றுணியவ் வணுச்சென் றதுதனைக் கண்டங் குறுதிபெற்றுத்
தனித்தங் ககற்றிய யாவும் பிறிதல தானசங்க
மெனத்தெளி வுற்றதென் றேத்து மீரும்மறை யென்சொல்வனே. (அ)

என்சொல் தவறெனி னுத்தி யனுபவ மேற்றிடுதற்
கென்ன தடைமொழி யொன்றினுக் குண்டே லிசைத்தியென
அன்னது யாதெனிற் றத்தொ மசியென லார்க்குமிதே
யின்னதிங் காண்டா னடிமை யெனுங்கருத் தேற்குமிதே. (கூ)

ஏற்கும் விதமெங் ஙனமென்ன் மூட மிறையினிணைக்
காற்கே யடிமை புகுந்தவன் சேர்வையைக் காண்டலைவிட்
டேற்பது நின்மொழி கேட்டுக் குரித்தெனி னெங்ஙனென
நாற்கதிக் குங்கடை யாவீ ரடிமையி னண்ணுமினே. (க0)

நண்ணிடிற் பாகத ராவீர் நிரந்தர நாயனிடத்
தெண்ணிடிற் சத்தியஞ் சத்திய மீதெனி னெவ்வெவரும்
எண்ணிடற் கிம்மொழி தத்தங் கருத்தா யிசைவதெவன்
அண்ணன் மொழியெனி னெவ்வசத் தாவதிங் காய்குதுமே. (கக)

ஆய்குதல் யாதுக் கவனடி பற்றுத லானபயன்
சாய்மி னெமது கருத்தின் வணமெனிற் றட்டகிலம்
ஆய்குத லாற்றடை யென்றோ வெவர்க்கு மழிக்குமன்பேற்
பேய்காள் பெருக்கற் கிடஞ்செயல் காணீர் பிழைபிழையே. (கஉ)

பிழையெங் ஙனமெனி லன்னியம் போக்கிப் பிணக்கறுத்துப்
பழையனைக் காட்டிடு முள்ளத்தி னுள்ளே பணிவதெங்ஙன்
தழைய நிரதிச யானந்த மேலிடிற் றானதெங்கே
இழைக்கில் விசாரணை யிங்ஙன மாக வெதுபிழையே. (கங)

எதுவு மறியீர் தடிபாவ மன்றி யிலைவிழியேல்
எதுகண்டு வாழ்த்தத் தரும்பா வனையே விதுகற்பிதம்
இதுவெனக் கண்கண்டு வாழ்த்தினுங் கற்பித மேதுமல
மதிவிசா ரிப்பிற் றெளிவது வேநிசம் வாய்மையிதே. (கச)

வாய்மைய தென்பது கற்பித மல்லதை வத்துவெனத்
தூய்மைய ராஞ்சட கோபர் முதலினர் சொற்றதெவன்
சேய்மைய தன்றதைக் கற்று மறியாத் திறத்ததென்னோ
ஆய்குவி ரேற்றனை யக்கணத் தேயறு மையமதே. (கரு)

ஐய மறுதவர் முன்னே படிக்கினு மையமறு
உய்ய விழையின ரல்லார் தெளிய வுவப்பதெவன்
மைய றவிர்ந்திடற் கல்ல வுலக மகிழ்வதற்கு
மெய்யறி வாரிலை யெவ்வெவர் காணினும் வேடமதே. (கசு)

வேடம தாக வுயிரினைக் காண்பவர் மெய்ம்மையெங்ஙன்
நாடித் தெரிகுவி ரெங்ஙன மேற்றனீர் நாட்டுநிலை
நாடுவீர் பெம்மான் விராட்டெனச் சொல்லா னவநவமாத்
தேடறி யீரஃ தெங்ஙன மென்னச் சிறிதெனுமே. (கஎ)

சிறிதுயிர் பாச மதிற்பிறி தென்பீர் சிவமதத்தர்
பிறிதென லொக்கும் பரிபூ ரணமெனப் பேசலெவன்
நிறைவெனி லங்கங் கிடையிடை யன்னிய நிற்பதெவன்
மறைமொழி யென்னி லவசரங் காணீர் மடமையிதே. (கஅ)

மடமெங் ஙனமெனிற் பூரண பாவம் வரற்குரைத்தல்
திடமெனக் கோடலிற் றீர்வெங் ஙனமெனிற் சித்துருவாச்
சடமுயிர் யாவையுங் காண்ட லெனலெங்ஙன் சாற்றலெனில்
மடமல கர்த்தா வறிவா தலினெனு மாகமமே. (ககூ)

ஆகமஞ் சொல்லும் படைப்பெவ் வணமெனி னுண்டவன்றன்
ஏக நினைவினி னெண்ணின னெல்லா மியைகவென
ஆகிய வெல்லா மறிவின் விகற்பம தாதலினால்
ஏகம தேற்றிடும் பூரண மென்பதிங் கேசல்லவே. (உ0)

ஏசன் றெவையும் பரத்தி லபினம தென்பதொக்கும்
மாசில் பரம்பொரு ளொன்றே நிசமெனின் மற்றவைகள்
பேசிடப் பட்டிடு மித்தையென் றியார்க்கும் பிழையதின்றிப்
பேசி னிசமல் லவற்றினி லென்னோ பெருமையதே. (உக)

பெருமை யிறைக்கே கிருத்திய மைந்தாற் பெருங்குணத்தால்
வருமெனின் மெய்யே யெதனை யிறையென்பை மாலகன்று
தெரிவன்றி யாதுந் தடுக்கப் படுமெனிற் நீர்வெதுவோ
தெரிவே யிறையெனின் மற்றவை கற்பிதந் தேருமினே. (உஉ)

தேரினிவ் வண்ணந் தெரிவல வோவுயர் தேவர்பிறர்
பேரு முடலும் பலனும் பலவாப் பிறிபடலேன்
யாரு முடலல சித்தெனி லட்சிய மேனயலில்
ஓரினிவ் வண்ணம் பலவென லெங்கே யொருபொருளே. (உரு)

ஒருபொரு ளேநிச மென்னல் பிதற்று முபாதியதில்
வரினுட்டங் கண்டிலி ரோவள் ளுவரும் வகுத்தவகை
பொருளல் லவற்றைப் பொருளென நாடிடிற் போதமெங்ஙன்
மருளே மயமதென் றுரிதைக் காணுமின் வைணவரே. (உச)

வைணவஞ் சித்த மொருப்படன் மார்க்கம் வழியறிந்தால்
வைணவத் தின்கண் விராட்டை யலதில வேறதெனில்
வைணவம் பற்றிடிற் சித்தஞ் சிதறுதல் வாய்ப்பதெங்ஙன்
வைணவ மேசுக வாரிதி யேற்றிட வாருமினே. (உரு)

வாருமின் ஞானப் படியிது மெய்யே மயங்குவீரேல்
யாரும் பிறிதொன் றுனற்கிட மில்லை யிவரிலெனில்
ஒருறு திப்பொரு ளில்லை யிதுபோ லுபாசனையாத்
தேருமின் பாவனை யொன்றே யினுமிதைச் செப்புதுமே. (உசு)

செப்பிடி லொன்றே விராட்டெனிற் பாவனை சேதமுறற்
கெப்படி யேனு மிலைபசை யற்றூர்க் கிதுநிலைக்கில்
ஒப்புயர் வில்லாச் சுயஞ்சோதி யாக வொளிருமது
அப்படி யாகப் பலக்கி லனைத்து மழியுமதே. (உஎ)

அழியு மனைத்து மிலதாக வங்கே யகம்பிரமம்
ஒழியத் தனித்தர சாளுதுங் கற்பனை யோய்விடத்தில்
இழியுட லாமவன் வாசத்தை விட்ட விடமதனில்
தொழிலகம் பாவமெங் கேயிலை யந்தத்திற் சோதியதே. (உஅ)

சோதனை யிற்றெளி யாள்வார்க ணூல்களிற் சொற்றதெவன்
மோதலை யொப்பச் சராசர மென்று முருந்தனிடத்
தீதத் துவிதக் கருத்தல வோவிதை யேற்றதெவன்
மீதென் படித்தீ ரவரினு முண்மையில் வேறில்லையே. (உகூ)

வேறென நீவி ருரைப்பதற் கேதென் விவர்த்தமதைத்
தேறிடிர் சான்றோ ருரைப்பதுங் கேளீர் சிறந்தமதி
பேறுகண் காட்சிப் பலகார மன்றிப் பிறிதுமக்கேன்
வேறிலை நீனியும் யோனியு மேகதி மேவுமதே. (௩0)

மேவிடி லிங்ஙனம் லோகா யுதமதம் வேடமதால்
தேவப் பிரிதியர் போல நடிப்பீர் திருட்டுநிலை
யாவரின் வேண்டுகை போகம் பலத்திடற் கேதுமல
சாவும் பிறப்புந் தவிருமென் பீரெங்ஙன் சாற்றுமினே. (௩க)

சாற்றுந் திருப்பணி மேலீட்டி லங்கு தவிருமெனின்
வேற்றுரு வங்குந் தனதுரு வன்றே விளம்புமுரு
ஏற்றிட லெங்ங னிதுமுத்தி யென்றே யெவருமிதை
மாற்றி யதைக்கொளின் முத்தியென் றேற்குதும் வாய்மையிதே. ()

வாய்மைய தாகி லெதுவும் பதமென வாய்ப்பதெங்ஙன்
ஏய்தலின் மித்தை சடதுக்க மாக விசையென்றிடில்
ஆய்தலிற் சத்தே யசத்தாகு மன்றி யயலதன்று
மாய்தலிற் பூதப் பவுதிகம் போலுமிவ் வண்மையதே. (கூங)

வண்ண மிதுபோ லெதுவு மசத்தா மவரவர்மேல்
அண்ண லளவு மளவி லுதாரண மறிவிக்குதும்
எண்ணிவி தத்துவ மெல்லா மசத்தே யிறையினிடத்
துண்ணினைந் தாலிதைப் புண்ணுகு மென்றிங் கொழிந்தனரே (கூச)

ஒழிந்திடி லாயா தெதனைமெய் யென்ப முறங்கலெதில்
இழிந்திடல் யாதை யெதுவா யிருத்த லிணக்கமெதில்
பழங்கதை யென்று திருக்கு நிலையெதைப் பார்த்திருத்தல்
இழந்து மிழவா நிலையெது காணு திறக்குதுமே. (கூரு)

இறந்தது யாது பிறந்தது யாதிங் கெனுமயக்கம்
அறுந்து தனித்திடச் செய்தல் விசாரணை யாதலினல்
திறந்தெரிந் தாயிடிற் சித்தப் பிராந்தி சிறிதுமின்றி
யறம்பொரு ளின்பமும் வீடுமொன் றாயிடு மக்கணமே. (கூசா)

அக்கண மிக்கண மென்ப திலாம லடுக்குமயல்
ஒக்க நமைவிட் டகற்றிடிற் பேத மொழியுமங்கே
சிக்கறு மெல்லா வழக்குமொன் றாயிடுஞ் சிந்தையெலாம்
அக்கணங் காணு மொருபொரு ளென்ப தறியுமினே. (கூஎ)

அறிந்தோந் திருமழி சைப்பெரு மான்கருத் தத்துவிதம்
எறிந்தோம் பிறிதெனல் யாவர் தடுக்கினு மென்னபயன்
கறங்கெனுஞ் சிந்தை நிலைத்திடப் பெற்றனங் கட்டடங்கிச்
சிறந்தன மெல்லாச் சிறப்பினுங் காணுமின் நீர்விதுவே. (௩௮)

நீர்விஃது தன்றே லபேத வுதாரணஞ் செப்பிடலென்
தேர்தலில் லாக்குறை நம்பால தன்றித் தெளிந்தவரே
பார்முதல் யாவு மவனன்றி யின்றெனல் பார்த்திலிரோ
ஓர்மி னெமது கருத்தே முடிபென லுத்தமரே. (௩௯)

உத்தம மாகு மபேத நிலையென லோர்ந்தவர்க்கு
மத்திப மாகு நிலைபிறி தாக்கொளல் வத்துவன்று
உத்திக்கு மாறு யிருத்தலின் மெய்யென் றுணர்வதெவன்
அத்து விதக்கருத் தோதிய தென்னோ வறையுமினே. (௪0)

அறையப் படுமோ பசுபாச மென்பவை யாண்டவனென்
றிறையேனுஞ் செய்யா கிருத்திய மைந்தனு ளேற்பதெவன்
மறைமொழி யன்றெனி லுள்வார்க ளேஃறே வகுத்ததிங்ஙன்
மறைமொழி யாயினு மோர்தற் கரிதெனின் வாத்தவமே. (௪௧)

வாத்தவங் கண்டு மொழிந்ததன் றேவவர் வாய்மொழிகள்
நீத்தன் முறையோ முரணென் றுமக்கு நிமலர்மொழி
தோத்திர மாயினு மர்த்தமன் றேநுந் துணிபிதென்னோ
ஒத்திது வன்று முரணினுத் திக்கிங் குணருமினே. (௪௨)

உணரு மிடத்திறை யேசட சித்தென் றுணர்த்தியபின்
புணரினு மல்ல னிவையாவு மென்று புகல்வதெவன்
கணநாதர் நான்மறை விண்டவை யல்லவை கற்பிதமென்
றுணரத் தகுமல வோவறி யாதென் னொருமையிதே. (௪௩)

ஒருபொருட் கேதகுஞ் சத்துசித் தானந்த மோதயலுக்
கொருகுணஞ் சத்தா யினுமுத வாதிங் குதவுமெனின்
தெரிவிக்கி லேற்ப மெமக்குமுன் னொன்றைத் திரிபகற்றி
மருவாமற் காரண காரிய மெங்கும் வழக்கிலையே. (சச)

வழக்கக லாதெனி னெங்ஙன நின்மொழி வாய்மையெனல்
சழக்காய் முடிவதென் னோவெது சொல்லினுஞ் சாற்றுதியேல்
உழக்குவிர் தர்க்கப் படிப்பா லுயிர்க்கிங் குதவியெவன்
பழக்கப் பிறவிக ணீக்கிற் பிழைப்பீர் பகடிகளே. (சரு)

பகவா னலதிலை யாதுமன் றென்னப் பகருமெனின்
அகத்தெங் ஙனமென வுன்னிடத் தக்கதென் றுய்தலைவிட்
டிகபோக முள்ளிச் சிறப்பொடு பூசனை யென்றியற்றி
மிகக்களிப் புற்றிட வென்னோ வறிகிலன் வீடல்லவே. (சசூ)

வீடெனல் யாதாற் றவமறம் பூசை விழைவகற்றல்
நாடுமுண் முத்திரை யோகமெய்ஞ் ஞான நவிலுகலை
நாடுதற் சித்தி யிவையாதி தன்னு ணடுநிலையன்
றாடுரு வித்தனை யெங்கணுங் காண்டலென் றோதுமதே. (சஎ)

ஓதிய தென்னோ முடிவினின் ஞான முணரகில்லீர்
யாதகற் றும்பொரு ளெல்லாப் பொருளை யிதுவெனலை
போதமன் றிச்சொலி லேற்ப மவற்றைப் புனிதமதா
எது மறியீ ரருச்சுனற் கோதிய தேகுமினே. (சஅ)

எகுமின் றம்மை யுணர்ந்தவர் பாலடி யிக்கணத்தில்
நோகுமின் யாமா ருடல்வரற் கேதென் னுவன்றடிமை
யாகுமி னெம்மா னகலாது நும்மு ளமர்ந்திருக்கப்
போக நமக்கயல் விட்டிது செய்துய்ம்மின் போதகரே. (சகூ)

போத சுகமய லாகாது பூரணம் போதமதால்
யாது சுகமு நமக்கய லேயல வென் சொலினும்
நாதன் சுகமோ நமக்கய லன்னவ ளுமலதாற்
போத நமதுரு வாதலி னாசப் புகலுதுமே. (௫0)

புகலப் பொருளமை கொளாதிதை யேற்றிடிற் போதமதாம்
அகமென வில்லா ரிலையிதை யாயா தகன்றயலே
யகமெனக் கொண்டிங் களந்தது தீர்வோ வலவலவென்
றகற்றுது மஞ்சா திறைக்கு மிதனை யறியுமினே. (௫௧)

அறியாமை யோபர மன்றி யறிவோ வறிவென்றிடிற்
பிறிதென லுண்டோ வடங்கினும் யாவும் பிரதிபலன்
எறியாது சோதிக்கி லெல்லா மறிவா யியைவதினாற்
பிறிதன் றெவையு மவனன்றி யென்றார் பெரியவரே. (௫௨)

பெரியரைக் காட்டினுங் கண்டதென் னீவிர் பிணக்கறுக்கீர்
உரியநன் ஞாய மிலையோ தணிக்க வுமக்கரிதேற்
றெரிய வுரைக்கினுங் கேளீ ரகங்காரச் சேட்டையினால்
ஒருமைப் படுவதென் றேமன மில்லை யுணருமினே. (௫௩)

உணர்வொன்று மேமெய் பிறிதசத் தாமென் றுணர்த்துமன்றோ
கணித்த பெரியோ ருரையினைக் காணிற் கலகமென்னோ
குணக்கே டகற்றிடி லொன்றாய் விளங்கிடுங் கோதில்பரம்
இணக்க மிதுவே துயரற் றிடுதற் கிதுதிண்ணமே. (௫௪)

இதுமுடி வாகிலை பேதமற் றோரி லெவர்க்கெனினும்
மதபேத மெங்கே திணைபா விடமெனல் வந்ததெங்கே
கதியென லெங்கே யகம்பாவ மெங்கே கணிப்பதெங்கே
பதியன்றி யாது மிலையெனல் சத்தியம் பார்த்துய்ம்மினே. (௫௫)

விசிட்டாத்துவித முற்றிற்று. ஆ. கவி ௪0௪.

# நாஸ்திகம்.

பார்மீதி லாஸ்திக நாஸ்திக மென்னப் பகரிரண்டில்
ஓர்நிலை யாஸ்திகத் தன்ன திருவகை யோதியபின்
ஞேர்வகை நாஸ்திகத் துண்மை விளக்குது முள்ளபடி
பேர்பெறு மிந்து மறைகூ றியபடி பேணுமினே. (க)

பேணிடு மாஸ்திகர் நாஸ்திகர்க் குள்ள பெருவழக்கைக்
காணிடிற் றீருந் தனையுண ரப்பெறிற் காதலற்றுக்
காணுவ ரோவெலை யல்லார் படித்துங் கரையதின்றித்
தாணுவுண் டில்லை யெனுமவர் வாதத்தைச் சாற்றுதுமே. (உ)

சாற்று மறையிவை நந்துணி பன்றெனிற் சாற்றியதென்
தேற்ற மிழந்து தெளிந்தே யுரைத்தது தேர்கிலம்யாம்
ஆற்ற லெனினதை யாதா லுணர்வதிங் கப்பரமந்
தோற்று மிருவகை யாலெனி னெங்ஙனஞ் சொல்லுதுமே. (ந

சொல்லெப் பொருளுரு வாகியு மன்றுஞ் சொரூபமெனின்
சொல்லுவ தெங்ஙன மிந்நிலை யாமெனத் தோற்றமன்றே
அல்லவொவ் வொன்றையுஞ் சோதிக்கிற் சித்தா யமைவதினல்
இல்லை மயக்க மிதிலெனின் மெய்யே யிசைக்குதுமே. (ச)

இசைக்கி விருதிறத் தார்க்கு முலகே யெதுகண்டனர்
இசைப்ப தெவனுண் டிலையிறை யென்ன விணக்கமின்றி
இசைக்கப் படுமனு மானத் திறையுண் டெனவின்றென
இசைக்கப் படுமது காணுமை பற்றி யெனிற்சொல்வமே. (ரு)

சொல்வழக் கன்றிப் பயனின் றெவர்க்குஞ் சுணங்கனைப்போல்
வெல்வ தெவர்க்கு மிலைபடிப் பாலன்றி வீணரிலை
பல்வகைப் போகப் பிரியத் தவரே பசையற்றதென்
கல்வியென் முத்தி தருமோ விலையிலை காணுமினே. (சு)

காணப் பெருதென் னிறையுள னென்னிற் கணிக்கரியன்
வீணர்க் கலைகடல் போன்றுளன் சித்தாய் விளங்குபவன்
பேணப் படுபவன் றம்மை யுணர்ந்தவர் பேதமின்றிச்
சேணணி மைத்திறந் தன்று விலாதவன் செப்பரிதே. (எ)

செப்பரி தென்ற லறிவல் வோவதைத் தேரகிலார்
எப்படி. காண்குவ ரானந்த நாடனை யில்லென்பமோ
அப்படி யப்படி யங்கங் கதுவா யமர்ந்திருக்கத்
தப்புரை நின்மொழி யன்றோ விடயந் தவிருமினே. (அ)

தவிரப் படாதுள தூண்டே விதனைத் தவிர்த்திடுதும்
எவையும் விடய மயமா யிருக்க விதுபுதுமை
எவர்க்கு மெனின்மெய் யுறக்கத்தி லெங்கே யிருப்பதெது
நவமாகு நின்மொழி மெய்யாகக் காணுது நாடுதுமே. (கூ)

நாடிடில் யாவு முளதிலை யென்று நவில்வதொன்றுண்
டாடியி லங்கங் கறிந்திப் பொருளென் றறியகிலன்
கூடியுங் கூடா திருப்பது மெய்யே குறியெதெனில்
நாடி யுணர்ந்திங் குரைத்தலிற் சித்தே நவிலுமினே. (க0)

நவில வறிந்தேன் பெயர்மாத் திரமா நவையதின்றித்
துவித வறிவன் றிரண்டுந் தெரிதலிற் சோகமின்றித்
தவிரப் படாத திதுவென்று தேர்ந்தனன் சாற்றியதாற்
றவறிலை மற்றவை பொய்யெனல் சித்தெனல் சத்தியமே. (கக)

சத்திய மேயறி வென்பதி லாஸ்திகஞ் சத்தியமோ
நித்திய வின்பம் பரமன்றி யெவ்வுயிர் நிற்றலெங்கே
எத்தனை யின்பங் கணக்கிலை சும்மா விறைவனெனல்
அத்தனை யும்பர லேசமென் றேயிங் கறைகுதுமே. (கஉ)

அறையு நிரதிச யானந்த வெள்ளத் தலையனைத்தும்
எறியுந் திரைநுரை யாதியை யொக்கு மிருக்கிலையம்
அறிவொன் றினையுனிற் பற்று தெவற்றினு மாண்டறிதி
பிறிதின்ப மெல்லாஞ் சுகசா தனமெனப் பேசிடுமே. (கங)

பேசிடு மீதாற் பதிபசு பாசம் பிறங்குமன்றோ
ஏசுவ தென்றோ விருக்கப் பதிபசு வீங்குமக்குள்
நாசப் படாவகை யீதோ வுயிர்க ணலநலமீ
தீச னடிபுக லென்றோ துயரிங் கிலையிலையே. (கச)

இலையென லெங்ஙன மேற்ப தெனின்மெய் யிகசுகந்தான்
நிலையோ வலவெனி னீங்காச் சுகமெது நீங்கிலிது
இலவே றெனினிது வந்ததற் கேதென் னியற்கை யெனின்
இலையெனற் குண்டோ வியற்கை யெனலா விசையுமினே (கரு)

இசைக்கின் முனநீ யினையனென் றேற்ப மெனிலியற்கை
பசுக்கண் மறந்த விலையென லாமோ பகர்வதெங்ஙன்
இசையும் பிறவி யுயிரெது வேனு மிடையதின்றி
நிசமுறை யென்றிடிற் காட்சி யளவா னிகழ்த்துதுமே. (கசு)

நிகழுவ தேதோ வுயரறி வெங்கணு நின்றவுயிர்க்
கிகத்துதிக் கும்பொழு தெல்லாஞ் சுபாவ மெனினெவரும்
அகமெலி வுற்றுழைப் பானே னுழைத்து மமைதியின்றி
மிகவறு மைப்பலன் மேலிட லேன்சிலர் வேண்டுவனே. (சஎ)

வேண்டுவ தின்றிச் சுகதுக்க மெங்கணு மேலிடலேன்
ஈண்டிவை யாமோ சுபாவப் பிதற்ற லிணங்கலெவன்
மாண்டபி னுண்டென லெங்ஙன மென்னின் மடிந்ததுண்டோ
நீண்ட விழைவென லின்றெனி லுண்டா னெடுஞ்செனமமே. (கஅ)

சென்ம நமக்கோ பிறவிக்கு நாமோ திரமுணரில்
சென்மக்கு நாமெனி னம்மாற் பயனென் றெரிவதின்றேல்
சென்மஞ் சுகதுக்கந் தந்திட லாமெனிற் செய்வதெங்ஙன்
சென்மஞ் சடமகர்த் தாவெனி லுத்தரந் தேடுமினே. (கக)

தேடிட லெற்றிற் கியற்கைய தாமெனிற் செப்பிடுதும்
நாடிடி லென்ன பயனோ தனக்கு நடைபிணங்காண்
ஆடிடு மான்மா வசையி றனக்கென் றசைவுமிலை
நாடிலி ரோசுக சாதன மேதென நம்மவரே. (உ0)

நஞ்சுக சாதன மன்றி யெவையுள நாட்டுதிரேல்
எஞ்ச லிலாதிதை யேற்குது மின்றெனி னேற்பதலம்
நஞ்சுக சாதன மாதலிற் சென்ம நமக்கெனன்மெய்
அஞ்சுமின் சென்மம் வராவகை மார்க்க மறியுமினே. (உக)

அறிவே நமதரு வன்னியஞ் சென்ம மலவெனிலோ
பிறிதென் னமதரு பேணுவ துண்டோ பிதற்றலென்பம்
நெறியே விசாரித் திடிலறி வாகுது நின்றதனாற்
பிறிதே பிறவி யெனிலெது சொந்தம் பிழைபிழையே. (உஉ)

பிழையன் றெமக்குப் பிறவி யெனமுன் பிணக்குளதேல்
நுழைதும் பிறவி யுணர்ந்தபி மானித்து நோக்கலெது
விழைவாதி மூன்று மியற்ற லெதுகுறை மேவலெது
தழையுஞ் சுகமிக வேண்டுவ தேதைச் சாற்றுமினே. (உங)

சாற்று மரணத் துடனீங்கு மென்று தவிப்பதெது
நாற்றத் தழுகி னுடனீங்கு மென்று நடுங்கலெது
போற்றுவ தேதிங் குடனு னெனத்தனைப் போகமெதற்
காற்ற லெதற்கோ திரிகால ஞான மறையுமினே. (உச)

அறையு முபாதித் திரிய மெதற்கோ வவத்தைதொறும்
மறைவதுங் காண்பதும் யாதுக் குலக வகையுணரில்
அறிவே நமதரு வென்றது வாக வமைந்திருக்கும்
நெறிபெற்ற சங்கம தாவீர் முடிவித் நில்லுமினே. (உரு)

நில்லாது பேசுத லென்னே முடிவு நிலைபெறுமோ
எல்லா முணர்ந்தவர் நாஸ்திக ரென்பீ ரிதுமடமை
நல்லா ரடிபுகி லெல்லாம் விளங்கிடு நாட்டமுடன்
கல்லாமற் கற்ற நிலைவே றிலையிது காணுமினே. (உசா)

காணும் பிறவி நமக்கெனி னேற்குதுங் காட்டடிமைப்
பூணும் பிறவிக் கெனிற்சுயம் போதிற் புகலகிலம்
வீணுரை யாகும் பொருத்த மிலாதுரை விட்டடிமை
பேணிடி லுண்மை யுடனே விளங்கிடும் பேச்சிறந்தே. (உஎ)

பேசுவர் ஞானம் பெரிதென யாவரும் பித்துடையீர்
ஏசுவ தென்னே நிசமென் றுலகை யெதுவுளதேற்
பேசுல குண்டு விழிப்பி லெவர்க்கும் பிணக்ககன்றல்
ஏசுவி ரோதமை யாதுத் தரமிங் கிசையுமினே. (உஅ)

இசைக்குது ஞான முலகிரண் டாக விவையுளதென்
றசைப்பா ரிலையிது குற்றமென் றெங்கு மறிந்தெனிலோ
நிசமே திரண்டி லிரண்டு நிசமெனி னீக்கமெவன்
அசையா துறக்கத் துலகென லென்று மறியுமினே. (உகூ)

அறிவிலை யென்னி லறிவுள தங்கங் கனைத்துமுண்டு
நெறியிஃ தாயி னிலையுண் டெனலெது நேடிலெங்கும்
அறிவது மேற்றிலை யோவுண் டிலையென லன்னதுதான்
குறியுல குக்கல வோநிலை காட்டக் குறித்ததுவே. (௯0)

குறிப்பா னனலன்றித் தூம மிலையெனுங் கொள்கையொக்கும
அறிவைத் தவிர வனைத்து மிலையெனற் கன்னகுறி
பிறிதன் றிதுநிற்கக் கல்வி யெதனாற் பிணக்ககன்று
அறிவா யெவையும் விளங்கத் தனித்திடற் காய்குதுமே. (௯க)

ஆய்வதற் கேற்றதிக் கல்வி யறிவன் றலவவற்றைப்
பேய்பிதற் றொப்பப் பொருளெனக் கொண்டு பெயரிடலால்
மாய்தற் கிடமெங் குலகப் பிரமை வகையற்றநாம்
ஆய்தல் பதிபசு வெங்கே வழக்கிங் ககன்றதுவே. (௯உ)

நாஸ்திக முற்றிற்று.

ஆ கவி-௪௬௪.

## காமியக்கல்வி.

அகன்றன ராரிப் புலமைத் திறத்தா லநிர்தசடம்
புகன்றிட லென்னோ வடியவ ரென்னப் பொருசமயர்
சகந்தனைச் சத்தென் பவரோ வடியவர் சங்கையறுர்
மகத்துவம் பற்பல காட்டுதற் கேதென் மறுக்குதுமே. (க)

மறுக்கிற் பயனின் றனுபவக் கல்வி வழக்கதின்றி
யறுக்கு மயக்க மனுட்டான மேலிடி லவ்வவற்றிற்
பிறித்தெது வுஞ்சத் தலவல வென்றே பிடிப்பகற்றி
நெறியெங்குந் தன்னை விளக்குதல் யாதோ நிகரில்லையே. (உ)

நிகரிலெக் கல்வியுஞ் சத்தை விளக்கா நிகழ்த்துமன்றி
இகபர தாக மறுத்திட லெங்ஙன மெப்பொருட்கும்
புகலா தரவை விளக்கிட லெங்ஙனம் பொய்யளவை
அகந்தனிற் காண லகற்றிட லெங்ஙன மற்பமுமே. (௩)

அற்ப நிலையே யளக்குங் கருவி யகண்டமதா
நிற்கச் செயுமோ வளவில் சுகத்தை நிறைத்திடுமோ
கற்பவர் மெய்யெனப் பொய்ப்பொருள் காட்டுங் கடையதின்றிச்
சொற்குற்றம் வாரா தகற்றிடற் கேற்றது சோதிக்கினே. (௪)

சோதிக்கப் பாத்திர மாயினு மன்னியச் சோதனையே
வாதிக்கத் தக்கது மேன்மேலுஞ் செல்லா மயக்கறுக்கா
தோதியுந் தன்னைப் படியா தகங்கரத் துற்றழியப்
பேதைப் படுத்தலு மிக்கல்வி யன்றிப் பிறிதில்லையே. (௫)

பிறிதுள தென்னு மயக்க மறுக்கும் பெருமையில்லை
யறியாமை தன்னை யறிவென் றுணர்த்திடற் கையமில்லை
குறையாவு மற்றிடக் காட்டிடத் தக்க குறியுமில்லை
தறிபோ லுடலள வாந்தன் மயக்கந் தவிர்த்திடுமே. (௬)

தவிர்த்திடு மாயிற் றனையே யுணர்ந்திலர் சாத்திரிகள்
எவனு மரிதொரு ஞானியென் றேன்றே விசைக்குமறை
அவரவர் லட்சியம் பற்பல வாவதென் றுய்ந்தவிடத்
தெவரிது ஞானமென் றேற்பவர் மூட ரிது திண்ணமே. (௭)

இதுகல்வி ஞான மிஃதான்ம ஞானமென் றேற்றதெவன்
புதுமை பழமை யிரண்டுங் கடந்த புனிதரன்று
முதலது போகம் விளைக்கத் தருவது முத்தியில்லை
எதுபா வனையின் முதிர்ந்தவ ராயினு மென்செய்வமே. (௮)

என்ன மகிமை விளக்கினுஞ் சித்தி யிதுமுத்தியன்
றின்னது ஞான மெனத்தெளி வுற்றவர்க் கேன்மகிமை
அன்னது வாய்க்கினுந் தன்ன துருவா யறியகிற்பார்
பின்ன மபின்ன மிரண்டுங் கடந்த பெரியவரே. (கூ)

பெரியது ஞானஞ் சிறியது கல்விப் பிதற்றலன்று
அரியது ஞானந் தனைத்தா னறிதலி லார்க்கெனினும்
பெருங்கல்வி ஞான மறியாது தன்னைப் பிறமயக்காற்
றெரிகிலி ரோமுத்தி கல்வி யிஃதெனச் செப்புதுமே. (கo)

காமியக்கல்வி முற்றிற்று.

ஆ கவி - சசகூ.

---

## நிட்காமியக்கல்வி.

செப்பி லுபாதித் திரிய விலக்கணந் தீர்ந்திடுமோ
அப்படி யப்படி யாய்ந்தாய்ந் தவற்றை யகன்றகன்று
எப்படி யாயினு மன்னிய மின்றி யிருப்பதைக்கண்
டப்படி யாகுத லன்றோ படிப்பென லாய்ந்திடினே. (க)

ஆய்ந்தபி னேட்டா லயலற்று நாட்டத் தணுவணுவாய்
மாய்ந்திடத் தத்துவம் பூர்வசித் தாந்த வழிபிறழா
தோய்ந்திட லின்றித் தனைக்கண் டறிவா யொழிந்தவெலாம்
ஏய்ந்திடத் தானுப் படிப்பது கல்வியென் றெண்ணுமினே. (உ)

எண்ணப் பசையற் றிடுநிட்டை யென்ப ரிதைப்பெரியர்
நண்ணிடும் யாவையுந் தன்னுரு வாக்குதன் ஞானமெனல்
கண்ணினிற் காணிட லன்றோ படிப்பெனல் கண்டபினர்
விண்ணறி வாயிடின் மேலாம் படிப்பிலை மெய்ம்மையிதே (௩)

மெய்யுணர் வேயுள தல்லவை கற்பிதம் வேறதன்றென்
றையத்தி னீங்கித் தெளிதலின் மிக்க வருமையிலை
பைய வனுதின நோற்கி லணுவணு பற்றதுண்டோ
உய்ய வகையிலை யீதன்றித் துன்பத் துணருமினே. (ச)

உணர்வா யெவையு மொளிரப் பயிறலி னேதலெவன்
புணர்ந்தும் புணரா திருத்தலின் மிக்க புலமையெவன்
தணிவிலை யெங்குந் தடவினு ஞானத் தடமடுவின்
குணமுள தோவிவ் வனுபவப் பேற்றினுங் கொள்ளுமினே. (ரு)

கொள்ளும் பொருளிலை தள்ளும் பொருளிலை குற்றமின்றி
யுள்ளும் புறம்பு நிறைஞான மன்றி யுணர்ந்தவர்கட்
கெள்ளத் தருவது வேறிலை தானு யிலகுமெனிற்
கள்ளப் படிப்பிஃ தாமோ மறைமுடி காணுமினே. (சா)

காணினு மன்னியங் காண்பானைக் காணக் கதிரொளியாம்
பேணத் தருவது வேறிலை தானுப் பிறங்குமெனின்
ஆணலி பெண்ணெனல் காணு வுபாதி யளவதன்றிக்
காணு மறிவே சரடெனக் கற்பது கல்வியதே. (எ)

கல்வியன் றங்க வளவின னென்னக் கற்பதுதான்
கல்வியன் றங்க வளவின னென்னக் காணிடுங்காற்
கல்வியன் றன்னிய நானென லென்னெனக் காண்கிலர்க்குக்
கல்வியன் றல்லதை யுள்ள திதுவெனக் கண்டிடினே. (அ)

கண்ட வனைத்து மறிவாகக் கற்பது கல்வியன்றோ
துண்டுதுண் டாவறி யப்பெறி னெங்ஙனஞ் சோகமறும்
அண்டபிண் டங்க ளனைத்து மறிவா வறிபவர்க்கு
உண்டோ துயரெனல் பண்டிதர் காளிதை யோதுமினே. (கூ)

ஓதிடு ஞானக் கலைபல கற்கினு மொன்றுமிலை
வாதிடு தற்குந் தனைமதித் தற்கும் வகையதன்றிச்
சோதனை தன்மயக் கற்றிடுங் கல்வி சுகநிலையாம்
யாதுள கல்வி யிதுபோலத் தேடினு மெங்கணுமே. (க0)

எங்கணு மின்றெனின் மூச்சை யடக்கி யிருப்பவர்கட்
கங்கலிங் கச்சோ தனையெங் கறிகில மாய்தலெவன்
எங்கணுந் தாஞ யிருக்கு நிலையிலை யென்செயினும்
அங்கந் தறிபோ னெடுநா ளிருக்கினு மன்மையதே. (சக)

அன்றேற் பெரியவ ரன்றோ வெவரு மடங்குவதென்
இன்றேற் சினமும் வரமுந் தவமு மெவர்பணிவர்
நன்றாத் தெளிந்த முனிவ ரிவரென நாடுவதென்
ஒன்று மிலிக்குளன் மேலவன் போலு முணருமினே. (க௨)

உணரா தெதையுந் தறிபோற் கரண முறுவதன்றோ
துணிஞான மென்றிடின் மூடம தாகுஞ் சொரூபநிலை
அணுவுந் தெரியா தொருமூலை தன்னி லழுந்துவதால்
இணங்குவ தெங்ஙனம் ஞான மிதுவென் றியம்புதுமே. (கங)

இயம்பிடு மேலாச் சரியை கிரியைக் கிருமறைகள்
நயந்தரு சாதன ஞான மதற்கென னுடிவிர்கொல்
சுயம்பிலை ஞானப் பொருளினு முண்டெனிற் சொல்லுவதென்
வியந்து முடிவினின் முத்திக்குச் சாதனம் வேறில்லையே. (கச)

வேறா யுணர்வது ஞானமன் றாகும் விழைந்துதமில்
தேறா ரியம்புவர் ஞான மிதுவெனத் தேர்ந்தவர்போன்
மாறா நிரதிச யானந்த மாதற்கு வாய்மைவழி
நீறுவ தெங்ஙனம் பாச மனைத்து நிகழ்த்துதுமே. (கரு)

நிகரின்றி யெங்கணுந் தானாய் விளங்கி நிருமலமாய்
அகம்புற மின்றித் திரிபுடி பேத மணுவுமின்றிச்
சகமாதி மூன்றுந் தனது விகற்பாத் தயங்குவது
மிகவுயர் ஞானப் பொருளெனச் செப்புவர் மேலவரே. (கசு)

மேலாகு ஞானப் பொருளே பொருளெனல் வேறதன்று
மாலாகு மற்றவை தன்னை விளக்கா மலினமதாம்
பாலாழி ஞானப் பொருளெனன் மெய்ப்பொருள் பார்த்துரைத்தல்
மேலாகு நிச்சய நிச்சய மற்றவை வீணென்பமே. (கஎ)

வீணெனிற் கோபம் வருதற்கிங் கேதென் விழலரைப்போற்
காணிடி லெல்லா மலவெனப் போகிடக் கண்டிருந்தும்
தூணொத்த நும்படிப் பாலே கணிப்பது தூய்மையன்று
நாணமி லாதென் பிழையது காட்டியு நாட்டுமினே. (கஅ)

நாட்டிய தெங்ஙனஞ் சீவாதி நன்னிலை நண்ணுபொருள்
காட்டும் பெயர்களி லொன்று மிதுவெனக் கட்டறுக்கார்
ஓட்டுவ தெங்ஙன நம்மய லன்றோ ருறுதிமொழி
வீட்டு நெறியிது வாமோ மடையரும் வேண்டிலரே. (கசு)

வேண்டுதல் ஞானமொன் றெல்லா மொடுங்கி விரிவதினாற்
காண்டிலி ரோநிதந் தூக்க விழிப்பினிற் கற்றுணர்ந்தும்
தோண்டி லுணர்வா லெவையு மறிவாச் சொலிப்பதெவன்
யாண்டுமுண் டிந்நிலை காண்பா ரிலையிலை யென்சொல்வனே.
(உ0)

என்ன பயனுண் டனுபவ மில்லார்க் கிதையுரைத்தும்
இன்ன தருத்த மிதுஞான மென்றிங் கிசைப்பவரை
யுன்னிட லின்றி யிகழுவ தென்னோ வுயர்கல்வியோ
என்ன மதியெனல் பண்டிதர்க் கையோ விசையுமினே. (உக)

இசைக்கி லிதுமெய் யிதுபொய் யெனப்படு மீங்கிரண்டாம்
இசைக்கா விடிலிது பொய்மெய் மயக்க மிறுதியிலை
இசைக்கிலொன் றேயிரண் டாமயக் கன்றி யிரண்டதிலை
இசைப்ப மிரண்டென வொன்றெனி லிவ்வழக் கென்சொல்வனே.

சொல்வழக் கன்றிப் பொருள்வழக் காயிற் றுணிவதுண்டாம்
வெல்வதற் கன்றே வழக்கிடல் ஞாயம் விடுக்கிலெவன்
பல்கலை ஞானமு மெய்ஞ்ஞான மன்றிப் பகரிடமே
தெல்லையில் யாவையுந் தானுக்க வல்லதிங் கிவ்வறிவே. (உ௩)

இவ்வறி வேயெனற் கென்ன குறியெனி லெங்கறிவுண்
டவ்வவ் விடத்துல குண்டிலை யில்லை யனுபவமாம்
இவ்வழி யன்றியுஞ் சத்துசித் தானந்த மேசமுதல்
செவ்விதி னேற்றிடத் தக்கது காட்டுதுந் தேருமினே. (உ௪)

தேரினுந் தேரா திருக்கினு ஞானந் திரிவதின்றி
ஓரியல் பாதலிற் சத்தென லொக்கு முயர்விழிவன்
றூரிய ரன்றி யறிவா ரிலையெங்கு மாய்ந்திடினும்
ஓரணு வேனு மறிவன்றிக் கண்டில முண்மையிதே. (உ௫)

உண்மை யறிவி லுலகங் கயிற்றர வொப்பெனலென்
நுண்மையி னுண்மை யறிந்தவர் காணு நொடிப்பதெவன்
அண்மையுஞ் சேய்மையு மில்லாத ஞான மறிந்தவரே
திண்மைப் புலமைத் திறமிக் கவரெனச் செப்புதுமே. (உ௬)

செப்பிடத் தக்கோர் பதிபசு பாசத்தைத் தீர்ந்தவிவர்
எப்பாடை வல்லவர் தீர்ப்போ கடைக்கா விலாதசுவர்
அப்பிலுப் பொக்கு மறிவி லனைத்தென லாய்ந்திலிர்கொல்
செப்பும் பெயர்வினை யுண்மையைக் கண்டிலிர் தேர்ந்தவரே. (உ௭)

6

தேர்ந்தோ மெனக்கொள லன்றித் தெரிந்த திறந்தெரிந்தோம்
ஓர்ந்தவர் ஞானத்தி னுண்மை யுணர்ந்தவ ரோதறுதி
தீர்ந்த நிலையெனச் செப்பிடத் தக்கது சித்தமயல்
ஈர்ந்து சுயசுக மாகுத லாவிதை யென்சொல்வனே. (உஅ)

என்கொண் டிழிவின தாக விசைப்பீ ரெமதுகல்வித்
தன்னுண்மைப் பேற்றைக் குறித்ததிக் கல்வியிற் றூனலவோ
சின்மாத் திரமா யொளிரும் பெரியவர் தேர்கிலர்கொல்
நன்குணர்ந் துய்வதற் கேற்றது நாமு நவையில்லையே. (உகூ)

நவையில்லை யேனு மயலே கணித்திட நாட்டமதாம்
எவையு மறிவ தெதுவோ வதனை யினையதென
நவையன்றிக் காணிடி லன்னது சத்திய நாட்டுதற்காம்
எவையும் பொருளல நாட்டுதற் கெங்ஙன மேற்றிடுமே. (௩0)

ஏற்றிடத் தக்கது ஞானமொன் றேபிற வெவ்வகையும்
மாற்றித் தனதுரு வாக்கிச் சுயமாய் வயங்குவது
தேற்றிடு நானெனல் ஞானம தாகத் திரிபகற்றித்
தோற்றிடு ஞானவிண் ணேமய மாயெங்குஞ் சோதிக்கினே. (௩௧)

சோதிப் பவரிலை தன்னைத் தடியாத் துணிந்ததனுல்
வாதிப்பர் மெத்த மடையப் படிப்பால் வழக்கறுமோ
நேதித் திடில்வெறுஞ் சொல்லான் மயலது நீங்கிடுமோ
பேதப் படுத்துநுங் கல்வி சடசித்தைப் பேர்த்திடுமே. (௩௨)

பேர்த்திடத் தக்கது ஞானச் சுயம்பே பிறிதகற்று
பார்த்திடி லன்றி யணுவு மெரிக்கா பரவறிவும்
தீர்த்தறி வேமுடி வென்னக் கணிக்கினுஞ் சென்றறிவால்
ஓர்த்தறி வாத்தனைக் கண்டவர் நிச்சய முண்மையதே. (௩௩)

உண்மை யறிவே யுயர்ஞானந் தன்னை யுணர்வதினால்
எண்ணிலி பேத மறிவா விளங்கிடற் கேற்றதிது
எண்ண மெலாமறி வானர்த மாக விருத்துமிது
கண்ணறி வாகுதன் மெய்ப்பொருள் கல்வி கணியுமினே. (ருச)

கணிக்கி விதனுற் பசுபதி பாசக் கசடகற்றும்
நுணுக்க வறிவன்றி யில்லெனக் காட்டு நொடியளவிற்
பிணக்கனைத் துஞ்செறல் ஞான விளக்கே பெருங்கல்வியாம்
கணிக்கத் தகுவது நுங்கல்வி யன்று கருதுமினே. (ருரு)

நிட்காமியக்கல்வி முற்றிற்று.

ஆக கவி - சஅக.

## ஞானேதயமகிமை.

கருதித் தெளிதற் குரியதிஞ் ஞானக் ககனமது
பெருவிப ரீதமு ஞானத் திரிபெனப் பித்தகற்றும்
ஒருபொரு ளன்றி யனைத்து மிலையென் றுணர்த்திவிடும்
தெரிய விளங்கிடின் ஞானக் கதிரெனுந் தேசெங்குமே. (க)

தேசே பரமுத லென்றுண ராமை தெரிவதன்றோ
கோசங் கடந்து தனைத்தா னுணர்ந்து குறையகன்று
தேசுக்குந் தேசா யிரண்டல நிற்றலுஞ் சித்ததன்றோ
ஆசற விங்ஙனங் காணுதன் ஞானம தாகுமதே. (உ)

ஆகம வேதம் புராணங் கலைக ளனேகமதே
ஆக மெவியத் தெளிந்தும் பயனென் னறிவுதயம்
ஆகத் தெரிசன மில்லா ரனர்த்த மகன்றனரோ
ஆகத்தை யன்றி யகமெனக் காணு தழிகுவரே. (ங)

அழிவது பாச மழியாமை ஞான மதுவதுவா
யெழினு மடங்கினுந் தான்சுயம் பாக விலகுமன்றோ
பழகுவர்க் கவ்வண மல்லார்க் குரைத்தும் பயன்விடயம்
பழிபிறங் காப்பெரும் பண்பின ராயினும் பாதகமே. (ச)

பாதக மாயினும் புண்ணிய மாயினும் பாவனையே
போத மிவையல வன்றி யிவையில போக்குவரத்
தேத மிலையுள வாயினு மென்னென் றியம்புவன்யான்
சோதனை செய்திடி லிங்ஙனங் காண்பங் துணிபிதுவே. (ரு)

துணிபுணர்ந் தார்க்கய லெங்ஙனங் காணுஞ் சொரூபமன்றி
அணிமையுஞ் சேய்மையு மெங்கே யதுவா யமைபவர்க்குக்
கணிக்கப் படுமீ தனுமானத் தாலே கடையணுவாக்
குணகுணி வாத மகன்றபின் னெங்கே குவலயமே. (சு)

குவலய சோதனை செய்து நிலாரை குருவென்பதென்
அவலப் படிப்பே யறிவாகு மட்டு மயலகன்று
நவநவ மாஞ்சுவை யாம்பினர் தன்னிலை நண்ணுவதற்
குவமையின் ஞானமென் றோர்ந்தன முண்டே லுரையுமினே. (எ)

உரைமனக் கெட்டா வுணர்வென்ப தென்னை யுணர்ந்துரைத்தும்
திரிபுடி பாவப் பழக்கம தாலெனத் தேர்கிலிர்கொல்
அரிதரி தென்பது ஞானமற் றென்பா ரயலகற்றோர்
திரநிலை யீதன்றி வேறிலை யுண்டெனிற் செப்புமினே. (அ)

செப்புவர் ஞான மலராயின் வேறுத் தெரிசிப்பதாம்
அப்படி யன்றெனின் வேறாகக் கண்டங் கதிசயிப்பேன்
எப்படி போகு மயனுட்ட மவ்வா றிருந்ததினல்
அப்படி ஞான வனுட்டான மேலிடி லன்றறுமே. (கூ)

அன்றென லின்றென வின்றி யொளிரு மனுபவத்தால்
என்று மொருபடித் தாமெனக் கண்டன மேகமதை
என்றனை யொக்குந் திரிசிய காலத் திலாதசெவன்
அன்றறி யாதது நம்பிழை யென்று மவிருமதே. (௧0)

அவிர்வதொன் றுண்டென லென்னனு மானி வளவெண்ணிணுல்
எவருங் கணிப்பதென் தானு யிலகி யிருப்பதனை
அவப்பழக் கத்தெனி னெங்ஙனம் வந்த தனுதியினில்
எவையு மதிமயக் கன்றி யுளவோ விலையிலையே. (௧௧)

இலையென லெங்ஙனம் யாரோ வுலகா யிலாதவர்கள்
கலைவல் லவருங் கடந்தெது வானுர் கடைவரையும்
நிலையல வென்னி னிலையாகக் காண்பதென் னிற்பளவும்
மலைவா லெனினிது புத்தி விகற்பென வந்திடுமே. (௧௨)

வந்ததும் போனதும் புத்தி மயக்கே வழக்கதுண்டேல்
எந்த மதத்தரு ஞாயத்தை முன்னிட்டிங் கேற்கவுரை
இந்த வுலகப் பொருளுட லன்றோ வெவர்மறந்தார்
எந்தநா னென்று தெளிந்த விடத்துட லென்னென்பனே. (௧௩)

என்ன வதிசயந் தேக மிருக்க விலையென்பதென்
என்ன வியப்போ சுழுத்தியிற் காணு திருப்பதுடல்
அன்ன விடத்து மனமிலை யென்னி லஃதுளதேல்
அன்ன மயவுடல் காண்டலி னீயே யறிந்திசையே. (௧௪)

அறிந்தேன் மனதை யெவற்றிற்கு மூலமென் றுய்ந்தவிடத்
துறைந்தார் மனநிலை கண்டார் பரத்தி லொருவியப்புண்
டறிந்தால் மனநிலை சொப்பிர காச மஃதிழக்கில்
வெறும்விட யப்பெருக் காக மனது விளங்குமதே. (௧௫)

விளங்குதற் கைய முளதே லெவையும் விசாரித்திடில்
உளமா முடிதற் கிடமென் னெவர்க்கு மொருமையிடத்
தளராது கண்டிலி ரோமன முண்மை யனைத்தினுக்குங்
களகள வென்று கழறுது கேட்டுய்ம்மின் காமிகளே. (கசு)

காமிக ளெல்லா ரிலையுண் டெனிலயல் காண்பதெவன்
தாமய லற்று ரெனினவை யுண்மை தவிர்ந்தனர்கொல்
நாமரூ பப்பொரு ளுண்மையி னில்லென நாடலெவன்
யாமறி யச்சொலின் வானுக் ககம்புற மேற்குதுமே. (கஎ)

ஏற்றற் கிடமென் னகமென வின்றே லெவற்றினையுஞ்
சாற்றின வற்றி னணுவுள நீக்கமில் தானிருப்பேன்
தோற்றம தாகுவ தென்னோ வெவையுஞ் சொலுங்ககனத்
தாற்றத் தெளியி னவர்காம மற்று ரறுதியிதே. (கஅ)

அறுதி யலதை யறுதியென் றார்போ லறைந்ததல
நிறைஞாய மின்றி விசார வொழுக்க நெறியதின்றி
மறையுட னுத்தி யனுபவ மொத்த வழியதின்றி
அறைஞான மார்க்க மிதுவே பிறிதல வாய்ந்திடினே, (கசு)

ஆய்ந்திடு மார்க்க மறியா ரறிவென் றறிவதின்றி
ஏய்ந்த படியிசைப் பார்பசு பாச மிறையதென
மாய்ந்திட லென்னோ விசாரத் தெளிவில் வழக்கதின்றி
ஓய்ந்திடும் யாவு மறிவா முடிவினி லுண்மையிதே. (உ0)

உண்மை யெனப்படன் ஞானமொன் றேயென லுண்மையன்றே
திண்மை யலவெனி லன்றென லாகாத் திறத்ததெது
மண்குதி ரைக்கொடு வெள்ளங் கடத்தலை மானுநஞ்சொல்
நுண்பொரு ளில்லை யறிவினின் மிக்கது நோக்குமினே. (உக)

நோக்க மிரண்டி லகநாட்டம் பெற்றிடி னுண்ணறிவா
யாக்கி விளங்கு மனைத்தையு மென்ப ரறிந்திசினோர்
ஆக்கை யகமெனக் காண்பார் புறங்கண் டமைதலில்லார்
போக்கு வரவற் றதுஞான மாகுமின் போதகரே. (உஉ)

போத மணுவள வில்லீர் பெயரிது போந்தவெவன்
சோதனை செய்ததைச் சோதிக் கறியீர் சுயம்பிதெனக்
கோதெனக் காணிடு நும்முணர் வென்னோ குவலயத்தில்
வாதென்ன கண்டீ ரறிவாய் விளங்கிட வாருமினே. (உங)

வாரா திருக்கின் மனமொரு மைப்படு மார்க்கமெங்ஙன்
தீரா வழக்கா முடிந்திடு மன்றோ தெளிவதெங்ஙன்
ஆராயிற் காரண காரிய மொன்று யமைவதெங்ஙன்
பேரா வுமக்குக் குருவெனல் விட்டுய்ம்மின் பேதையரே. (உச)

பேதைய ரன்றெனிற் பொய்யே பொருளாய் பிதற்றுவதென்
யாதைப் பதிபசு பாசமென் றோர்ந்தது யாமிதுவென்
றோதியுங் காணீ ருணர்வி னளவை யுதித்தபினர்
சோதி மயமே மயமாக வெங்கணுந் தோன்றிடுமே. (உரு)

தோன்றிற் றிரிபுடி சிற்சோதி காணுத் தொடர்பதெவன்
ஊன்றிடி லெங்கே திரிபுடி யென்ன லொளியையன்றி
ஆன்ற வறிவினர் செய்கையி தாகு மயலதின்றிப்
பூன்ற வறிவா வெவையும் விளங்கிடப் போதிப்பனே. (உசு)

ஞானோதயமகிமை முற்றிற்று

ஆ சவி - ருOஎ.

## ஞானகாரவியல்பு.

போதித்தல் யாதெனி னெல்லா மறிவாம் புதுமைதனைச்
சோதித்த வண்ணம் புகலுதும் யாருந் துயரகன்று
போத வடிவின தாகத் தடைகள் புகுமெனிலோ
ஓதிடி னீக்குது ஞாயம் பிறழா துணருமினே. (க)

உணருங் கரணம் பொறியண்ட கோடி யொருபொருளோ
உணர்கிலி ரோசட சித்தென் றெவையு மொருமையெங்ஙன்
புணரு மெனிலோ கடபட ஞாயம் புகலுதும்யாங்
கணிக்கு மிகுநுண் ணுணர்வின ராகுதல் கண்டிடினே. (உ)

கண்டீர் கடபடங் காணீ ரிலையெனல் கண்ணெதிரில்
உண்டு கடபட மென்பீர் கருவி யொழித்தூரையீர்
அண்டபிண் டங்களு மிங்ஙன மேயுள தாவதெங்ஙன்
உண்டென லெல்லா மிலதா முடிவதென் றோதுமினே. (ங)

ஓதுங் கடபடச் சொற்பொரு ளூன்மண் ணுபாதியன்று
சோதனை காட்ட வுடைத்துக் கிழித்திங்கு சொல்வதுதான்
பேதைமை யன்றோ விஃதன் றியுமொன்று பேசுதும்யாம்
ஓதிடு காரண காரிய மொன்றென் றுரைக்குதுமே. (ச)

உரைக்குமண் ணன்றிக் கடமெனுங் காரிய முள்ளதின்றேற்
றெரிக்குமண் காரண மென்பதென் சொல்லே தெரிந்திலிர்கொல்
உரைத்திடு காரண காரிய மொன்றென லுண்மையன்றோ
மருட்டு மயக்கந் தெரிவன்றிக் கண்டிலம் வாய்மையிதே. (ரு)

வாய்மையி தன்றெனி லோர்படித் தாயது மண்ணதன்றோ
மாய்ந்ததும் வந்தது மன்றோ விடையின் மதிமயக்கந்
தூய்மைய தாக மதிதனைக் கண்டிடிற் றோன்மயக்கம்
மாய்ந்ததும் வந்தது மில்லாமற் போகும் வழக்கிறந்தே. (சா)

வழக்கென் றணுவின் மயக்கினு முண்மை மதியதன்றோ
இழக்கினு மொன்றிலொன் றுண்டோ மதியன்றி யிவ்விரண்டும்
ஒழிக்கா திரண்டு மதிநாட்ட மாயிடி னுற்றிடுமோ
வழக்கிலை யிம்மதி சிற்சோதி யாமெனில் வாருமினே. (எ)

வாரிதி போலப் படிக்கினு மென்னும் வழக்கறுக்கீர்
தேருமின் சொல்வதைத் தேர்ந்தாற் சகலமுஞ் சின்மயமாந்
தேருமுன் யாவும் விடய மயமெனத் தேர்ந்ததுபோல்
ஒருமி னெம்மொழி யில்லை யிதுபோ லுறுதியதே. (அ)

உறுதி யினுமுண் டுலகாதி யாவையு முண்மையதென்
றிறுதிய தின்றிக் கொளன்மயக் கங்கா ணிழந்துவிடுங்
குறியதுண் டோவெனிற் காரண காரியக் கோதகற்றும்
நெறியதுண் டன்னது செய்திடிற் செப்புவ னில்லுமினே. (கூ)

நில்லா வுலகை நிலையெனக் காணிட னீக்கும்வகை
எல்லாப் பொருளிடங் காலமே தேனு மிருப்பதெனச்
சொல்லா முடிவதென் சோதனை தன்னிற் சுயமதின்றி
எல்லாம் வெளிமயக் கேயன்றி யுண்டே லிசையுமினே. (க0)

இசைக்கப் படுமோ வெளியென் றலதை யெவரெடுப்பர்
இசைக்கில் வெளியில் பொருளிடங் காலமென் றேன்றடுப்பர்
இசைக்கப் படாவெளி லெல்லாம் வெளிமயக் கேன்றடுப்பை
இசைத்தது வாயிடி னெல்லாக் கவலையு மென்செயுமே. (கக)

என்னோ மகத்தணு வாகி மகத்தா யியைந்ததெது
சொன்னவெப் பூதமு மாரும ணிற்கச் சொலற்கரிதேல்
அன்னதுண் டோவிலை யோவுரை நின்மட மாரெடுப்பர்
இன்னதென் றோர்ந்திலன் சித்தன்றி யென்றிடி லேற்குதுமே. (கஉ)

ஏற்கிற் கரியா யறிவெவ் விடத்து மிருப்பதெவன்
நூற்படம் போலு மறியாமை தன்மே னுவலுமெனில்
தோற்குநுங் கட்சி யறிவன்றி யுண்டோ சொலுக்குரைதான்
பாற்புனற் போலினும் பேதம தாகப் பகருதுமே. (கங)

பகாசத் தாதியை யேற்கு மடமெதிர் பற்றலெவன்
நிகரில்சத் தாதியை யன்றி யறிவென னேர்வதெவன்
சகமாதி யில்லை யறியாமை யன்றித் தனித்துமுதற்
பகர்ந்தன மெல்லாம் வெளிமயக் காகப் பழுதில்லையே. (கச)

இல்லதை யுண்டெனன் மூட மதுவே யிலையெனலும்
அல்லதை யாமெனன் மூட மதுவே யலவெனலும்
தொல்லைசத் தாதி யலதசத் தாதி சுயம்பதின்றேல்
அல்லை யிரண்டென் லொன்றே யறிவென லுண்மையிதே. (கரு)

உண்மை யறிவே யறியாமை கற்பித முற்றுணரில்
திண்மைய தாக வறிந்தேன் சுருதியின் நீர்ப்பதனை
அண்மை நிலையிது வென்னிற் பரிட்சை யறிந்தனைகொல்
நுண்மையி னுண்மை யிதுவெனிற் கண்டு நுவலுமினே. (கசு)

நுவலுமெய்ஞ் ஞானப் பொருளன்றி யின்றென நுண்பொருளும்
உவமையின் ஞானச் சுருதி யளவையி னோர்ந்ததன்றி
அவல வனுபவப் பேற்றி லடியே னனுக்கிரகம்
உவந்தரு ளென்றடி வீழ்ந்து துதித்தன னுத்தமனே. (கஎ)

உத்தியொத் தன்றேற் சுருதியன் றாகு முறுமிரண்டும்
ஒத்ததன் றாயி னனுபவ மன்று மொருங்குணரச்
சித்தன்றி யின்றெனு மெய்ப்பொரு ளாகமஞ் சிந்தித்திடின்
உத்திக்கு மாறிலை யெங்ஙன மென்றிடி னோதுவனே. (கஅ)

ஓதிற் றெரிவை யொழித்துல குண்டா யுளதென்குதும்
யாது மறியாச் சடமதன் றேவெனு னெப்பொருளும்
நேதிக்கி னந்தத் தறிவா முடிவதென் னீயுணர்ந்தும்
பேதையர் போலக் கலங்குவ தென்னோ பிழைபிழையே. (கக)

பிழையா முடிவதை விட்டெது சத்தோ பிடித்திடநில்
அழைத்திடி லென்னும் விவர்த்த வழக்கை யழிகுதும்யாந்
தழைத்தெங்குந் தானு யிருப்பது சித்தே தனித்தெதிலும்
உழைத்திட னட்ட மறிவன்றிச் செல்லா தொளிருமதே. (உ0)

ஒளிர்வது திண்ண நினைப்பு மறப்பை யொழித்து நிற்கில்
எளிதி லனுபவ மெய்து மெனவே யிருந்திருந்து
வெளியொளி யாக வறிவு விளங்க விழித்துமிகக்
களிகொண் டனனிதை யென்சொல்வ னென்று கரைந்தனனே. ()

கரையிது வென்று தெளிந்தனன் மாயை கடப்பதற்கு
விரைவி லெழுந்தொறுஞ் சிற்சோதி காணிடன் மேவுமதோ
தரையாதி யெங்கே யிடமாம் வெளியினைத் தான்கருதில்
உரையா முடிந்திடக் கண்டே னவையு முறுதியிதே. (உஉ)

உறுதிய தன்றி யனுபவ மாகவு மோர்ந்தனன்யான்
இறுதி முதனடு வில்லாமை ஞானமென் றெங்கணுந்தான்
அறுதி யிதுவென் றறியா திதுகா றழிந்தனன்யான்
வறிதாக வந்தோ விழந்ததைக் கூறுவன் வன்மையிதே. (உ௩)

ஞானகாரவியல்பு-முற்றிற்று.

ஆக-கவி-௫௩0.

---

## விவர்த்தநாட்கிரங்கல்.

வன்மை யிதுபோ லிலையெங்குங் காணிடில் வாஸ்தவமாய்
இன்மையி லின்மை யிதுவன்றி யில்லை யிறுதிமட்டும்
அன்மை யெனற்கிது வித்தென லாகு மவித்தையெனல்
நன்மையி னன்மை யிதுவாக் கழித்தன னூடொறுமே. (க)

நாடும் பொருளிடங் கால மவித்தையி னண்ணுருவென்
றாடுரு விச்சென் றறியாது மெய்யென் றுழன்றுநிதம்
பாடுபட் டின்பங் கணமுநில் லாமையைப் பார்த்திருந்தும்
நாடிய தற்கே விழைந்தே யிழந்தவென் னன்மையிதே. (உ)

நன்மையென் றேநிதந் தேகத்தை நானென்று நம்பிமதித்
தன்மைய தாவதைக் கண்டு முபசரித் தல்லலையே
இன்பமென் றுன்னி யிழந்தேன் பிறவிக ளெண்ணிலிகால்
எங்குரு நாத னெனைவிளக் காவிடி லென்செய்வனே. (௩)

செய்வதெல் லாமய லென்றுண ராது தெளிந்தவர்போல்
மெய்வகை யென்றுனிக் கெட்டு மதற்கே மிகவிழைவுற்
றாய்வகை காணப் படித்து மிகவு மொழிந்ததெவன்
தெய்வத்தின் மேற்பழி போட்டு முடலகந் தேர்ந்திலனே. (௪)

விவர்த்தநாட்கிரங்கல்-முற்றிற்று.

ஆ-கவி-௫௩௪.

# சொல்வாதம்.

தேர்ந்திலன் சொல்விப ரீதஞ் சகசந் திரிவிதமா
வோர்ந்திடும் வாத மிவற்றுட்சொல் வாத முரையெனிலோ
தீர்ந்திடச் சிற்சட வாதம் வெறுமொழி தீர்ப்புசெயல்
சார்ந்த மயக்கெங் ஙனநீங்கி முத்தியைச் சாதிப்பதே. (க)

சாதித்துங் கண்டிலன் யாது பயனுஞ் சமையரைப்போல்
ஓதிப் பதிபசு பாசமென் றோர்ந்தே னுபாதிதனைப்
பேதத் திமிரந் தொலைந்தது போலப் பிதற்றினன்யான்
போதத் தினகரன் றோன்றுவ தெங்ஙனம் பொய்மயமே. (உ)

பொய்யுட றன்னை யவனவ னெனிற் புல்லுமதோ
மெய்யா வினுமிடும் பற்பல பேரும் விவகரித்தற்
கையோ சுயம்பவ பூதத்தை யன்றி யனைத்துடலும்
பொய்யிது போலப் பலநாம வாதமும் பொய்யென்பரே. (ங)

என்னென்ன நாமமு மில்லை நினைவன்றி யெப்பொருட்கும்
உன்னுத லின்றியச் சொல்வாத முண்மையென் றோதலெவன்
பன்னிடு காரண காரிய மேலாப் பதமதெங்கே
உன்னிடிற் சொல்லலங் காரம தாகு முரையென்பரே. (ச)

பரனாதி முப்பெய ருத்தேச மன்றிப் பயனதெவன்
திரஞான மன்றிப் பொருளுள தேற்பெயர் செப்புதும்யாம்
பரமப ரப்பெயர் கற்பனை தாண்டிடிற் பாவனையாம்
ஒருபெய ருந்திர மன்றெனிற் சொல்லா தொழிகுதுமே. (ரு)

ஒழியாது கற்பனை யுத்தேச மென்றிட வுள்ளளவும்
பழிபாவ மற்றிட னுஞ்சற் கருமம் பலப்படினும்
விழைவாதி மூடந் திரிபுடி தானும் விடுவதெங்ஙன்
கழிவதின் றேலிவை நாமத்தி னாற்பயன் காண்கிலமே. (சு)

இலமெய் பயனெனி லினறே யொழிகுது மெய்பெயரும்
நலம்போலக் காணினு மாறு நீ நிற்நு நலமதெனில்
அலவல வென்றே னகலுமெய் பேர்களு மாய்தலின்கண்
பலனன் றெனவிடுத் தாருண்மை ஞானியர் பாருமினே. (எ)

பாராதி தத்துவ மெல்லா மிருக்கினும் பாழ்படலால்
ஆராயி னப்பெய ரெல்லா நிலைப்பதற் காதரவென்
தேரார் துயரகன் றூரல ரெங்குஞ் சிறந்திடினும்
பேரா வழங்குதல் விட்டுண்மை காணிடப் பேணுதுமே. (அ)

சொல்வாத-முற்றிற்று.

ஆக-கவி-௫௩அ.

---

## விபரீதவாதம்

பேணிப் பெயரெவ் வகைகளு மெய்யெனப் பேதையர்போற்
காணத் திரிந்து கடைப்பட் டனமினிக் கற்குதும்யாம்
ஆணலி பெண்ணென லெப்பொரு ளான்மா வலவதனாற்
காணிடிற் பூதக் கலப்பன்றி யின்றெனக் கண்டனமே. (க)

கண்டிடு பூதமுஞ் சூக்கும பூதத்திற் கற்பிதமாம்
விண்டவிப் பூதமு மில்லை மருளன்றி வேறெங்கணும்
பண்டை மருளு மிலைமெய் யறிவன்றிப் பாழ்படலேன்
உண்டு கொலோசுயம் பாக வெதுவு முணர்ந்திலமே. (உ)

உணராப் பகடியர் நிச்சயப் பேர்க ளுறுதியதோ
துணமும் புலனன்றி யெங்கே புலனுஞ் சுழல்கரணக்
கணமன்றி யெங்கே யிதுவு முயிரன்றிக் காணிலெங்கே
உணரு முயிரு மறிவன்றி யெங்கே யுரைமயமே. (௩)

உரையாவு மெய்யல கற்பித வத்துவுக் குள்ளதனுற்
கரையின்றிக் கற்கிலென் னீதுண ராக்கடைக் கட்டறுமோ
நரைவரு முன்னர் வழக்கற லேதென நாடலறிற்
கரையின் றியதுயர்க் கென்செய் குதுமெனக் கண்டிலமே. (ச)

கண்டிடன் மெய்ப்பொருள் பொய்ப்பொருள் கண்டு களிப்பதெவன்
அண்டபிண் டங்களு மெல்லா மறிவா யழிவதனுற்
பண்டைய வாயினு மென்னு மறிவாப் பழகுவர்க்குக்
கண்டிடு மோகண மேனு முலகங் கருத்தினிலே. (௫)

கருத்தின் சுயம்பறிந் தாரயல் காணக் கருதுவரோ
தெரித்துஞ் சிறிது முணராப் பயல்போற் றெளிவதின்றிப்
பெருத்தாசை கொண்டு சுகித்து முலகைப் பிரமையுறு
தருச்சித்து மென்னுந் திரிபுடிப் பேற்றை யகற்றிலமே. (சு)

அகற்றுறு கொள்ளினு மெய்ப்பொரு ளாகா தகல்வதெவன்
சகத்தாதி மூன்றும் விசாரத்தி னந்தத்திற் சந்ததமும்
புகத்தாம் பெருத வறிவிலர்க் கன்றே புதுமையதாம்
மிகத்தாம் படித்து மவலத்தை மெய்யென மேவினமே. (எ)

மேவும் பவுதிக மல்லாத் தனுக்கள் விளைவதுண்டேல்
ஆவதென் னந்தத்திற் பூதம தாக வறிந்திருந்தும்
யாவரும் யானென தென்பது போல விருந்தவெனை
யோவலின் ஞான வடிவாக்கப் பொய்யை யொழிந்தனனே. (அ)

ஒழியா தவயவ மெய்யெனக் காணு ரொருவரில்லை
பழிபாவ மச்சஞ் சுகதுக்க மெங்ஙனம் பாழ்படுவர்
விழைவாதி யற்ற வடியவ ரென்பதும் வீணல்லவோ
ஒழியேன் மயக்கை விழியா லொழித்தன னுத்தமனே. (கூ)

உத்தேசங் கற்பனை யன்றித் தெளிந்தவ ரொருவரிலை
யுத்திக் கிடிக்கினும் வேறொன் றுமாயா வுறுதியுளார்
மத்திம ரேயன் றதமரென் றெண்ணில் வழக்குளதோ
சித்தந் தெளியா ரிவர்குரு வாக்கொளிற் றீநரகே. (௧0)

நரராதி யெவ்வுயி ரேனு முடலன்று நாட்டலெவன்
திரமாக யின்ன வுயிரெனச் சந்ததந் தேர்ந்தெங்கணும்
ஒருவன்றன் வேடத் தரசுல காகி லுறுமினையும்
ஒருவி லுடனேக் கினையுண்மை யாங்கே யொளிருமதே. (௧௧)

ஒளிநாட்டம் பெற்றோர்க் குயிர்நாட்ட மற்பம தோர்ந்திலிர்கொல்
தெளிவாகு மேக முயிரென லன்று தெரிகிலர்க்குங்
களிப்பன் றிஃதறி யாரக் கணமே கழிவதினால்
அளக்கறி யாததற் கீதே யுபாய மயலல்லவே. (௧௨)

அயலா கினுநிற்கச் சோதித்துச் சேடம தன்றதுவாய்
மலயணு வேனும் விளையாது நிற்பவர் மாதவர்கள்
சுயவடி வீதெனக் கண்டா ரயலைச் சுகமதென்னார்
இயலாதி கற்கினுந் தன்னை விளக்கா திழந்திடுமே. (௧௩)

இழவா தவரெவ ரிவ்வுல கச்சுவை யேனெனிலோ
கழியாப் பொருளெது சோதனை யாற்சகங் கண்டிலம்யாம்
ஒழியாத மெய்ப்பொரு ளொன்றே யிதனை யுணர்ந்ததனாற்
பிழையென் றொருவி யறிவா விளங்கிடப் பேணுமினே. (௧௪)

விபரீதவாத முற்றிற்று.

ஆகூ-கவி-ருரு௨.

## சகசவாதம்.

பேணுவர் யாவுஞ் சகசம தாகப் பிணக்கறுக்கார்
காணினு மெய்போல் விசாரத் திலதாக் கடைப்படலேன்
ஆணவ மீக்கொளற் கீதடை யாள மழிவதெங்ஙன்
பூணுமின் மெய்த்தவஞ் சத்தெது வென்று புலப்படுமே. (க)

புலப்படுங் கற்பிதஞ் சத்திய மாகப் புதுமையதா
அலதெவர்க் கேனுஞ் சுயம்பு விளங்கா தருத்தமென்னே
இலதா லகமுக நோக்க மறிவிற் கெனவுணரக்
கலைபல கற்றும் பயனென்ன வென்னிற் கழறுதுமே. (உ)

கழறுங் கலைகள் புறநாட்ட ஞானக் கலையுணர்ந்தும்
விழலர்க ளாவதென் சீர்வேண்டிக் கற்ற விருப்பதனால்
வழிநடப் பாரய னேக்கால் விழுவர் வகையதுபோற்
பழிபிற விக்கடல் வீழ்வ ரிதுதிண்ணம் பார்த்துய்ம்மினே. (௩)

உய்யும் வகையுணர்ந் தீருணக் கூட வுவந்துவந்து
மெய்யிது வென்றேன் விசாரஞ் சகசம் விடயமதால்
கையது நெல்லிக் கனிபோலு ஞானக் கதியதன்றோ
செய்யும் வகையறி யீர்க்கென்ன வாயோ தெளிகிலனே. (௪)

தெளிவா யிருப்பஞ் சகசம தாகத் திரிபதனை
விளிவள வுந்தனி லென்றுற் பிறப்பை விடுத்தவரார்
கிளிபோலக் கற்றனஞ் சொல்லொடு கற்பிதங் கேள்வியின்றிப்
பளபள நன்று மெமது விவேகப் பழக்கமதே. (௫)

பழக்கம தாலே சகசம தாகும் பலவிகற்பம்
வழக்கற லெங்ஙன மிங்ஙன மாயின் மறுமையினும்
அழித்திட லெங்ஙனங் காமாதி சென்ம மகற்றிடுமோ
ஒழிக்கிற் பொருளல் லவற்றைப் பொருளெனலோடிடுமே. (௬)

ஓட லெதுவெனி லொன்றையொன் ருக்கொள வுற்றமயல்
வீடென லிங்ஙனஞ் செய்யா விடத்தெனல் வீண்மொழியாம்
பாடு படலிது போலில்லை யந்தத்திற் பந்தமற
நாடுவ ருத்தம ரீதே முடிவென்று நண்ணுவரே. (எ)

நண்ணும் பிறவிப் பகுப்பள வில்லதை நாமுணர்ந்தும்
எண்ணுவ தென்னோ பிறப்பிது நாமென வெவ்வெவருங்
கண்ணிலர் போலு நமது விவேகங் கருதுமிடத்
தெண்ணுவ தென்னோ விறக்கி லென் செய்குவ மேகுமினே. (அ)

ஏகுவ தெற்றுக்குச் சான்றோ ரிடத்தென் றிகழ்ந்தவரைப்
போகம் பரத்துவ மென்றே யெவையும் பொருளெனக்கொண்
டாகம் வளர்க்கச் சகசம தாக வழிந்தனன்யான்
சோகந் தவிர்த்தெனை யாண்டான் குருபர சோதியனே (௯)

சோதனை வேண்டா மனிதப் பிறவி தொடர்ந்துமெவன்
வேதனை யுற்றுஞ் சுகமாகக் கொண்டவை மெத்தவுண்டு
ஆதர வற்ற செனனத் தொகுதி யளவிலன்யான்
ஏதெனச் சொல்லுவ னென்றுய ரையோ விதுதிண்ணமே. (௧0)

திண்ண மயக்கஞ் சகசம தாகத் திடங்கொளல்போல்
எண்ண மயக்க மிறையள வேனு மிருப்பகற்றி
நண்ணிடி லெங்கே மனனச் சலன நலிதலுடன்
கண்ணுடை யோரிவ ரேபிற ரல்லர் கருதுமினே. (௧௧)

சகசவாத முற்றிற்று.

ஆ கவி-௫௬௬.

# முடிவு நிலை.

கருதித் துணியும் வகையுரைத் தோமினிக் கற்பனைகள்
ஒருதிக் கினுமணு காவழிச் சொல்வ முறுதியதாப்
பெருகு மனுபவக் கண்ணு லுணர்தி பிறழ்தலின்றி
அரும கனேயெனச் சொல்வான் குருபர னன்பர்களே. (க)

அன்றென் பதுமல வாமென் பதுமல வப்பரந்தான்
இன்றென் பதுமல வுண்டென் பதுமல விவ்வணமோ
டொன்றென் பதுமல பல்லென் பதுமல வுன்னலெவன்
என்றிடக் கண்டன னுண்மை லுன்னி யிதயத்திலே. (உ)

இதயம் பரமா விலங்கிடக் கண்டங் கிதுவதுவென்
றெதிங்கிடக் கண்டில னைய லென்ப தறுவதுண்டோ
மதியாதி சிற்சட பேதப் பகுதிகள் வாழ்வதுண்டோ
எதுவுந் தனையன்றிக் காணமற் போக விருந்தனனே. (ங)

இருந்த விதத்தைத் திரிபுடி யுள்ளா ரெவரறிவார்
அருந்தவஞ் செய்யினு மன்னியப் பேறே யறிவதனுக்
கொருங்கு படலெவ னப்பர மாயினு முண்மையன்று
இருந்த பராமுக மெங்கே யொழிவுக் கிடமில்லையே. (ச)

இல்லென லெவ்வா றுயர்விழி வொன்றி லிருக்குமிடத்
தெல்லா மறியு மறிவுக் கறிவென லென்னமயல்
எல்லாந் திரிசியம் யாதுந் திருக்கல வென்னுயர்ந்தும்
நல்லா யிதுதிண்ண மென்றே தனதிட நண்ணினனே. (ரு)

பொருளல் லவற்றைப் பொருளாகப் பார்த்திடல் போதமதோ
பொருளைப் பொருளா விசாரித்துக் கண்டிடல் போதமதோ
பொருளிதில் யாது விழைவாதி யல்லலைப் போக்கிடுதல்
பொருளது வாகு முடிவது வாகும் புலமையதே. (௬)

சங்கரன் வாழி சதுமறை [illegible]யாது
சங்கை யகற்றி[illegible]தன்றன்
பங்கமில் [illegible] லெங்கும வாழி [illegible]தை
மங்குத [illegible] விளக்குங் குரவர்கள் வாழியவே. (௭)

MANUSCRIPTS

முடிவுநிலை முற்றிற்று.

ஆ கவி-௫௭௨

---

## பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு. | அடி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௬ | ௩0 | ௩ | னைதயறி | தனையறி |
| ௨௭ | ௯௩ | ௪ | யணருமினே | யுணருமினே |
| ௩0 | ௧0௯ | ௩ | வியாரக | வியாபக |
| ௩௧ | ௧௧௨ | ௨ | மையமிலை | கையமிலை |
| ௪0 | ௧௧ | ௨ | சான்ர்து | சார்ந்து |
| ௪௧ | ௧௨ | ௧ | சிந்தை | சித்தை |
| ௫௩ | ௧௪ | ௩ | றிறடிப்பே | றடிப்பே |
| ௫௪ | ௨0 | ௧ | நிகழ்த்துவ | நிகழ்த்துவ |
| ௯௬ | ௧0 | ௧ | தெளிந்த | தெளிந்தா |
| ௯௬ | ௧௩ | ௨ | மலயணு | மயலணு |